1477

# T.N.L.A. Debates

## Official Report

Vol. 1 No. 5

1980

DIGITIZED

DIGITIZED

D
V211,3F'N80
N81.1.5
123049

27/8/
1477

வெளியீடு 28–12–1980] [Issued 28–12–1980

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
5-10-1981


வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1980 ஜூன் 26—தொகுதி I—எண் 5
Thursday 26th June 1980—Volume I—No. 5

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

D
Y211,31 N80
N81.1.5
123049

## உள்ளடக்கம்


| | பக்கங்கள். |
|---|---|
| 1. இரங்கல் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் திரு. எம். மருதநாயகம் பிள்ளை மறைவு .. .. .. | 99 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) வினாக்கள் எடுத்துக் கொள்வது .. | 100 |
| (ஆ) உறுப்பினர் விடுதியில் உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்குதல் .. | 101—105 |
| (இ) வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும் அரிசியின் தரம் .. | 105 |
| 3. அறிவிப்புகள்— | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் நியமனம்.. | 105 |
| (ஆ) பேரவை அலுவல் குறித்து.. .. | 210 |
| 4. அரசினர் சட்ட முன் வடிவு— | |
| சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1980 .. .. .. | 106 |
| 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்— | |
| திருச்சி ஆர். செளந்திரராஜன்.. .. | 106—113 |
| திரு வி. கிருஷ்ணமூர்த்தி .. .. | 113—125 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் | 119—120 |
| டாக்டர் கே. சமரசம் .. .. | 125—131 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 127 |
| திரு. நா. சுந்தரராஜ் .. .. | 131—137 |
| வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.. | 138—142 |
| திரு. என். வரதராஜன் .. .. | 142—153 |
| திரு. ஏ. சி. சண்முகம் .. .. | 151—154 |
| திரு. இரா. கருப்பையா .. .. | 154—160 |
| திரு. த. இராமசாமி .. .. | 161—164 |
| திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் .. | 164—165 |
| திரு. கா. கோ. கிருஷ்ணசாமி .. | 166—167 |

| | |
|---|---|
| திரு. செ. இராமலிங்கம் .. | .. 167—17. |
| மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு | .. 16. |
| திரு. எஸ். டி. உகம்சந்த் .. | .. 173—176 |
| திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் | .. 176—182 |
| திரு க. பாரமலை .. .. | .. 182—187 |
| திரு பி. முகமது இஸ்மாயில் .. | .. 187—191 |
| திரு கே. எம். எஸ். சுப்பிரமணியன் | .. 191—194 |
| திரு இ. முத்துராமலிங்கம் .. | .. 194—196 |
| திரு ஜே. எஸ். இராசு .. | .. 196—204 |
| திரு சி. கோபால் .. .. | .. 204—210 |

6. அவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 210—222


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வியாழக்கிழமை, 1980 ஜுன் 26

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எத்தகைய செய்தியாக இருந்தாலும் அதனை யார் சொல்லக் கேட்டாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அல்லது இகழ்ந்து தள்ளாமல், அதன் உண்மையை ஆராய்வதே அறிவாகும்.

### 1. இரங்கல் குறிப்பு

#### முன்னாள் உறுப்பினர் திரு. எம். மருதநாயகம் பிள்ளை மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். மருதநாயகம் பிள்ளை அவர்கள் 25—4—1980 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். மருதநாயகம் பிள்ளை அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை மதுரை மாவட்டம் வட மதுரைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) வினாக்கள் எடுத்துக்கொள்வது.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, இன்றைக்குரிய அஜண்டாவிலே கேள்வி நேரம் என்று போடப்பட்டுள்ளது. ஆனால் எந்தவிதமான கேள்வி களும் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை, கேள்விகள் பற்றிய எந்தவித ஏற்பாடும் இல்லை. ஆகவே இதற்கு என்ன காரணம் என்பதை தலைவர் அவர்கள் தெரிவித்தால் நல்லது. அதுமட்டுமல்ல. நான் பல கேள்விகளைச் சட்டமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறேன். அது குறித்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே அனுபவம் பெற்றவர்கள் கேள்விகளை அனுப்பி இருக்கிறார்கள். ஆனால் அவற்றுக்குரிய விடைகள் எல்லாம் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தபிறகு அவற்றுக்குரிய விடைகள் அவையிலே வைக்கப்படும். வினாக்கள் கொடுக்க 42 நாட்களுக்குள் விடை தரலாம் என்று விதியிலே இருக்கின்றது. ஆகவே விடைகள் எதுவும் இன்னும் வந்து சேரவில்லை. இன்றைக்கு வினாக்கள் விடைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, 42 நாட்கள் என்பது ஆர்டினரி கேள்விகளுக்குத்தான். ஆனால் ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின் பல கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றையாவது எடுத்துக்கொள்கின்ற வகையில் தலைவரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின் களைப் பொறுத்தவரையில் 7 நாட்கள் என்று இருப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுகியகால வினாவைப் பொறுத்த வரையில் 7 நாட்கள் என்று இருக்கிறது. விடைகள் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தவுடனே அவையிலே எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே 7 நாட் கள் என்று விதி இருந்தாலும் விடைகள் கிடைத்துவிட்டால் சீக்கிரமாகவே எடுத்துக்கொள்கின்ற வகையிலே ஏற்பாடு செய்கிறேன். பாரளுமன்ற விதி களை கூடியவரையில் சட்டசபையிலே பின்பற்றுவதற்கு முயற்சிக்கப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவரவர்களே, வினாக்களுக்கு விடை தரு வதைப் பொறுத்தவரையில் 42 நாட்கள் என்பது விதியிலே இருக்கின்றது. ஆனால் குறுகியகால வினாவுக்கு 42 நாட்களுக்கு உள்ளேயே கொடுக்கலாம். 42 நாள்தான் என்று சொல்லி குறுகியகால வினாவையும் தள்ளி வைத்து விட்டால் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்துவிடக்கூடும். ஆகவே வினாக் களுக்குரிய விடைகள் கிடைக்காமல் போய்விடும்.



1477



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதியிலே 42 நாட்கள் என்று இருக் கின்றது. இருந்தாலும் அந்தக் கால அளவைக் குறைப்பதற்குரிய ஏற்பாடு கள் பற்றி பரிசீலிக்கலாம். ஆகவே திரு. உமாநாத் அவர்களுக்கு நான் இப் போது சொன்ன மாதிரி வினாக்களுக்குரிய விடைகளை எவ்வளவு விரைவிலே வாங்க முடியுமோ அவ்வளவு விரைவிலே வாங்கி பேரவை முன் கொண்டு வரு வதற்கு ஏற்பாடு செய்ய முயற்சி எடுப்பேன்.

### (ஆ) உறுப்பினர் விடுதியில் உறுப்பினர்களுக்கு அறைகள் ஒதுக்குதல்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, சட்டமன்ற விடுதியைப் பொறுத் தவரையில் இன்னும் பல உறுப்பினர்களுக்கு அறையே வழங்கப்படவில்லை என்பதும் அதேமாதிரி டெலிஃபோன் வசதி போதவில்லை என்பதும் பெரிய போராட்டமாகவே நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே அடிஷனல் ஆக ஒரு போர்டு போட்டு குறைந்தபட்சம் சட்டமன்றம் நடக்கக்கூடிய காலத்திலாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிஃபோன் வசதி கிடைக்கக்கூடிய அளவு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்வது அவருடைய வீட்டிற்கா ; ஹாஸ்டலுக்கா ?

**திரு. ரா. கிருஷ்ணன் :** Hostel க்கு

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இந்த தங்கும் [illegible] மாக இங்கே இருக்கக் கூடிய அனைத்து அங்கத்தினர்களுடைய அந்தஸ்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உங்கள் உதவியை வேண்டுகிறேன். அசெம்பிளி ஆரம்பித்த உடனேயே, எங்கள் எல்லோரையும் வரச்சொல்லி அறிக்கை அனுப்பப்படுகிறது. சட்டப்படி எங்களுக்கு இலவசமாகத் தங்கு வதற்கு வசதி பண்ணித் தரவேண்டியது டிபார்ட்மெண்டினுடைய கடமை. நாங்கள் எல்லோரும் வந்த பிறகு, ஒரு பகுதியினருக்கு தங்குவதற்கு ஏற்பாடு செய்வது, ஒரு பகுதியினருக்கு இல்லை என்று சொல்லிவிடுவதால், அவர்கள் தெருவில் போய் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. பிறகு அவர் களாகவே வாடகைக்கு அறைகள் ஓட்டலிலே ஏற்பாடு செய்து கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்த தகவல்படி இன்னும் 25, 26 பேர்களுக்கு ரூம் வசதி செய்து

123045

கொடுக்சப்படவில்லை. என்னுடைய பாயிண்ட், என்னவென்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறபோது தேவையான ரூம்ஸ் இல்லை என்று சொன்னால்

" We are entitled to free lodging. It is the responsibility of the Department to arrange for it for every member, who does not get a room.

ஹாஸ்டலிலே ரூம் இல்லை என்று சொன்னால், டிபார்ட்மெண்ட்தான் வாடகைக்கு ஏற்பாடு பண்ணி ஃப்ரி (Free) லாட்ஜிங் எங்களுக்கு செய்து தர வேண்டும். நாடாளுமன்றத்தில் நீங்களும் நானும் இருந்தோம். அங்கே கூட இதுமாதிரி ரூம் இல்லாத பிராப்ளம் இருக்கிறது. 'வெஸ்டர்ன் கோர்ட்டிலே டிபார்ட்மெண்ட்தான் அறைகள் அரேன்ஞ் பண்ணித் தருகிறார்கள். இது ஒன்று.

அடுத்தது, ரீ-இம்பர்ஸ்மெண்ட் பொறுத்த கேள்வி. யாரோ எம்.பி.க்கள் ரூம்களை பூட்டி வைத்திருக்கிறார்களாம். இங்கே "ஹவுஸ்" 'சிட்டிங்கில்' இருக்கும்போதாவது எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை தரக் கூடாதா; இங்கே அசெம்பிளி நடக்கும்போது, இங்கே இருக்கும் உறுப்பினர்களுக்கு இல்லாத உரிமை எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் வேறு யாருக்கு இருக்கக் கூடும்; எம்.பி.-களுக்கு இங்கே எப்படி ரூம் போட்டார்கள்? டெல்லியிலேயும் "ரூம்" புக் பண்ணுகிறார்கள். எங்கள் ஹாஸ்டலிலேயும் "ரூம்" புக் பண்ணுகிறார்கள். அப்படி ரூம் இல்லை என்றால் டிபார்ட்மெண்டே எம்.எல்.ஏ.-க்களுக்கு "ஃபிரி லாட்ஜிங்" ஏற்பாடு செய்ய வேண்டாமா? ரூம் கிடைக்காமல் வாடகைக்கு ரூம் எடுத்தவர்களுக்கு, அவர்கள் கொடுத்திருக்கும் வாடகையை ரீ-இம்பர்ஸ்மெண்ட் செய்து கொடுக்க வேண்டும். அதற்காவது தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** இப்படி அறை கிடைக்காமல் நிறைய உறுப்பினர்கள் வெளியில் தங்கியிருக்கிறார்கள். இங்கே அசெம்பிளி நடக்கும் சமயத்திலாவது எல்லா உறுபினர்களுக்கும் தங்குவதற்கும் இடம் கிடைக்க ஏற்பாடு செய்யக் கூடாதா? அங்கிருக்கும் அறைகளை யார் யாரோ பூட்டி வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு இந்த நேரத்திலாவது தங்க வசதி செய்து கொடுக்க நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஒரு அறையிலே 4 பேர் சேர்ந்திருக்கிறோம். எங்கள் 4 பேரை தேடிக் கொண்டு ஒரு நாளைக்கு 40, 50 பேர்கள் வருகிறார்கள். இப்படி எல்லா அறைகளிலேயும் நெருக்கடி ஜாஸ்தியாக இருக்கிறது. செகரட்டேரியட்டிலும் சொன்னோம் எங்கள் ஹாஸ்டலில் ரிசப்ஷனிலும் சொல்லிப் பார்த்தோம். எனக்குத்





தெரிந்து 30 அறைகளில் எல்லாம் யார் யாரோ இருக்கிறார்கள். யார் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. சட்டமன்ற தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கும் எங்களுக்குச் சட்டமன்றம் நடக்கும் காலத்திலாவது தங்கும் அறை வசதிகள் டிபார்ட்மெண்டிலே செய்து தரக் கூடாதா? உறுப்பினர்கள் ஃபேமிலியோடு வந்துவிட்டு, வெளியே நிறுத்தி வைத்திருந்தார்கள். பிறகு காலையில் ஊருக்கு அனுப்பிவைக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கிடைக்காத உறுப்பினர்களுக்கு, துரிதமாக நடவடிக்கை எடுத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் ரூமிலே 5 எம்.எல்.ஏ.-க்கள் சேர்ந்திருக்கிறோம். செண்டிரல் ஜெயிலில் தான் 7, 8 பேர் அப்படி சேர்ந்திருந்தோம். அப்படி இங்கே இருப்பது வருத்தமாக, கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, தலைவர் அவர்கள் உடனடியாக, வெளியிலே தங்கியிருக்கும் உறுப்பினர்களுக்கு ரூம் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரூம்களை பூட்டி வைத்திருக்கிறார்கள். காலி செய்யச் சொல்லியும் கேளாமல் பூட்டிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு வேறு பல ரூம்களில் பாத் ரூம் கட்டும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது முடிய ஒரு மாதம் ஆகும். இப்படி உள்ள சில குறைபாடுகள் எனக்குத் தெரியும். தெரியாதது ஒன்றும் இல்லை. ஐந்து உறுப்பினர்கள் ஒரே அறையில் சேர்ந்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படிச் சேர்ந்து இருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்று. சில நேரங்களில் இது மாதிரி ஒரு அட்ஜட்ஸ்மெண்ட் தேவைதான், என்றாலும் 30 ஆம் தேதிக்குள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வசமுள்ள ரூம்களைக் காலி பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்தாகிவிட்டது. அதனால் உங்கள் அனைவருக்கும் ரூம்கள் கிடைத்து விடும்.

ஊரிலிருந்து நிறையப் பேர்கள் பார்க்க வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் உறுப்பினர்களுடன் தங்குகிறார்கள். அந்தப் பிரச்சினையை எழுப்புவது நல்லதல்ல. அடுத்து, டெலிபோனைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கான ஏற்பாடு செய்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10).

ரீ-இம்பர்ஸ்மென்ட் பற்றி திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரீ-இம்பர்ஸ்மென்ட் பொறுத்தவரையில் எந்தச் சட்டத்திலும், விதியிலும் இடமில்லை. வசதி படைத்த சில உறுப்பினர்கள் வேண்டுமென்றால் பெரிய ஹோட்டல்களில் கூட தங்கிக்கொள்ளலாம். அதைத் தவிர்க்கமுடியாது. ரீ-இம்பர்ஸ்மென்ட் உண்டென்றால் அவர்கள் எல்லாம் கூடக் கேட்கலாம்.

**திரு. ரா. உமாநாத் :** ரீ-இம்பர்ஸ்மென்ட்க்கு ரூல் இல்லையென்று தலைவர் சொல்கிறார். செஷன் நடக்கிறபோது உறுப்பினர்களுக்கு ஃப்ரீ லாட்ஜிங் கொடுப்பதற்கு ரூல் உண்டு. That is compulsory அதன் அர்த்தம், மற்ற நேரங்களில், ஸெஷன் இல்லாத நேரத்தில் ரூம் எடுத்தால் ரூபாய் 2 வாடகை கொடுக்கவேண்டும். ஸெஷன் இருக்கும்போது ரூபாய் 2 கொடுக்க வேண்டியதில்லை. ஆக, உறுப்பினர்களுக்கு ஃப்ரீயாக ரூம் கொடுக்கவேண்டும் என்று ரூல் இருக்கிறது. அப்படி ரூம் கொடுக்க முடியவில்லையென்றால் வேறு அதற்காக அரெஞ்ச்மென்ட் செய்யவேண்டிய பொறுப்பு டிப்பார்ட்மென்டைச் சேர்ந்தது. எங்களுக்கு வாடகை கொடுக்கிறீர்களோ இல்லையோ ரூம் அரெஞ்ச்மென்ட் செய்யவேண்டியது டிப்பார்ட்மென்ட் பொறுப்பு. டிப்பார்ட்மென்ட் இடத்திற்கு ஏற்கனவே நல்லமுறையில் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். செய்யவில்லை. உறுப்பினர்கள் வாடகைக்கு ரூம் எடுத்துப் போயிருக்கிறார்கள், அவர்களுக்கு பணம் யார் கொடுப்பது? "why should the Member Pay" அது நியாயந்தானே.

ஆகவே இதை சீரியசாகக் கவனிக்கவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 30 ம் தேதி வரையில் இடம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி அவர்கள் காலி செய்தால் என்று ஒரு வார்த்தை போட்டார்கள். செய்யவில்லை என்றால் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டெல்லியிலும் அதே பிரச்சினைதான். அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்னாலிருந்தே தொடர்ந்து அங்கேயே குடியேறியிருக்கிறார்கள். சட்ட விதிப்படி ஐந்து நாட்களுக்குத்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு அறை ஒதுக்கப்படலாம் என்று விதி இருக்கிறது. அப்படியிருந்தும், ஐந்து நாட்கள் கடந்ததற்குப்



பிறகும் தொடர்ந்து அவர்கள் இருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டமன்றத் துறை சார்பாக மூன்று தடவைகளுக்கு மேல் அவர்களுக்கு நோட்டீஸ்கள் விட்டும் காலி செய்யாமல் இருக்கிறார்கள். இறுதியாக 30-ம் தேதிக்குள்ளாக கட்டாயம் அவர்கள் காலி செய்யவேண்டும் என்றும் இல்லாவிட்டால் பலவந்தமாக பூட்டை உடைத்து உள்ளே இருக்கிற சாமான்களை வெளியேற்றிவிட்டு காலி செய்யப்படும் என்று அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இ) வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் வழங்கப் பெறும் அரிசியின் தரம்.**

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பொருள் குறித்து தங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், குத்தாலம் ஒன்றியத்தில் வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற அரிசியை நான் இங்கே கொண்டுவந்திருக்கிறேன், அந்த அரிசி மனிதர்கள் சாப்பிடுவதற்கு லாயக்கானதுதானா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த அரிசியில் இருக்கிற புழுக்கள் மட்டும் செத்திருக்கின்றன. தங்களிடம் இந்த அரிசிப் பொட்டலத்தைத் தருகிறேன். அதை மனிதர்கள் சாப்பிடலாமா என்பதைத் தங்கள் மூலம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

(பொட்டலம் பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பெற்றது.)

## 3. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன் :—

1. திரு. இரா. முத்தையா.
2. திரு. கோ. விஸ்வநாதன்.
3. திரு. பெ. சு. திருவேங்கடம்.
4. திரு. உ. சுப்பிரமணியன்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

*** திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 21 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

**டாக்டர் கே. சமரசம் :** வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்—

*** திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பினைத் தந்தமைக்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

---

* 212-216 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

* 217-222 ஆம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் படிக்கப்பெற்ற ஆளுநர் உரையின் தமிழாக்கம் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



கன்னிக் காவேரி தலைநடை பயில
காவியப் புலவர் தம் நாவொலி கேட்க
எண்ணி வியக்கும் ஏறுநடைச் சோழர்—தம்
புலிக் கொடியினை பொறித்து புவியினை ஆள
வேழம் உலவும் விரிமலர் காடும்
தாழாச் சிறப்பும் தமிழ்த்தாய் நடமும்
வீழாப் புகழும் வெற்றி கொள் வீரமும்
சேரர் தம் அணியாய் செகத்தினை ஆள
சங்கம் முழங்கும் தமிழ் சிங்கங்கள் கூடும்
பங்கம் நேர்ந்திடின் பகைவரை அழித்திடும்
தங்க நிலமாய் தாய் தமிழ் வளர்த்திட்ட
மதுரையை பாண்டியன் ஆள
செந்நார் வென்று செறுக்களமாடிய
கொற்றவர் வாழ்ந்த கோடுபுகழோர்களைக்
கொண்ட—

தமிழகத்தினுடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையில் ஆளுநர் அவர்கள் அறிவித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, என்னுடைய முதல் பேச்சாக, என் இயக்கத்தின் முத்திரையைப் பதிப்பதில் ஒரு பெருமகிழ்ச்சி கொள்ளுகின்ற அதே நேரத்தில், இந்த உரையின் சிறப்பினை நாம் தெரிந்து கொண்டாக வேண்டுமென்பதையும் நான் மெத்த பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஜனநாயகப் பெட்டகமாக விளங்கும் பிரான்சு நாட்டின் சுதந்திரம் பிரகடனம் போல், புரட்சி தலைவர் அவர்களின் சோஷியலிசத் திட்டங்கள் இதிலே இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மகா மனிதனின் சகாப்தத்தில் வாழ்கிறேன் என்கிற மன நிறைவோடு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை அவையில் முன்மொழிகின்ற வாய்ப்பினைப் பெற்றதை ஒரு பெரும் பேராகக் கருதுகிறேன்.

பெத்துநாயக்கன்பேட்டை தேர்தலிலிருந்து பேரறிஞர் அண்ணா தீர்க்க தரிசியாக வளர்ந்து, உயர்ந்தவரைக்கும், அவரை ஒரு யுகமாக வழிகாட்டியாக, மக்களுக்கு ஏற்ற இயக்கமாக ஆனவரைக்கும், எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்று, அவரது கொள்கை, கோட்பாடுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பேரவையிலே அந்த ஆர்வத்தை மகிழ்வோடு எதிரொலிக்கிறேன். வழங்கப் படும் மொழி, வழக்கப் படுத்தப்பட்டிருக்கிற மொழி—ஆக, இருமொழிக் கொள்கைதான் இந்த

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1980 ஜூன் 26

அரசுக்கு என்பதிலும், அதன்வழியே 'வேற்றுமையில் ஒற்றுமை' என்கிற அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்த அரசு கொண்டிருக்கும் அசைக்க முடியாத உறுதியையும் நான் இங்கே விசுவாசத்தோடு வெளிப்படுத்திக் கொள்கிறேன். தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தை, எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே நடைமுறைப்படுத்திக் காட்டிய ஒன்றே, புரட்சித் தலைவர் அவர்களின் இந்த அரசு பெரியாரின் லட்சியங்களை நிறைவேற்றவல்லது என்பதனை முரசறைந்திருக்கிறது.

'வேலைக்கு உணவு'த் திட்டம் அமுல்படுத்தப்பட்ட நேரத்தில், அதனால ஏழைகள் பயன்பெற்றார்கள். ஆனால், இடையிலே ஜனாதிபதி ஆட்சியில் ஒரு தடை ஏற்பட்டது. மீண்டும் இந்தத் திட்டம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொடர்ந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை அறிவித்த நேரத்தில், ஏழை எளியவர்கள் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருக்கின்றது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். உழைப்பின் உயர்வை ஊருக்குச் சொல்லும்.

ஜார் மன்னன் வீழ்ந்த பிறகு ருஷ்யாவை புனருத்தாரணம் செய்த லெனின் வகுத்த புரட்சிகரமான திட்டங்களில் இதுவும் ஒன்று என்பதனை உணருகின்ற நல்ல உள்ளங்கள் இதனை நிச்சயமாக வாழ்த்தும். வரவேற்கும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் விவசாய நலக் குழுக்களை அமைப்பதென்றும், மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க புரட்சித் தலைவரின் அரசு முன்வந்திருப்பது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட கழக அரசு முனைப்புக் கொண்டுள்ளதை நிரூபிக்கும். 'வாய்ச் சொல்லில் வீரரடி' என்றான் பாரதி. ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காண்பித்துக் கொண்டிருக்கிற கழக அரசின் செயல் வீரத்தை எதிர்க் கட்சிக் காரர்கள் மனம் நிறைந்து பாராட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் கையில் அல்லாவுதீன் அற்புத விளக்கு தரப் படவில்லை. ஆனாலும், வேலைநீக்கம் செய்யப்பட்ட காவலருக்கு வேலை. பள்ளி ஆசிரியர்களை அரசுப் பணியாளராக அறிவித்தது, சிறு விவசாயிகளின் கடன் ரத்து போன்றவைகள் எல்லாம் அதிசயிக்கத்தக்க அளவில் அறிவிக்கப் பட்டு, செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு முந்திய திமு. கழக அரசில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.



1980 ஜூன் 26] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

(முற்பகல் 9-20)

காவிரியைச் சென்னைக்குக் கொண்டு வருவோம் என்றார்கள். காவிரி வந்ததா என்றால் தெரியவில்லை. நான் இதை விளக்கமாகச் சொல்ல வேண்டு மென்றால் "மாத்யூ அர்னால்டு" என்பார் சொன்ன மொழியைச் சொல்ல விரும்புகிறேன்—

'Beautiful and inegectual angel bearing in the void, its luminous ..ngs in vain.'

அதைப் போல் அல்லாமல் புரட்சித் தலைவருடைய அரசு 'எஃபக்ட்சுவல் ஏஞ்சல்' ஆக சொன்னதைச் செய்த வெற்றியோடு பவனி வந்து கொண்டிருக் கிறது என்பதை நான் வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று கித்தாப்பு அரசியலைப் பேசியவர்களை நாடு அறியும். உரிமைக்கு அவர்கள் குரல் கொடுத்தார்களோ இல்லையோ உறவுக்கு கையை மட்டுமல்ல தலையையே கொடுத்துவிட்ட பரிதாப நிலையை நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தல் நமக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டியது.

ஆனால் புரட்சித் தலைவர் அரசு நதி நீர் பங்கீடு பற்றியும், மின்சாரம், அலுமினியம் என்கிற பண்டமாற்று ஒப்பந்தத்தையும் அறிவித்து மத்தியிலே உரிமைக்குக் குரல் கொடுத்திருக்கிறது என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு செய்யத் தவறியதைச் சுட்டிக்காட்ட புரட்சி தலைவர் அரசு தயங்குவது இல்லை. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற நக்கீரர் பரம்பரை தமிழர் பாரம்பரை. அந்த வகையில் தமிழகத்திற்கு உரிய வழிமுறைகளைச் செய்ய, தொழிற்சாலைகளைப் பெருமளவில் நிறுவ, தொழிற்சாலைகளின் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் அளவுக்கு, இந்த நாட்டில் இருக்கும் பொருளாதார வீக்கத்தைக் குறைக்கும் அளவுக்கு மத்திய அரசு முன்வரவில்லை, எடுத்துக் காட்டப்பட்டது மட்டுமல்லாமல் அவற்றை யெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ற குரல் இன்றையதினம் டில்லியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

'சாவதும் தமிழுக்காய் சாகவேண்டும்—எங்கள்
சாம்பலும் தமிழ் மணம் கமழ வேண்டும்'

என்கிற தமிழுள்ளங்கள் நிறைவு கொள்ளத்தக்க அளவில் இன்றையதினம் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றினை அமைத்திட புரட்சித் தலைவரின் அரசு

அறிவித்திருக்கிறது. தமிழறிந்த உள்ளங்களும், தமிழாய்ந்த உள்ளங்களும் நிச்சயமாக இதை வரவேற்கும் என்பதில் எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அதேபோல் வளர்ந்து வரும் அறிவியல் விஞ்ஞானிகளை ஊக்குவிப்பதற்கும் அந்தவகையில் இன்றைக்கு ' சென்டர் ஃபார் அப்ரோபிரியேட் டெக்னாலஜி ' என்ற அமைப்பை தமிழகத்தில் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்திருப்பதன் மூலம் மிகப் பெரிய முத்திரையைப் பதித்திருக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மறைந்த சுயமரியாதைச் சிங்கம் பன்னீர்ச் செல்வமும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கங்கைக் கரையின் **அரசியல்** காவிரிக் கரைக்கு வரவேண்டும் எனச் சொன்னார்கள். ஆனால் காவிரியின் அரசியலை கங்கையின் காலடியில் கொண்டு போய் வைத்து எவ்வளவு பாடு பட்டார்கள் என்பது தெரியும். ஆனால் காவிரியின் அரசியலுக்கு கங்கை வரவேண்டுமென்று இன்றைக்குச் சொல்லாமல் சொல்லிக் காட்டி வெற்றியோடு இன்றையதினம் புரட்சித் தலைவர் அரசு தலைமையேற்றிருக்கிறது என்பதை நான் மெத்தப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை நான் இங்கே ஆணித்தரமாகக் கூறுகிறேன். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னால் எவ்வளவு அமைதி இன்றைதினம் நிலவுகிறது என்பதை அறிவோம். கொஞ்சம் இந்த நிலைமை மாறியிருக்குமானால் என்ன நடந்திருக்கும் என்பதற்குச் சான்றுகள் சொல்ல வேண்டுமென்றால் பல்வேறு சான்றுகளை எடுத்துக் காட்ட முடியும். ஆடாத ஆட்டங்கள் ஆடியிருப்பார்கள், பலருடைய உயிர் பறிக்கப்பட்டிருக்கும். ஏன், ஆளுங் கட்சியாக வந்த பிறகும் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் மீது குறி வைக்கப் பட்டு அவருடைய தம்பியின் உயிர் பறிக்கப்பட்டு விட்டது. கடந்த தேர்தல் காலத்தில் எத்தனை கழகக் கண்மணிகள் கொள்கையைக் காப்பதற்காக தங்களுடைய இன்னுயிரைத் தந்தார்கள், எவ்வளவு பேருடைய குருதி இந்த நிலத்தில் வடிக்கப்பட்டிருக்கிறது எத்தனை தாய்மார்கள் கண்ணீர் விட்டார்கள் என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னால் வாரியத் தலைவர்கள் எல்லாம் செயல்பட்டு வந்தார்கள். ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு இடைப்பட்ட காலத்தில் அந்த வாரியத் தலைவர்கள் உடனடியாக ராஜினாமா செய்யவேண்டுமென்று எவ்வளவு தூரம் வற்புறுத்தப் பட்டார்கள்? இந்த அரசால் அறிவிக்கப்பட்ட நல்ல திட்டங்களை அவர்கள்





நிறைவேற்றினால் எங்கே தங்கள் வாய்ப்புக் கெட்டு விடுமோ என்று அவர்கள் ராஜினாமாச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் பரமகுருவுக்கு ஏற்பட்ட நிலைமை எத்தனை பேருக்கு ஏற்பட்டிருக்கும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையிலிருந்த ஒருவரை சுற்றுலா துறைக்கு மாற்றியிருக்கிற அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சி இந்திய அரசியல் வரலாற்றிலேயே தமிழகத்திலே தான் நடந்திருக்கும் என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக—பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணினார்களே, அரசியல் **என்பது** பேசுகின்ற நேரத்திலே உள்ளத்திலே வேண்டுமானால் **வெறுப்பு இருக்கலாம்**, ஆனால் பேசி முடித்ததற்குப் பின்னால் சகோதர **பாவத்தோடு** பழகும் மனிதத் தன்மையோ இருக்கவேண்டுமென்று விரும்பினார்களே, அந்த விருப்பத்திற்கு வழி வகுக்கின்ற விதத்திலே தமிழகத்திலே புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே மக்கள் மன்றத்திற்கு வந்து சூளுரை சொல்லி தமிழக மக்களின் சார்பாக அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு இந்த அரசு மாற்றுக் கட்சிகளுக்குப் பாது காப்புத் தரும் என்று சொன்னார்கள். அவர்கள்,

We will have political amnesty.

என்று எடுத்துச் சொன்ன வாதத்தை எடுத்துவைக்க விரும்புகிறேன். இந்த அரசு செய்திருக்கிற ஒவ்வொரு சாதனையும், இந்த அரசு ஆளுநர் உரையின் மூலமாகத் தெரிவித்திருக்கிற ஒவ்வொரு பிரச்சினையும் இந்த நாட்டிலே அன்றாட வாழ்க்கையிலே உழன்று கொண்டிருக்கின்ற ஏழைக்குடிமகனுக்கும் வாழ்வு அளிக்கவேண்டுமென்ற முறையிலே தான் அமைந்திருக்கிறது. ஏதோ பேசி விட்டோம், வெற்றிபெற்று விட்டோம் நம்மை ஐந்தாண்டுக் காலத்திற்கு என்ன செய்ய முடியும் என்ற விதத்திலே செய்யவில்லை. இடைத் தேர்தல வந்தவிட்டத்தில் எங்களுக்கு வருத்தம் இல்லை. இடைத் தேர்தலிலே மீண்டும் வென்று நாங்களே மீண்டும் அதிகமான இடங்களைப் பெற்று, தமிழகத்தினுடைய ' எங்கள் தங்கம் ' புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இன்றைய தினம் இந்த அரசினுடைய தூய்மை தீக்குளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ராமனுடைய மனைவியை யாரோ சந்தேகப்படுகிறார்கள் என்பதற்காக—அந்த ராமன் முற்றும் துறந்தவனாக இருந்தாலும்

[திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்] [1980 ஜூன் 26

கூட—மற்றவர்கள் திருப்தியடைய வேண்டுமே என்பதற்காக சீதையை தீக்குளிக்க வைத்தான். அதைப்போல்தான் எங்களுடைய அரசைப் பல பேர்கள் சந்தேகிக்கிறார்கள் என்பதை உணர்ந்தவர்கள்தான் அதைக் கலைத்தார்கள் மீண்டும் தீக்குளிக்க வைத்தார்கள். இன்றைய தினம் மாசுமருவற்ற சொக்கத் தங்கமாக, சுட்டாலும் வெண்மை தருகின்ற வெண் சங்காக, புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் இந்த அரசை அமைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் என்னுடைய உரையை முடிக்கிற நேரத்திலே வடமொழியிலே உள்ள ஒரு சுலோகத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"கூஜந்தம் ராமராமேதி மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதா சாகரம் வந்தே வால்மீகி கோகிலம்"

என்று வால்மீகியைப்பற்றி ஒரு கவிஞன் சொன்னான். கவிதை என்ற மரத்திலே ஏறி 'ராமா, ராமா' என்று பாடுகிற குயிலாகிய வால்மீகியை வணங்குவோம் என்று சொன்னதைப்போல, தமிழக அரசியல் என்னும் மாமரத்திலுள்ள கிளையிலேறி "அண்ணா, அண்ணா" என் அண்ணாவின் கொள்கைகளை முழங்கும் புரட்சிக் குயில், புரட்சித் தலைவரை, மக்கள் வாழ்த்தி தமிழகம் நன்றி மறவாமல் தன்னுடைய கடமையைச் செய்து மீண்டும் அனுப்பியிருக்கிறது; தமிழக மக்கள் எந்தவிதமான அச்சுறுத்தலைக் கண்டோ, பகட்டைக் கண்டோ, பணத்தைக் கண்டோ அதிகாரத்தைக் கண்டோ பயந்துவிடவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த ஜனநாயகம் இந்த நாட்டிலே மலரவேண்டுமென்று விரும்பினார்களோ அந்த ஜனநாயகம் மலருவதற்கு, 'நாங்கள் எல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டிலே தான் இருக்கிறோம்" என்பதை ஐயந்திரிபறக் காட்டியிருக்கிறார்கள்.

ஆகவே எங்கள் அரசு தீட்டுகிற எந்தத் திட்டமாக இருந்தாலும், சொல்கிற எந்தக் கருத்தாக இருந்தாலும் அந்தத் திட்டங்கள், கருத்துக்கள் அனைத்தும் இந்த நாட்டு ஏழை எளியவர்களுக்குப் பயன்படுகின்றவையாகத்தான் இருக்கும்.

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்களை நீங்கள் யார் என்று கேட்ட பொழுது, 'I am a friend of the unfriended poor' என்று சொன்னார்கள். அதைப்போலத் தான் இன்றைய தினம் நண்பர்கள் அற்ற ஏழைகளின் நண்பராக நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை நான் மொழிந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, அதே நேரத்திலே நிச்சயம் இந்தத் தீர்மானத்தை எல்லோரும் வரவேற்பார்கள் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.



1980 ஜூன் 26] [திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய முன்னாள் அமைச்சர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை மொழிந்து பேசியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

இந்தச் சட்டமன்றம் கூடிய நேரமே சோகமான நேரம். இந்தச் சோகமான நேரத்தில் இவ்வளவு மகிழ்ச்சியாக அவர்கள் பேசியிருக்கிறார்களே என்பதைப் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய திறமையைக் கண்டு.

நம்முடைய இந்த மன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிறது. அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நடைபெற்ற தேர்தலில் பல்வேறு சூழ்நிலைகளிலே தேர்தலிலே ஈடுபட்டிருந்தாலும் அவரவர்கள் வைத்த திட்டங்களை, சொன்ன வாக்குறுதிகளை மக்கள் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்த்து வாக்களித்திருப்பார்கள் என்றே நான் நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய திட்டங்களை, நிறைவேற்றக்கூடிய திட்டங்களை, ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றக் கூடிய திட்டங்களை நாங்கள் அறிவித்தோம். அதே முறையிலேதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அதனுடைய தலைவரவர்களும் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைத்தான் அறிவித்தார்கள், அறிவித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை அமைக்க முடியவில்லை என்றாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த ஆட்சிக்கு அவர்கள் கூறிய உறுதிமொழிகளை, சொன்ன கொள்கைகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

எங்களுடைய தேர்தல் அறிக்கையைப் பொறுத்தவரையில், எங்கள் முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்சத் திட்டங்கள் வெட்டு ஒன்றாகவும், துண்டு இரண்டாகவும் இல்லை என்று கூறிவிட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரவர்கள் நிறைவேற்றக் கூடிய திட்டங்களை அறிவித்தார்கள்; நிறைவேற்றுவோம் என்று நிச்சயமாக அவர்கள்

கூறியிருக்கிறார்கள். நேற்றையதினம்கூட முதல்வரவர்கள் படித்துக் காட்டினார்களே, மறைந்த முன்னாள் இராஷ்டிரபதி திரு. கிரி அவர்கள் பாராட்டுக் கடிதத்தை வெளியிட்ட சமயத்திலேகூட, ஏழைகள், தமிழ்நாட்டிலே உள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக் கூடியவர்களுக்கு உழைப்பதுதான் என்னுடைய அரசாங்கத்தின் கொள்கை என்று சொன்னதைப் பாராட்டி எழுதிய கடிதத்தைக் கூட நேற்றுப் படித்துக் காட்டினார்கள்; (குறுக்கீடு) வாயினால் சொன்னார்கள். அது உள்ளபடியாகவே வரவேற்கத் தகுந்தது தான்.

ஐந்து கிலோ அரிசி வாங்குகிற ஏழைகளுக்கு அதிலே ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும், விலையேற்றாமல்; நான்கு கிலோ அரிசியை இப்பொழுது உள்ள விலைக்கு வாங்கினால் இன்னொரு கிலோ அரிசி இனாமாகக் கிடைக்கும்—கொடுக்கப்படும் என்று சொன்னார்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தேர்தல் சமயத்திலே என்று நான் கருது கிறேன்; சொன்னார்கள்—இலவசமாக வழங்கப்படும் என்று.

வீட்டுக்கு ஒருவருக்கு நிச்சயமாக வேலைவாய்ப்புத் தரப்படும். இது இரண்டாவது திட்டம்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற சுமார் அறுபது சதவிகிதத்தினருக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அளிக்கப்படும். இது மூன்றாவது திட்டம் பட்டதாரிகள் வேலை வாய்ப்புப் பெறுகிற வரையில் மாதந்தோறும் அவர்களுக்கு ஐம்பது ரூபாய் உதவி மான்யம் கொடுக்கப்படும். இது நான்காவது திட்டம்.

எல்லா விவசாயிகளுடைய கடனும் உடனடியாக ரத்து செய்யப்படும். இதில் ஆலோசிக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. வழிவகை காணப் படும் என்ற "நழுவல்" உறுதிமொழிக்கு மாறாக திட்டவட்டமாக சுமார் முன்னூறு கோடி ரூபாய் கடனும் ரத்து செய்யப்படும்.

இந்தத் திட்டங்கள் மிக முக்கியமான திட்டங்கள், மற்ற திட்டங்களை நான் சொல்ல விரும்பவில்லை இப்படிப் பல உறுதிமொழிகளை முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில், தேர்தல் கூட்டங்களிலே எடுத்துரைத்து, அவருடைய கட்சி ஏடுகள் உட்பட எல்லா ஏடுகளிலும் அவைகள் வெளி வந்துள்ளன. அவைகளை நான் இங்கே மீண்டும் ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். நான் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமே இருக்காது. காரணம், முதலமைச்சரவர்கள் சொன்னதைச் செய்யக்கூடியவர். இந்த, சொன்ன,



உறுதிமொழிகளை, நிச்சயமாகக் காப்பாற்றுவார்கள், நிறைவேற்றுவார்கள், அதிலே கொஞ்சங்கூட சுணக்கம் காட்டமாட்டார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் நம்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இந்தத் திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தமிழகத்திலே உள்ள மக்களுக்கு, நிறைவேற்றுவதற்கு எந்த விதமான பாதகமும் இல்லாமல் குறுக்கீடு இல்லாமல் இருப்போம் என்பதனையும் முதன்முதலிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டங்கள் மிக நல்ல திட்டங்கள். இவை சாதாரணமாக, தேர்தல் சமயத் திலே சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு மறந்து விடுகின்ற திட்டங்கள் அல்ல. நன்றாக ஆலோசித்து அதற்குப் பிறகுதான் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்கள் சொல்லி இருப்பார்கள் என்று இந்த நாட்டிலே உள்ள மக்கள் அத்தனைபேரும் நம்புகின்றார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாகக் கூடாது. சொன்ன திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுங்கள். அப்படி நிறைவேற்றுவதற்கு மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற சமயத்திலே நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம், தயவு செய்து அவைகளை நிறைவேற்றுங்கள் என்று மட்டும்தான் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அவைகளிலே சிலதை எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அந்தச் சிலது என்று சொல்கின்ற சமயத்தில், விவசாயிகள், விவசாயிகளுடைய பிரச்னைகள், அவைகளைப் பற்றி எடுத்துச் சொல்வது சரி என்று நான் கருதுகிறேன். தேர்தல் முடிந்தது, மந்திரிசபை அமைக்க இருக்கின்றார்கள். அமைப்பதற்கு முன்னதாகவே, ஜூன் மாதம் 8 ஆம் தேதி, நம்முடைய ரெவின்யூ அமைச்சராக இருக்கக்கூடிய திரு. சோமசுந்தரம் அவர்கள் கும்ப கோணத்திலே பேசியதாக 'மக்கள் குரலிலே' வெளிவந்தது—எங்களுடைய பத்திரிகையிலே அல்ல. நாளும் உங்களையே ஆதரித்து, நீங்களே ஆட்சிக்கு வரவேண்டுமென்று பாடுபடக்கூடிய 'மக்கள் குரல்' உங்களுக்கு விரோதமான செய்தியைப் போடாது என்று நான் கருதுகிறேன். 'மக்கள் குரலிலே' சொல்லியிருக்கிறார்கள், விவசாயக் கடன்கள் பற்றி குடந்தையிலே, நம்முடைய ரெவின்யூ அமைச்சராக இருக்கக்கூடிய திரு. சோமசுந்தரம் அவர்கள் பேசிய பேச்சைப்பற்றி. அந்தத் தலைப்பை மட்டும் படித்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். 'எம்.ஜி.ஆர். பதவியேற்றதும் விவசாயிகள் கடனை ரத்து செய்வோம். விவசாயிகள் கட்ட வேண்டிய ஏறத்தாழ 200 கோடி ரூபாய் கடனை புது அரசு ரத்து செய்யும்'. இவை அமைச்சர் பதவிப் பொறுப்

பேற்பதற்கு ஓரிரு நாளைக்கு முன்பாக, ஒருசில தினங்களுக்கு முன்பு, இப்போது நம்முடைய ரெவின்யூ அமைச்சராக இருக்கக்கூடியவர், வெளியிட்டுள்ள பிரகடனம். ஒருவேளை, அந்தச் சந்தர்ப்பத்திலே முதலமைச்சரைக் கலந்துதான் சொன்னாரா, அல்லது கலக்காமல் சொன்னாரா என்பது எனக்குத் தெரியாது, விளக்க வேண்டியவர்கள் அவர்கள்.

ஆனால், அமைச்சரவை அமைக்கப்பட்டதற்குப் பின்பு மந்திரிசபை கூட்டம் நடக்கிறது, அக்கூட்டம் நடந்ததற்குப் பிறகு, பத்திரிகை நிருபர்களிடத்திலே சில அறிவிப்புகளை வெளியிடுகிறார்கள். இந்தக் குறிப்பிட்ட பிரச்னைப்பற்றி சொல்கின்ற சமயத்தில், ஏழையிலும் ஏழையாக இருக்கக்கூடிய விவசாயிகள் பட்ட கடன்களை இந்த அரசு ரத்து செய்வதற்கு மத்திய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தும். மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு அவைகளை ரத்து செய்ய முயற்சி எடுக்கும், என்றார்கள். இது தேர்தலுக்குப் பிறகு, மந்திரிசபை அமைக்கப்பட்டதற்குப் பிறகு, வெற்றி பெற்றதற்குப் பிறகு, பேசுகின்ற அல்லது சொல்லுகின்ற பத்திரிகைக் குறிப்பாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், நாங்கள், ஏற்கனவே நான் சொன்னதைப் போல், எதை நாங்கள் செய்வோமோ அவைகளைச் சொல்வோம். எதை எங்களால் செய்ய முடியாதோ, அவைகளைச் சொல்லுகின்ற பழக்கம் எங்களுக்கு இல்லையென்று நான் ஏற்கனவே சொன்னேன்.

1½ ஆண்டுக் காலத்திற்கு முன்னதாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள், கோட்டையிலே தான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் புலவர் கோவிந்தன் அவர்களும் அதிலே கலந்து கொண்டோம். எல்லாக் கட்சிகளுடைய விவசாயத் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசினார்கள்.

(முற்பகல் 9-40)

அந்தச் சமயத்தில் நான் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அந்தச் சமயத்தில் விவசாயிகள் சொன்னார்கள். வரிகொடா இயக்கம் பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய தலைவர். கழகத்தின் தலைவர் அவர்கள் திருச்சி சென்றிருந்தார்கள். பத்திரிகை நிருபர்களோடு அந்தச் சமயத்தில் பேசுகின்ற நேரத்திலும் சொன்னார்கள், எந்த அரசாங்கமாக இருந்தாலும், வரி இல்லாமல் ஆட்சி நடத்த எவ்வாறு முடியும். அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த



அரசாங்கமாக இருந்தாலும் சரி, வரி இல்லாமல் நடத்த முடியாது. வரிகொடா இயக்கம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒத்து வராத கொள்கை அதை என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆதரிக்காது என்று தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்திலே அதைத்தான் எடுத்துச் சொன்னேன். அப்போது அவர்கள் அதற்கு நன்றி கூறினார்கள். ஆனால் தேர்தலுக்கு முன்பாக நீங்கள் சொன்னீர்களே, விவசாயிகளுடைய கடன்களை எல்லாம் ரத்து செய்வோம். அது 300 கோடி ரூபாயாக இருந்தாலும் ரத்து செய்வோம், 200 கோடியாக இருந்தாலும் ரத்து செய்வோம், என்று சொன்னீர்கள். நீங்களும் 2 ஆண்டுகள், 2½ ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து இருக்கிறீர்கள். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு கடன்கள் இருக்கின்றன என்றும் தெரியும். ஆனால் அவற்றை எவ்வாறு ரத்து செய்வது . ரிசர்வ் பாங்கு ரத்து செய்யுமா ? அல்லது மத்திய அரசாங்கம் கொடுக்குமா ? அல்லது நாமே நாசிக் பிரின்டிங் பிரசின் பிராஞ்சை திறந்து வைத்து, அதன் மூலமாக ரத்து செய்துவிடலாம் என்று நினைக்கிறீர்களா? நீங்களே முடிவு செய்யுங்கள். ஆனால் சொன்னீர்கள். பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. நேற்றையதினம் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னுடன் 3 முறைகள் முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்போது அவர் முதலமைச்சராக இல்லாவிட்டாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மூன்று முறை பார்த்துப் பேசினார். விவசாயிகள் கடன்கள் அத்தனையும் ரத்து செய்து விடுவோம் என்று உறுதி மொழி தந்தார். ஆனால் இன்றைய தினம் ஏழைகளுடைய கடன்கள் மட்டும்தான் ரத்து செய்யப்படும் என்று சொன்னால், என்ன நியாயம். யார் ஏழைகள். எல்லா விவசாயிகளுடைய கடன்களும் ரத்து செய்யப்படவேண்டும் என்று நாராயணசாமி நாயுடு அவர்கள் பேசினார். பணம் கட்ட முடியாதவர்கள் எல்லோரும் ஏழைகள்தானே. நீங்கள் சொன்னமாதிரி எல்லாக் கடன்களையும் ரத்து செய்யவேண்டுமே தவிர வேறல்ல. ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை மக்களுக்கு நிறைவேற்றுவீர்களா என்றால் அது வேறு விஷயம். நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை, 200 கோடி ரூபாய், 256 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்வீர்கள் என்று நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அதற்காக எந்த வரியிலும் திராவிட முன்னேற்றக் கழகம் குறுக்கே நிற்காது என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : I am initiating the discussion and I may take a little time

மொத்த இருக்கக்கூடிய கடன்கள் எவ்வளவு என்று ‘இந்து’ப் பத்திரிகையிலே சில நாட்களுக்கு முன்னதாக வந்தது.

“How effective Co-operative Bank credit for rural growth”

திருச்சியிலே இருந்த ஸ்டாப் ரிப்போர்ட்டர் எல்லா புள்ளிவிவரங்களையும் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை கோடி ரூபாய்கள் மொத்தமாக விவசாயிகள் கடனாக வைத்திருக்கிறார்கள், விவசாயிகள் நிலவள வங்கிகளுக்கு மட்டும் எவ்வளவு கடன் இருக்கிறது என்பதை சொல்லி யிருக்கிறார்கள்.

Total outstanding as on June 30 1979 is Rs. 144 crores

நில்வள வங்கிக்கு மட்டும் 144 கோடி ரூபாய்கள், நிலுவையிலே வசூலாகாமல் பாக்கி இருப்பதாக கூறுகிறார்கள். அதேபோல், கூட்டுறவு சென்டிரல் பாங்க் கடன்கள்

The total outstanding of Central Banks as well as L.D. Banks is Rs. 138.17 crores. (Overdue position as on date).

சென்டிரல் பாங்கைப் பொறுத்தவரையில், 130 கோடியே 17 இலட்சம் ரூபாய் ஓவர்-டியு பொசிஷன், இன்றையதேதி வரையில், என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசாங்கத்தில் நீங்கள் இருக்கிற காரணத்தால், அந்தப் புள்ளி விவரம் சரியா அல்லது அதற்கும் அதிகமாக இருக்குமா என்பது தெரியும். எனக்குத் தெரியாது. ஆக மொத்தத்தில் இருக்கும் கடன்கள்

Total outstanding of the Central Bank as well as L.D. Banks as on date is Rs. 256 crores.

இந்த அளவிற்குக் கடன் இருப்பதாக பத்திரிகை குறிப்பிலே, அதிலும் “இந்து” போன்ற பத்திரிகை குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நான் முதலமைச்சர் அவர்களை மீண்டும், மீண்டும் பணிவோடு கேட்டுக்கொள்வது எல்லாம்—நீங்கள் விவசாயிகளுக்கு உதவக் கூடியவர்கள், நீங்கள் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் தான் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை 2-3 முறை சென்று சந்தித்து இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கை வீண்போகாமல் விரைவாகவும், வேகமாகவும் அந்தக் கடன்களை ரத்து செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஜூலை 5-ம் தேதி பேரணி நடத்தப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பேரணியில் சுமார் 10 லட்சம் பேர்கள் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது. அந்தப் பேரணி நடப்பதற்கு இன்னும் கிட்டதட்ட 10 நாள் இருக்கிறது. ஒரு நபர் சென்னைக்கு வருவது என்றால் குறைந்தபட்சம் 10





ரூபாய் செலவாகும் என்று சொன்னால், கிட்டத்தட்ட 10 லட்ச ரூபாய் செலவாகும். ஆனால் ஒரு நபர் ரூபாய் 50, ரூபாய் 40 என்று செலவு செய்யாமல் சென்னை வரமுடியாது. அவ்வளவு ரூபாய் செலவு செய்து அவ்வளவு பேர் வரவேண்டியது அவசியம்தானா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு நான் ஒரு தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் என்ன செய்கிறோம், அல்லது செய்யவில்லை என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், நாங்கள் என்ன தான் பதில் சொன்னாலும், அந்த ஜூலை 5-ம் தேதி நடைபெற இருக்கிற பேரணி “தியாகிகள் தினம்” என்ற பெயரில் நடத்தப்பட இருக்கிறது. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது வேறு. நாங்கள் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் கூட அவர்கள் அதனை நடத்துவதாக இருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நேற்றைய தினம் உதகமண்டலத்தில் அந்தப் பேரணி எதற்காக நடத்தப்படுகிறது என்பது குறித்து பேசியிருக்கிறார்கள். அது குறித்து ‘மெயில்’ பத்திரிகையில் செய்தி வந்து இருக்கிறது.

“Ooty Farmers Rally in Madras on July 5 “ Mr. Naidu said Chief Minister M. G. Ramachandran, who called on him thrice before the Assembly elections, had given an assurance that the All India Anna DMK would write off the farmers debts due to the Government if the party was voted to power. But after coming back to power Mr. Ramachandran has forgotten his assurance.”

என்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

“Nobody on earth can put down this agitation once it is launched declared Mr. Naidu, while inaugurating the Farmers' Association at Kothagiri in Nilgiris district recently”

ஆகவே, அவர்கள் நடத்துவது ‘தியாகிகள் தினம்’ அல்ல. நீங்கள் கடன்களை ரத்து செய்கிறோம் என்று சொன்னீர்களே, அதை ரத்து செய்யுங்கள் என்று சொல்வதற்கு ஊர்வலம் நடத்தப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் என்னிடத்தில் இதை நேரில் சொல்லவில்லை. ‘மெயில்’ பத்திரிகையில் போட்டுள்ள செய்தியை நான் இங்கே குறிப்பிடுகிறேன். ஆகவே, நீங்கள் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றித் தரவேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, நீங்கள் பதவி ஏற்பதற்கு முன்பாக வருவாய்த் துறை அமைச்சர் சொல்லிய உறுதிமொழியை நீங்களே காப்பாற்றவில்லை என்றால் அவர்களுடைய கதி என்ன ஆவது, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் பேசிவிட்டு வந்து இருக்கிறார்கள். பெயரே கும்பகோணம் —அங்கே பேசிவிட்டு வந்து இருக்கிறார்கள். அந்த இடத்தில் பேசிய வார்த்தையும்—(குறுக்கீடு) குடந்தையில் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேசியது கும்பகோணத்தில் என்று சொல்வதில் தவறு இல்லை. அதற்கு அழுத்தம் கொடுத்து சொல்வது சரியல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கும்பகோணம் என்பது நல்ல பெயர். கும்பகோணத்தில் பேசிய பேச்சும் கும்பகோணத்துப் பேச்சா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரே கும்பகோணம் என்பதால் தான் திரு. கிட்டப்பா அவர்களுக்குக் கோபம் வந்தது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அந்த ஜூலை 5-ம் தேதி நடக்க இருக்கும் விவசாயப் பேரணி எவ்வளவோ லட்ச ரூபாய் செலவில் நடத்தப்பட இருப்பதை நிறுத்துங்கள். உங்கள் பேரணி தனி, பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து, எல்லோருமே வாருங்கள், கஷ்டப்படாமல் வாருங்கள். டீ குடிக்காமல் வாருங்கள் என்று போடுவீர்கள், உங்கள் பாணியே தனி. அது வேறு விஷயம். ஆனால் விவசாயிகள், இங்கே கலப்பை, டிராக்டர் எடுத்துக்கொண்டு எல்லா மாவட்டங்களில் இருந்தும் வருவது என்றால் அது எத்தகைய சிரமமான காரியம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

அது ஏன் வரவேண்டும்? நீங்கள் கடனை ரத்து செய்துவிடுங்கள். 5-ந் தேதிக்குள் ரத்துசெய்துவிட்டால் அதற்குத் தேவையிராது. தமிழ்நாட்டு விவசாயிகள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததும் இவைகளை எல்லாம் செய்யும் என்று எதிர்பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால் நாராயணசாமி நாயுடு அவர்கள் நீங்கள் பேசிய உறுதிமொழிகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக இவைகளைச் சொல்கிறாரே தவிர வேறு ஒன்றுமல்ல. இன்னும் 10





நாளில் அல்லது இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக இவைகளை ரத்து செய்துவிட்டோம் என்று அறிக்கை விட்டால் அந்தப் பேரணி தேவை இல்லை. விவசாயிகளுக்கும் தொல்லை இல்லை; பணமும் செலவாகாது, அவைகளைச் செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சாரம். மின்சாரத்தை கடைசியாக வைத்துக்கொள்கிறேன். இந்த கவர்னர் உரையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். 'நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்றது எனது அரசு' என்று சொல்லியிருக்கிறார்கள். இது நம்முடைய கவர்னர் அரசு அல்ல; புரட்சித் தலைவர் அரசு (ஆளும் கட்சினர் கைத்தட்டல்) தட்டலாம். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்ற அரசு—இதில் என்ன நேர்மை இருக்கிறது? அத்திப் பழத்தைப் பார்த்தால் நன்றாக இருக்கிறது. புட்டுப் பார்த்தால் அதில் புழுப் புழுவாக இருக்கிறது.

நீங்கள் சுமார் இரண்டரை ஆண்டுக் காலம் ஆட்சி செய்தீர்கள். அந்த ஆட்சியில் பார்த்தால் இந்த நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்ற அரசு என்று சொல்ல இடம் இருக்கிறதா? ஒன்றிரண்டை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். முதலிலே முதலமைச்சருடைய வீட்டுவாடகைப் பிரச்சனை. அவர் வாரி, வாரி வழங்கிய வள்ளல்; கொடுத்து, கொடுத்து சிவந்தது அவருடைய கரங்கள். அப்படிப்பட்டவருக்கு இந்த 45,000 அல்லது 50,000 ரூபாயை வாங்கித்தான் ஆகவேண்டுமா? எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் கேட்டார்கள் என்று சொன்னார். அவர்கள் வேறு, நீங்கள் வேறா? எல்லோரும் ஒரு 'ஃபாமிலி' தானே அப்படி இருக்கும்போது ஏன் இந்த நிலை? இது ஒரு சாதாரண விஷயம்.

அடுத்தபடியாக மருத்துவக் கல்லூரி அட்மிஷன். அட்மிஷன் எல்லாம் முடிந்த பிறகு சில பேர்களை உள்ளே நுழைத்தார்கள். யார் அதற்குப் பொறுப்பு? அந்தப் பிரச்சனை எப்படியெல்லாம் வந்தது? சீல் போட இடம் இல்லாமல் எந்த இடத்தில் போட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். வீட்டுவாடகைப் படியிலிருந்து, மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் இருந்து—இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு நேரம் இல்லை. அதனால் சுருக்கமாக, ரத்தின சுருக்கமாகச் சொல்கிறேன். சினிமா கொட்டகை. வீட்டுவாடகை, பஸ்காரர்கள், இப்படி ஒவ்வொன்றாகச்

சொல்லிக்கொண்டே போகலாம். நான் அதையெல்லாம் விட்டுவிட்டு, கடைசியாக இந்த கப்பல் வாங்குவதில் ஏற்பட்ட ஊழல் போத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட்டு, உட்காருகிறேன்.

ஒரு பெரிய கப்பல் தொங்கிக்கொண்டிருக்கிறது மவுண்ட் ரோட்டில். அது எப்போது எவன் தலையில் விழும் என்று தெரியாது. வருவோர், போவோர் எல்லாம் அதைப் பார்க்கிறார்கள். 4½ கோடி ரூபாய்க்கு பல்கேரியா கப்பல் என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்த விவகாரம் தெரிந்தவர்களுக்குத் தெரியும்; மற்றவர்களுக்கு கவலை இல்லை. 'ஏரோப்பிளேன்' மாதிரி அந்தக் கப்பல் அங்கே தொங்குகிறது. அந்தப் பிரச்சனையைப் பற்றி இங்கே பேசும்போது நான் சட்டசபையில் இல்லை. எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற எங்களுடைய கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதாரப்பூர்வமான ரிக்கார்டுகளை, ஃபைலின் நகல்களை எல்லாம் எடுத்து வைத்தார்கள். அது என்னாயிற்று, வழக்கு மன்றத்திலே யாரோ ஒருவன் கேஸ் போட்டால் போதுமா? நிரூபிக்க வேண்டாமா? சீதை கற்புடையவள் என்று எல்லோருக்கும் 'ப்ரூவ்' பண்ணி ஆகவேண்டும். சீதை கற்புடையவள் என்று இராமனுக்குத் தெரியும். ஆனால் இராமனுக்கு மட்டும் தெரிந்தால் போதாது; உலகத்திலுள்ளவர்கள் எல்லாம் அதை நம்ப வேண்டும். ஜனகன் புதல்வி ஜானகி குற்றமற்றவள் என்பதை அனைவரும் அறிவதற்காக அக்கினிப் பரீட்சை நடத்தினார்கள். நீங்கள் என்ன பரீட்சை நடத்தினீர்கள்? எங்கள் கட்சித் தலைவர், ஒரு நீதிவிசாரணை நடத்துங்கள், சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டார்கள். உடனே நீங்கள் தயார் என்று சொன்னீர்கள்; சுப்ரீம் கோர்ட் நீதிபதியை வைத்து விசாரணை நடத்த நாங்கள் தயார் என்று சொன்னீர்கள்.

ஆனால் அதோடு சரி, என்ன ஆனது? ஜட்ஜ் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தனியாக ஒரு ஜட்ஜ் கொடுக்க முடியாது என்று யார் சொன்னார்கள்? திரு. சரண்சிங் அவர்கள் சொன்னார்கள். அவர் யார்? உங்களுடைய ஆதரவிலே மத்திய அரசை அமைத்திருந்தவர். ஆகவே சரண்சிங் ஆட்சி என்றால் அது உங்களுடைய ஆட்சித்தான். நீங்கள் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் என்ன வித்தியாசம்? ஒன்றுமில்லை. ஆகவே அவர்கள் அப்போது இல்லை என்று சொல்லிவிட்டார்கள். சரி, இப்போதாவது அதைச் சொல்லுங்களேன். அந்த அக்னிப் பரீட்சையை நடத்திப் பாருங்களேன்.



பால்டிகா கப்பல் விவகாரத்திலே பல கோடி ரூபாய்க்கு ஊழல் என்பது புகார். அது கை மாறி இருக்கிறதா அல்லது மாற்றுவதற்கு முயற்சிக்கப்பட்டதா? அல்லது அதிகாரியின் தப்பா, என்ன நடந்தது? அப்போதிருந்த அதிகாரி தான் போய்விட்டார். இன்னொரு அதிகாரி இருக்கிறார். ஆகவே இதிலே யார் மீது தப்பு என்பதற்கு அக்னிப் பரீட்சை செய்து பாருங்களேன். ஆகவே இதற்கென்று தனியாக ஒரு ஜட்ஜ் வந்தால்தான் சௌகரியமாக இருக்கும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதற்காக இங்கேயே ஒரு ரிசலுஷன் கொண்டுவாருங்கள்

"This Government resolves to constitute a Commission of Enquiry presided over by a Supreme Court Judge, pertaining to the transaction or purchase of Baltica ships or Bulgarian ships of the alleged scandal".

ஸ்கேண்டல் என்று கூடச் சொல்லவில்லை. அல்லெஜ்ட் ஸ்கேண்டல் என்று தான் சொல்கிறேன். ஆகவே அது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் ஜட்ஜை வைத்து ஒரு கமிஷன் ஆஃப் என்கொயரிக்கு ஏற்பாடு செய்து விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள். அதற்குப் பிறகு இப்போது இருக்கக்கூடிய பிரதம அமைச்சர் அவர்களிடத்திலே, கமிஷன் ஆஃப் என்கொயரி வேண்டுமென்று நாங்களே ஒரு தீர்மானம் கொண்டுவந்துவிட்டோம், ஆகவே எப்படியாவது ஒரு ஜட்ஜ் அனுப்பி வையுங்கள் என்று கேளுங்கள். இதுபற்றி விசாரிப்பதற்கு 2 மாதமோ ஒரு மாதமோ 15 நாட்களோ எப்படியோ இதுபற்றி ஒரு முடிவுக்கு வந்தால் அந்த முடிவிலே நீங்கள் தூய்மையானவர்கள், நீங்கள் நியாயமானவர்கள், நீங்கள் நியாயமாக நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்தால் நான் தலைவணங்கி அந்த முடிவினை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஏற்றுக்கொள்கிறேன்.

அந்த அக்னி பரீட்சையை நீங்கள் செய்தாக வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால் உங்களைப் பற்றி ஊரிலே பேசிக்கொள்ளத்தான் செய்வார்கள். ஏதோ மக்கள் வாக்களித்துவிட்டார்கள், ஆட்சிக்கு வந்து விட்டோம், ஆகவே அக்னி பரீட்சை முடிந்துவிட்டது என்று மட்டும் தயவு செய்து சொல்லாதீர்கள், மக்கள் எவ்வளவு பேர்கள்? 92 இலட்சம் மக்கள் 12 கட்சிகளுக்கு வாக்களித்திருக்கிறார்கள். 82 லட்சம் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் மூன்று கட்சிகள் சேர்ந்து அமைத்த கூட்டணிக்கு வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே எண்ணிக்கையிலே அதிகமாக வந்துவிட்ட காரணத்தால் அனைத்தும் நியாயமாக மாறிவிட்டது என்று கருதிக்கொள்ளாதீர்கள்.

அடுத்து மின்சாரம் சம்பந்தமாக கவர்னருடைய உரையிலே சொல்லி இருக்கிறார்கள். "Power for Aluminium—Kerala plea to Delhi" அது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கடிதம் எழுதப் போகிறேன் என்று சொன்னார்கள். அந்த பார்ட்டர் பிரகாரம் அவர்கள் மின்சாரம் கொடுத்தால் பதிலாக அலுமினியம் கொடுப்பதாக ஏற்பாடு. அலுமினியம் எவ்வளவு என்றால் 3 ஆயிரம் டன் மாதத்திற்கு. இங்கேயே ஜெனரேட்டர் மூலம் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தினால், இங்கே எஃபிசியன்சியை அதிகப்படுத்தினால் அந்த மூவாயிரம் டன் அலுமினியமும் தமிழகத்திற்கே கிடைக்குமே, அதை வைத்து தமிழ் நாட்டிலே எவ்வளவு தொழில்களை ஏற்படுத்தலாம் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். மத்திய அரசு தொழில்களுக்கு முதலீடு செய்வதில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 4 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று சொல்லிக்கொள்கிறீர்களே, அந்த அலுமினியம் தமிழ் நாட்டிற்கே கிடைக்க ஏற்பாடு செய்தால் தொழில் வளத்தைப் பெருக்கலாமே. பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூட அங்கே போய்ப் பார்த்திருப்பார்கள். அந்த மாநிலத்திலே எங்கே பார்த்தாலும் 10 பேர், 15 பேர் என்று சேர்ந்து காட்டேஜ் இண்டர்ஸ்ட்ரீஸ், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்ற வகையிலே அதிகமான சிறு தொழில்களை நடத்தி வருகிறார்கள். அங்கே பெரிய தொழில்கள் அதிகமாக இல்லை. சிறு தொழில்கள்தான் அதிகமாக இருக்கின்றன. ஆனால் இங்கே நீங்கள் சரியாக செயல்படாத காரணத்தால்தான் தொழில்வளம் சரியாக இல்லை. இன்னொன்று பார்ட்டர் என்று சொல்கிற ஸிஸ்டம். அந்த பார்ட்டர் ஸிஸ்டத்தை

(முற்பகல் 10-00)

என்கரேஜ் பண்ணக் கூடாது; என்னைப் பொருத்தவரையில் அது என் கருத்து. அலுமினியத்தைப் பொறுத்த வரையில் டிஸ்டிரிபியூஷன் செய்வது பூராவும் மாநில அரசுக்கு வேண்டும் என்று கேளுங்கள். இதிலே மத்திய அரசாங்கம் தலையிடக் கூடாது என்று சொல்லுங்கள். அதற்கு நாங்கள் ஒத்துழைக்கிறோம். மாநில அரசாங்கத்திற்கு அவர்களுடைய கையை பலப்படுத்துவதற்கு நாங்கள் உறுதி கூறுகிறோம். ஆனால் டிஸ்டிரிபியூஷன் செய்வது மத்திய அரசாங்கத்திடத்திலே இருக்கிற சமயத்தில், அதை பிரைவேட் டிரான்ஸாக்‌ஷனாக செய்வதற்கு ஒரு ஸ்டேட்டுக்கு அனுமதித்தால், பல இடங்களில் இப்படி கேட்பார்கள். நான் கரும்பு விவசாயம் செய்கிறேன். கரும்பை வெட்டி ஆலையில் கொடுக்கிறேன். சர்க்கரையை பூராவும் என்னிடம்



கொடுத்து விடுங்கள் என்றால் என்னிடம் கொடுத்து விடுவார்களா? நீங்கள் வாங்கி கொடுப்பீர்களா? சர்க்கரை விநியோகம் செய்யக் கூடிய உரிமை மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. அப்படி இருக்கிற காரணத்தினால் தான் மாநில அரசாங்கத்திடம் அந்த உரிமைக்காக பாடுபடுங்கள். அதிலே நாங்கள் கை கொடுக்கிறோம். அதிலே முடியவில்லை என்றால் (மணி அடிக்கப் பெற்றது) தலைவர் அவர்களே, நான் அதிகமாகப் பேசமாட்டேன். இன்னும் கொஞ்சம் தான். தாங்கள் அனுமதிக்கக்கூடாதா? பாராளுமன்ற முறையைக் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள்;

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும். பாராளுமன்றத்திலும் இத்தகைய முறைதான் கடைபிடிக்கப்படுகிறது. மற்றவர்களும் பேச வேண்டாமா தயவுசெய்து உட்காருங்கள்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற கூட்டு கூட்டத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சௌந்திராஜன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து பேசக்கூடிய வகையில் நான் நிற்கிறேன்.

அதற்கு முன்பாக இந்தச் சட்டப் பேரவைக்கு மீண்டும் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் அந்த நிலையை உருவாக்கித் தந்த வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு முறை வென்றவன் மறு முறை வென்றதில்லை என்பது சரித்திரம். ஏற்கெனவே ஆஜானுபாகுவாக விளங்கியவர்கள் எல்லாம், பெருமைக்குரிய நாகராஜ மணியக்காரர், பட்டாபி நாயுடு, சீராமுலு நாயுடு போன்றவர்கள் எல்லாம் 2-வது முறை நாமினேஷன் செய்து வெற்றிபெறுகிற வாய்ப்பை இழந்தவர்கள். ஆனாலும், அண்ணாவின் தம்பி , புரட்சித் தலைவர் அவர்களுடைய தொண்டன், பொது மக்களின் வேலைக்காரன் என்ற தகுதியை நான் தக்க வைத்துக்கொண்ட காரணத்தினால் மீண்டும் இந்தச் சட்டப் பேரவைத் தொகுதியிலே நான் வெற்றி பெற்று இங்கே பேசுகிற வாய்ப்பு பெற்றிருக்கிறேன் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே அண்ணாவின் தம்பி, புரட்சித் தலைவர் அவர்களின் தொண்டன், பொதுமக்களின் வேலைக்காரன் என்ற 3 தகுதிகள் உள்ளவர்கள் தான் இந்த நாட்டை

ஆள முடியும் என்பதும், இந்த மூன்றையும் இழந்தவர்கள் இந்த நாட்டை ஆள எப்பொழுதும் முடியாது என்பதும் நடைபெற்ற தேர்தலின் எதிரொலி என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இங்கே ஒரு கட்சி இந்த முறை வெற்றி பெற்றால், அதே கட்சி அடுத்த முறை தொடர்ந்து வெற்றி பெற்றது இல்லை. அதையும் மாற்றி காட்டியவர் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் தான். அதே நேரத்தில் தமிழகம் தான் இந்தியாவிலே ஜனநாயக நீரோட்டமாக விளங்குகிறது என்பது எடுத்துக்காட்டாகும். இந்தியாவுக்கு இந்திரா என்றும் தமிழகத்திற்கு எம்.ஜி.ஆர். என்பதுதான் இந்த நாட்டினுடைய மக்கள் குரல்.

அந்த மக்கள் குரலை ஒடுக்க மகானுபாவர்கள் யார்யாரிடத்திலோ மண்டியிட்டார்கள், மடிப்பிச்சை கேட்டார்கள். ஆனால் மண்ணோடு மண்ணாக ஆகும் நிலை ஏற்பட்டு விட்டது என்பது நாம் அறிந்த ஒன்றாகும்; அப்படிப் பட்ட மக்கள் குரல்தான் இந்திய துணைக் கண்டத்தின் மக்கள் செய்தியாக உலகத்திற்கு உணர்த்தக் கூடிய தமிழக ஜனநாயக நீரோட்டமாக விளங்குகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகிறபோது மாண்புமிகு நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மிக சாமார்த்தியமாக பல கருத்துக்களை எடுத்து சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் முதலில் பேசுகிறபோதே சொன்னார்கள், இந்த மன்றம் ஆரம்பிக்கிறபோதே சோகத்தில் ஆரம்பித்திருக்கிறது என்று சொல்லி, சோகத்திலும் மகிழ்ச்சியாக திரு. சௌந்திராஜன் அவர்கள் பேசினார்கள் என்று சொன்னார்கள். அரசியல்வாதிகளுக்கு கடமையாற்றுகிற செயல்வீரர்களுக்கு கல்யாணமும், காரியமும் ஒன்றாகவே வருவது வழக்கம். ஆகவே காரியத்திலே சென்று கலந்து கொண்டவர்கள் அழுது கொண்டே இருக்கிறவர்கள், கல்யாணத்திலே சென்று அழுது கொண்டிருக்க முடியாது என்பதை கடமையாற்றும் வீரர்கள் அறிவார்கள். அவர்களுக்கு தெரியாவிட்டால் நான் கவலைப் படவில்லை. அது மட்டும் அல்ல. "நாங்கள் தேர்தலிலே வெற்றி பெற்று வந்தால் ஏதேதோ செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்களே அந்த வாக்குறுதியாவது நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, நிறைவேற்றுவார்களா என்று கேள்வி கேட்டு, அது ஆளுநர் உரையிலேகூட இல்லாதது போல ஒரு நிலையை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்" நான் அவர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்ள வேண்டும். குழந்தை பிறந்து வளர்ந்தால், இன்னாருக்குத் திருமணம் முடிக்கிறோம், இப்படி இப்படி படிக்க வைப்போம் என்று சொல்வது வழக்கம். ஆனால் பிறந்த உடனேயே குழந்தையை கல்லூரிக்கு அனுப்பிவிட முடியாது. குழந்தை பிறந்திருக்கிறது. வயது வரும், வேண்டிய பலன்கள் கிடைக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





மேலும் சில விஷயங்களைச் சொன்னார்கள். நடைபெற்ற ஆட்சியில் சில ஊழல்கள் இருந்தன என்றும் அல்லது முறைகேடுகள் இருந்தன என்றும் பல பல பிரச்னைகளை அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் அதைப்பற்றிப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லிக் குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லை என்பதை அறிவேன். இருந்தாலும் அவர்கள் அறிந்து கொள்வதற்காக நான் இந்தக் கருத்தை மீண்டும் சொல்ல முன்வருகிறேன். அவர்கள் பேசினார்கள், கப்பல் பேர ஊழலைப் பற்றி எவ்வளவோ குற்றச்சாட்டுகளைச் சொல்லி, எவ்வளவோ பைல்களைப் புரட்டி வைத்தார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் என்பதை நான் அறிவேன். நான் பேசுகிறபோது சொன்னேன், கப்பல் பேர ஊழல் என்று சொல்கிற நீங்கள் மேற்கொண்டு அதைப் பற்றிய பைல் எங்கே போனது, அந்தப் பணம் எவ்வாறு எங்கே கொடுக்கப்பட்டது, ரூபாயாகவா, பவுனாகவா, ஷில்லிங்க் காகவா, டாலராகவா? அன்னியச் செலாவணியை அனுமதித்தது யார்? என்று கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு என்ற அளவிலும் வேறு குறை என்ற வகையிலேயும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருந்தாலும் இதுபற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதன் காரணமாக அந்த வழக்கிற்கு உள்ளே இருக்கின்ற பல்வேறு கருத்துக்களின் பக்கம் மன்ற உறுப்பினர்கள் போகாமல் இருப்பது நல்லது. ஆனால் குற்றச்சாட்டு என்கிற வகையில், குறை என்ற வகையில் எடுத்துச் சொல்ல மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் அதற்குள்ளே. "டீட்டைல்ஸ்" என்பார்களே அந்த வகையில் போகாமல் இருப்பது நல்லது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நீதிமன்றம், நீதிமன்றம் என்று சொன்னால் பிறகு சட்டசபையே நடக்கமுடியாது. எல்லாப் பிரச்னைகள் பற்றியும் கேஸ்கள் போடுவார்கள். ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, இதைப் பற்றிப் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறை என்றளவில் சொல்லலாம் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**டாக்டர் கே. சமரசம்:** ஆகவே அந்தப் பிரச்னை பற்றி பின்னர் முடிவு சொல்லக்கூடியவகையில் அதிலே பிரச்னை இருப்பதால் அதை விடுத்து அடுத்த பிரச்னைக்கு வருகிறேன். பொதுவாக நடைபெற்ற தேர்தல் எப்படிப்பட்டது

என்பதையும், எதை எண்ணி இந்தத் தேர்தலை நடத்துவதற்கு தாபமிட்டார்கள் என்பதையும் இந்த மாநிலம் மிகத் தெளிவாக உணரும். நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட வெற்றியை எண்ணி நாடாள நினைத்தவர்கள் நாடோடிகளாக்கி அனுப்பப்பட்டார்கள் இந்த மாநில மக்களால் என்பதை இந்த மாநிலம் மிக நன்றாக அறியும். அதுமட்டுமல்ல. இன்றையதினம் மீண்டும் அந்த ராமாபுரத்து சிவந்த ரோஜாதான் இன்று கோட்டையில் ராஜாவாக வீற்றிருக்கும் காட்சியையும் இந்த மன்றத்தில் உருவாக்கியவர்கள் இந்த நாட்டு மக்கள்தான் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. எரும்பை வளர்த்து இருமபை துளை போட விரும்பிய குறும்புக்காரர்களை அரும்பிலேயே கிள்ளியெறியக் கூடிய நிகழ்ச்சியை உருவாக்கித் தந்ததும் நடைபெற்ற தேர்தல்தான்.

அதுமட்டுமல்ல. யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே, என்ற முதுமொழிக்கேற்ப சட்டமன்றத் தேர்தலில் வெற்றியடைவதற்கு முன்பாகவே சட்ட மேலவைத் தேர்தலில் வெற்றிவாகை தேடித் தந்த பட்டதாரிகளுக்கும் கூட இந்த நேரத்தில் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. இந்த வெற்றி என்பது ஏதோ எதிர்பாராத வெற்றி அல்ல. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஜாதகமே அப்படிப்பட்டதுதான். அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தவர்களுக்கு அது மிக நன்றாகத் தெரியும். கலை உலகில் அவர்கள் தன்னிகரற்று விளங்கினார்கள் என்று சொன்னால் ஒவ்வொரு நேரத்திலும் எப்படிப்பட்ட சங்கடங்களைச் சந்தித்து வெளியே வந்தார்கள் என்பதை நாடு அறியும். ஒரு நேரத்தில் அவர்களது கால் முறிந்தபோது உடனே சொன்னார்கள், அவர் ஒரு ஸ்டன்ட் நடிகர், அவர் பேர் இனிமேல் எடுபடாது, சினிமா உலகம் விரும்பாது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர்கள் கால் முறிந்த பிறகுதான், அது குணமடைந்தவுடன் கால்சீட்ஸ் வேண்டும் என்று அவ்வளவு பேர்களும் க்யூவில் நிற்கும் நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகுதான் அவர்கள் மிகப் பெரிய நபர்களில் ஒருவராக, சிறந்த நடிகர் என்ற இலக்கணத்தைப் பெற்றார்கள் என்பது உலகம் அறிந்த விஷயம். அதுமட்டுமல்லாமல், குண்டடிபட்டார்கள். குரல்வளையே போய் விட்டது, பேசுகிற சக்தியை இழந்தார்கள், சினிமா உலகில் பேசுவதற்குரிய சக்தியை இழந்தார்கள். அதோடு அவர்கள் அழிந்தார்கள் என்றெல்லாம் நினைத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகுதான் பன்மடங்கு அவர்களுக்குச் சம்பளம் வரக்கூடிய நிலை உருவாகி, புகழும் உயர்ந்து, அவர்கள் கலைத் துறையில் மட்டுமல்லாது அரசியல் துறையிலும் தொடர்ந்திருக்கும் ஒரு நபர் என்பதை இந்த அவனிக்கு அந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டியது.





அதுமட்டுமல்ல. அரசியலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொருளாளராக இருந்த அவர் சிலபல விவகாரங்களின் காரணமாக அதிலிருந்து விலக வேண்டிய ஒரு நிலை உருவாகியது. அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றினார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் ஒரு புதிய கட்சியை உருவாக்கி நாலரை ஆண்டுக் காலத்தில் நாலரைக் கோடி மக்களுடைய தலைவனாக, முதல் அமைச்சராக இங்கே வந்தார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் இங்கே ஆட்சி புரிந்துவந்த நேரத்தில் கூட இவர்களை நீங்கள் ஆளலாமா என்று சொல்லி அந்த ஆட்சியை கவிழ்ப்பதற்கு வேண்டிய காரண காரியங்களை எடுத்து வைத்து கவிழ்த்தினார்கள். அப்படி கவிழ்த்திய பிறகு கூட இடைப்பட்ட மூன்று மாத காலத்திற்குள்ளாக மீண்டும் ஒரு தனித்தன்மையுடன் அதிக இடங்களை தேர்தலில் பிடித்து அதே அமைச்சரவை, அமைச்சர்கள், அதே உதவியாளர்கள், அதே இலாக்காக்கள், அதே அறை; அதே லெட்டர் பாட்; அதே கார்; அதே ட்ரைவர் என்று இதுமாதிரி ஈரேழு பதினாங்கு உலகங்களில் கூடக் கிடையாது. அவர்கள் வேதாளக் கதையில் கூட கிடையாது. இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களில்கூட இதைப்போல் காண முடியாது.

(முற்பகல் 10-10)

தமிழகத்தில் மட்டும் உண்டு. அதுதான் தலைநாயகன், வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இப்படிப்பட்டவைகள் சரித்திரத்தில் வராது; புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்தான் வரும் என்று சொன்னால் அது மிகையாகாது.

பொதுவாகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 'தமிழைப் பழித்தவனை அறப்பாடி அழித்தான்—நக்கீரன்'. 'காளிங்கராயன் ஆணவத்தை வசைபாடி அடக்கினான்—பொய்யாமொழி'. 'தன்மானத்தை நிலைநிறுத்த ஆசு கவி பாடினான்—கம்பன்". 'சமுதாய ஆசாபாசங்களை சாடி, வசை பாடினான்—காளமேகம்' என்று சொல்வார்கள். ஆனால், அண்ணாவின் கொள்கைகளை அழிக்க, கூட்டணி அமைத்தோரை, மக்கள் ஆதரவு என்னும் ஆயுதத்தால் பிறமுதுகிட்டோட வைத்த நிகழ்ச்சி நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்டிருக்கின்றது என்று சொன்னால் மிகையாகாது.

அது மட்டுமல்ல. ஒரு கல்வியை தவறாகக் கற்றுக்கொண்ட காரணத்தால், காலத்தால் அது உதவாமல் போகும் என்றும் சொல்வதுண்டு. ஆனால், இந்த நாட்டு மக்கள் 31—5—1980 அன்று சூரியனைக் காணவில்லை. நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்படிப்பட்ட நிலை நாட்டில் ஏற்பட்டது. 'நல்லார் ஒருவர்

உளரேல், அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை' என்பது தமிழகத்திலே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக பதவி ஏற்றதிலிருந்து, இன்று வரைக்கும்கூட தமிழகத்திலே ஏதாவது ஒரு மூலையிலோ மழை பெய்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. அது இயற்கை.

அது மட்டுமல்ல. இந்தியாவிலேயே ஜனநாயகம் தமிழகத்திலே தான் வாழ்கிறது, வளர்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக நடைபெற்ற தேர்தல் அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மிகப் பெரிய ஜாம்பவான், அரசியல் எதிரிகளை பொருளில்லாமல், பொதுக் கூட்டங்கள் நடத்தாமல், போஸ்டர்கள் ஒட்டாமல், போக்குவரத்துகளை பெருக்காமல், பொதுத் தேர்தலை நடத்தி, போர்க்களத்தில் வெற்றி வாகை சூடிய ஓர் மக்கள் இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். அதன் தலைவர் எம்.ஜி.ஆர். இதுவும் சரித்திரம் காணாத புதுமை. இவைகளையெல்லாம் நடைபெற்ற தேர்தல் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், தன்னை வெல்வான், தரணியை வெல்வான் என்ற தத்துவத்தின் தளநாயகனாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். விளங்குகின்றார். நடைபெற்ற தேர்தலில் எங்கள் நிலை எவ்வாறு இருந்தது என்பதை நீங்கள் தெளிவாக உணர்வீர்கள். "கைவேல் களிற்றோடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்' என்னும் நிலையில் எங்கள் தேர்தல் கால கூட்டங்கள் அமைந்திருந்தது. அது மட்டுமல்ல. நாடாளு மன்றத் தேர்தலில் எந்தெந்த அஸ்திரங்களை யெல்லாம் பயன்படுத்தினார்களோ, அந்தந்த அஸ்திரங்கள் எல்லாம் சட்டமன்றத் தேர்தலிலே பயன்படுத்த முடியாமல் போய் விட்டது என்பதை நாம் மறந்துவிட முடியாது. நாடாளு மன்றத் தேர்தலில் சொன்னீர்கள் "தாலிக்கு தங்கமில்லை, தாளிக்க வெங்காயமில்லை" என்று. ஆனால் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் உங்களைப் பார்த்துச் சொன்னார்கள். 'தாலிக்கு தங்கமில்லை, தாளிக்க வெங்காயமில்லை, கூழுக்கு ஆரியமில்லை, பாலுக்கு சர்க்கரை இல்லை, பாசனத்திற்கு கரண்டு இல்லை, இஞ்சினுக்கு டீசல் இல்லை'—இந்த நிலையை உருவாக்கிய உங்களுக்கு ஓட்டு இல்லை என்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் மேலும் பலப்பல கேள்விகளை மக்கள் உங்களிடம் திருப்பிக் கேட்டார்கள்.

'மத்தியில் சுயாட்சி, மாநிலத்தில் கூட்டாட்சி' எனில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏன்? 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்?' என்ற தமிழ் நெறியை மறந்து, மண்ணின் மைந்தர்க்கே உரிமை என்போரிடம் கூட்டுறவு ஏன்? 'இருமொழித் திட்டம் இழந்து, மும்மொழித் திட்டத்திற்கு வெண்சாமரம் வீசுவோர்க்கு சுயமரியாதை ஏன்?' 'பசி வந்திட பத்தும் பறந்துபோகும்' என்பது பழைய பழமொழி. ஆனால், 'பதவி ஆசை வந்திட பத்தும் பறந்து போகும்' என்பது புது மொழியாகும். அதை மறந்து 48, 38 ஆனபிறகும், வெத்து வேட்டு வீராப்பு ஏன்? 'பெத்தெடுப்பதற்கு முன்பாகவே, சொத்தெழுதி வைத்துக் கொண்டாரே? அதுவும் செத்துப் பிறந்தால், தத்தளிப்போர்க்கு தத்துவம் ஏன்?' என்று நாட்டு மக்கள் கேட்கிறார்கள், அது மட்டுமல்ல, 'காகிதப் பூ மணக்காது, கலைஞர் ஜம்பம் பலிக்காது; காங்கிரஸ் உறவு இனிக்காது' என்ற பின்பும், இலட்சிய உறவு ஏன்? என்று கேட்கக்கூடிய நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. இவைகளை நாம் காதாறக் கேட்கிறோம். ஆகவே, 'பகையாளியை உறவாடிக் கெடு' என்றும் பாரத மாதாவின் உபதேசத்திற்குப் பிறகும், (Half knowledge is always dangerous)? என்று அறிந்த பிறகும், அதிமேதாவித்தனமான அறிக்கைகள் ஏன்?





இன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையிலே பலப்பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களை ஏற்கனவே முன்மொழிந்து பேசிய திரு. ஆர். சௌந்திரராஜன் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இன்றையதினம் அருமை நண்பர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, அதிலே உப்பில்லை, காரமில்லை என்று சொன்னார்கள்.

நாங்கள் இருப்பதாகச் சொல்லவில்லை. காரணம், ஒருவன் உண்ணாவிரதம் இருந்தால் உடனடியாக பிரியாணி கொடுத்தால் இறந்துவிடுவான். காரம், உப்பு இவைகளை நீங்கள் எதிர்பார்க்கிறபடி நிச்சயமாக நாங்கள் கொடுப்போம். அடுத்து வரும் பட்ஜட்டில் நீங்கள் எதிர்பார்க்கலாம். கவர்னர் உரையை பழச்சாறு என்ற அளவில் கொள்ளலாம்.

நேற்று உலகம் சுற்றிய நடிகர், இன்று உலகம் சுற்றும் முதல்வர், நாளை உலகம் சுற்றும் தலைவர் எம்.ஜி.ஆர். என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி பேசுபவர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

(திரு. நா. சுந்தரராஜ் பேச அழைக்கப்பட்டார்.)

**திரு. நா. சுந்தரராஜ் :** இனிஷியேட் பண்ணிப் பேசும்போது கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவர்கள் தங்கள் நேரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால்தான் அவர்களது கட்சி உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்க முடியும். அதிகமான உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். கட்சித் தலைவர்கள் பத்து பேர் பேசியாக வேண்டும். பிறகு பதில் சொல்லுவதற்கு நேரம் கொடுக்க வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் பத்து நிமிஷத்திற்குள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ள முயற்சி செய்து பாருங்கள். பத்து நிமிஷத்திற்குள் எவ்வளவு பெரிய கருத்தை வேண்டுமானாலும் சொல்லி விடலாம்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, முதல் முதலாக மீண்டும் இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, மாபெரும் இளைஞர் தளபதி மறைந்த சஞ்சய் காந்திக்கு இந்த அவை அஞ்சலி செலுத்தும் வகையில் அவருடைய நினைவாக இந்த அவையை ஒத்தி வைத்ததற்காக உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, மறைந்த எங்களுடைய இளைஞர் தலைவர் சஞ்சய் காந்தியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை விட்டதற்காக முதலமைச்சருக்கும் இந்த அரசுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய முக்கியமான வேண்டுகோளாக இந்த அவையிலே ஒன்றை வைக்க விரும்புகிறேன். இந்தியாவின் சிற்பியாக விளங்கிய, சோஷலிசத் தந்தையாக விளங்கிய, மாபெரும் தலைவராக விளங்கிய ஜவஹர்லால் நேரு அவர்கள் உருவப்படத்தை இந்த அவையில் வைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய வேண்டுகோளாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்குப் பிறகு நான் ஆளுநருடைய அறிக்கைக்கு வருகிறேன். நம்முடைய ஆளுநரைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். 1977 ஆம் ஆண்டு மத்தியில் இந்திரா காந்தி ஆட்சி அகற்றப்பட்ட பிறகு ஜனதா கட்சியால் இங்கே நியமனம் செய்யப்பட்டார். இரண்டரை ஆண்டு காலம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிருந்தபோதும் கவர்னராக இருந்தார். மீண்டும் இடைக் காலத்தில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி மத்தியில் இருக்கும்போது இங்கே கவர்னராக இருந்தார். தேர்தல் முடிந்த பிறகு இன்றும் அவர் ஆளுநராக இருக்கிறார்.



(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதே ஆளுநரால் இன்று அறிக்கை படிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் இருக்கக்கூடிய முக்கியமான கருத்துக்களைப் பற்றியெல்லாம் கூட்டணிக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய தோழர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்கள் கருத்தைச் சொல்ல விரும்புகிறோம்.

ஆளுநர் உரையில்—“ஜனநாயகப் பரிசோதனையில் மீண்டும் தமிழக வாக்காளப் பெருமக்கள் குழப்பம் எதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல், தைரியத்தோடு இம்மாநிலப் பேரவைக்குத் தெளிவான தீர்ப்பை வழங்கியதிலிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று எண்ணி வியக்கிறேன். நேர்மையான முறையில் அமைதியான வகையில் தேர்தல் நடைபெற்றதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறியிருக்கிறார்கள்.

ஒன்றை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தல் நடைபெற்ற நேரத்தில் ஆளுநர் பொறுப்பில் இருந்தவர் இன்று இந்த அறிக்கையைப் படித்திருக்கிறார்கள். நடைபெற்ற தேர்தலைப் பற்றிச் சொல்லும் போது ஒரே ஒரு தொகுதியில் உள்ள நிலையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பாலகிருஷ்ணன் தொகுதியான முதுகளத்தூர் தொகுதியை உன்னிப்பாக பாருங்கள். முதுகளத்தூர் தொகுதியில் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 87. கீழ்குளத்தில் மொத்த வாக்

(முற்பகல் 10-20)

காளர்கள் 634 பேர். அங்கே உங்களுடைய கூட்டணியைச் சேர்ந்த வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகள் 597, ஆனால் கை சின்னத்திற்குக் கிடைத்தது, அதாவது எங்களுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. பாலகிருஷ்ணனுக்குக் கிடைத்த வாக்கு ஒன்றே ஒன்றுதான். அதே போல 88 ஆம் எண் வாக்குச் சாவடியிலே ஆனைசேரி என்னுமிடத்தில் மொத்த வாக்குகள் 840; அதிலே உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவருக்குக் கிடைத்தவை 709: ஒன்பதே ஓட்டுகள்தான் கை சின்னத்திற்குக் கிடைத்தது. அதேபோன்று கமுதி ஒன்றியத்திலே 63-வது வாக்குச் சாவடியிலே, இடிவிலகி என்ற இடத்திலே மொத்த வாக்குகள் 926; அதிலே உங்கள் சிங்கம் சின்னத்திற்குக் கிடைத்தவை 779; கை சின்னத்திற்குக் கிடைத்தது ஒன்று தான். இருபதாவது என்னுள்ள வாக்குச்சாவடியான பெருமாள்தேவன் பட்டி என்ற இடத்திலே—அது பெண்

கள் வாக்குச் சாவடி—மொத்த வாக்குகள் 840; அதிலே உங்கள் கூட்டணியைச் சேர்ந்தவருக்குக் கிடைத்த வாக்குகள் 665 ; கை சின்னத்திற்குக் கிடைத்தது 8 தான். இவைகள் எல்லாம் எப்படி நடைபெற்றது என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் மக்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லமுடியாத நிலைமை தான இருந்தது என்பது தெரியும். கையிலே மை போடப்படாமலே ஒருவரே மீண்டும் மீண்டும் முத்திரை குத்தி குத்திப் போடக்கூடிய நிலைமை இருந்திருக்கிறது. எங்கேயுமே ஒருவருக்கே எல்லா வாக்குகளும் விழக்கூடிய நிலைமை இருக்காது. ஆகவே இதைப்பற்றியெல்லாம் தேர்தல் கமிஷன் விசாரித்து சரியான பரிகாரம் காணவேண்டும் என்பதைவிட உங்களுடைய அரசே எப்படி வாக்குச்சாவடிகளிலே சம்பவங்கள் நடைபெற்றன என்பதைப் பற்றி முழுமையான விசாரணை நடத்தித் தெரிந்துகொள்ள முயலவேண்டும். ஆளுநர் ஆட்சிக் காலத்திலே நடந்தது என்று சொல்லி. . .

**திரு. பி. முசிறிப்புத்தன் :** துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் சில வாக்குகளே இருந்தன என்றும், மக்களுக்கு வாக்களிக்க உரிமை தரப்படவில்லை என்றும் உறுப்பினர் சொன்னார். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமோ தெரியாதோ, 1957 ஆம் ஆண்டிலே எதிர்க்கட்சித் தலைவர் அப்போது போட்டியிட்ட குளித்தலைத் தொகுதியிலே ஒரு குறிப்பிட்ட வாக்குச்சாவடியிலே ஒரு ஓட்டுக்கூட எதிர்க்கட்சிக்கு விழாத சம்பவங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் வாக்களிக்க முடியாமல் அச்சுறுத்தப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அப்போது ஆண்டது கவர்னர் ஆட்சி என்று சொன்னால் அவர்களுடைய ஆட்சிதான் அப்போது நடந்தது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** நீங்கள் தர்மத்திற்காக ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள், நேர்மையான அரசு என்று சொல்கிறீர்கள். ஆகவே நீங்கள் ஏன் அது பற்றி விசாரணைக் கமிஷன் வைக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். ஆகவே இன்றைய தினம் 10 லட்சம் வாக்காளர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி தோற்றுவிட்டது என்று இங்கே பேசினார்கள். நாங்கள் தோற்கவில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு உங்களுடைய கட்சியைச் சேர்ந்த ஏஜென்டுகள் சட்டமன்றத் தேர்தல் வந்தாலும் வந்துவிடும் என்ற முறையிலே—ஊராட்சி மன்றத் தேர்தலுக்கு வாக்காளர்களுக்கு வயது வரம்பு 18 ஆக இருக்கும் என்ற கருத்தை வைத்துக்கொண்டு—18 வயதுடையவர்களையெல்லாம் அந்தத் தேர்தலுக்கு முன்னாலே வாக்காளர்களாகப் பதிவு செய்தார்கள். அப்போது அவர்கள் பதிவு





செய்ததன் நகல் எங்களுக்குக் கிடைக்கவில்லை. தேர்தலுக்கு நாள் குறித்த பின்பு நாங்கள் தேர்தலுக்காக வாக்குச்சாவடிக்குச் செல்கின்றபோதுதான் அப்பதிவு பற்றிய புத்தகங்கள் எங்களுக்குக் கிடைத்தன. அதனால் நாங்கள் அவைகளை நீக்கம் செய்யமுடியவில்லை. அந்த வாய்ப்பு எங்களுக்குத் தரப்படவில்லை. இதுபோன்ற பல குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. நீங்கள் தர்மத்திற்கு வந்த அரசு, நேர்மையான அரசு என்று சொல்கிறீர்கள், ஆகவே அதற்காக விசாரணை கமிஷன் வையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவர் அவர்களே, புதிதாக வாக்காளர்களே சேர்க்கக்கூடாது என்பது காங்கிரஸ் கட்சியின் நிலையா ?

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, ஐ ஆம் நாட் யீல்டிங். என்னுடைய நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள். நான் ஏற்றுக் கொள்ளமுடியாது. நீங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே எந்தக் காரியமும் நடைபெறவில்லை என்பது உண்மையான குற்றச்சாட்டு ஆகும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னாலே உங்களை எந்த அதிகாரியும் மதிக்கவில்லை, அதனாலே அரசிலே எந்தக் காரியமும் நடக்காமல் அரசின் நிர்வாக இயந்திரமே ஸ்தம்பித்துவிட்ட நிலையில் மத்திய அரசு தலையிட்டு ஆட்சியைக் கலைத்த நிலைமை ஏற்பட்டது. இப்போது புதிய பலம் உங்களுக்கு வந்திருக்கிறது. நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், முதல்நாள் காலையிலே திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் குடிசை மாற்றுத் தலைவர் என்றும், மாலையிலே திரு. கபாலி தான் அதன் தலைவர் என்றும் வந்ததே. இதில் எங்கே தடுமாற்றம் ? ஏன் இந்தத் தடுமாற்றம் ? இது உங்களுக்குத் தேவைதானா ? நீங்கள்தான் பெரும்பான்மையாக வந்திருக்கிறீர்கள் ? கூட்டணிக் கட்சிகள் வேறே இருக்கின்றன ? கம்பெனிகளெல்லாம் வந்திருக்கிறார்களே. . .

**திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவரவர்களே, கம்பெனி என்று அவர்கள் சொல்கிறார்களே, அப்படிச் சொல்லலாமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரவர்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது. இன்னும் ஒரு நிமிடத்திலே முடித்து விடுங்கள். உறுப்பினரவர்கள் அறிக்கையின் மேல் பேசாமல் வேறு கருத்துக்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** கம்பெனி என்று சொல்லலாமா?

**திரு. நா. சுந்தரராஜ் :** கம்பெனி என்றால் கூட்டாளி என்ற பொருளில் சொன்னேன்.

இன்றையதினம் முதலமைச்சரவர்கள் அண்ணா வழியிலே ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டிலே அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அப்பொழுது தலைவர் மூதறிஞர் இராஜாஜி அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்கள், காயிதே மில்லத் அவர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் மங்களூரிலுள்ள மூகாம்பிகையிடம் சென்று ஆசி பெற்றிருக்கிறார்கள், ஆளுநர் அவர்கள் திருப்பதிக்குச் சென்று ஆசி பெற்று வந்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன், தமிழ் நாட்டில் உள்ள கடவுள்களுக்குத் தெய்வீக சக்தி இல்லையா? தமிழகத்திலுள்ள கோயில்களுக்குச் சென்று வணங்கக்கூடாதா? தமிழகத்திலே உள்ள கோயில்களுக்குச் சென்று ஆசி பெறக்கூடாதா? நான் முதலமைச்சரவர்களுக்கு உள்ள தெய்வ நம்பிக்கையைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் முடிந்துவிட்டது.

**திரு. நா. சுந்தரராஜ் :** என்னுடைய கட்சிக்கு உள்ள நேரத்தை எடுத்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதிலே எடுத்துக்கொள்வது என்றால் இந்த நேரத்தை அதில் கழித்து விடுகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** வேலைக்கு உணவு என்பது மத்திய அரசின் திட்டம். அதை நீங்கள் நிறைவேற்றுவதாகச் சொல்வது, பத்திரிகையிலே வேண்டுமானால் விளம்பரம் கிடைக்கலாமே தவிர, அது மத்திய அரசாங்கத்தின் முழுமையான திட்டமாகும். கடந்த எட்டு மாதங்களுக்கு முன் புதுக்கோட்டை மாவட்டத்திலே வேலை செய்தவர்களுக்கு இன்னும் உணவு வழங்கப்படவில்லை. அதுபற்றிப் பலதடவை சொல்லியும் இன்னும் வழங்கப் படவில்லை. வழங்கப்படும் அரிசியோ புழுக்கள் நிறைந்த அரிசியாக இருக்கிறது. நல்ல அரிசியாகக் கொடுக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொன்னது, ஐந்து கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாம், வீட்டிற்கு ஒருவருக்கு வேலை நிச்சயம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 60 சதவிகிதத்தினருக்கு





நிச்சயமாக ஒரு ரூபாய், பிரசவத்தின்பொழுது தாய் சேய் உடல் நலம் பாதுகாப்பிற்காகத் தாய்மார்களுக்கு 50 வீதம் 150, பட்டினி கிடக்கும் அவல நிலை யாருக்கேனும் ஏற்படின் அவர்கள் குறிப்பிட்ட அரசு அதிகாரிகளிடம் அணுகி தன் நிலையை விளக்கி ரூபாய் 100 பெற்றுக்கொண்டு பின்னர் வாழ வழிவகை செய்யப்படும் என்ற வகையில் சொன்னீர்களே, அவைகள் என்ன ஆனது? தேர்தல் அறிக்கை என்பது அரசின் அறிக்கை, அதில் கொள்கைகளைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விவசாயிகள் பற்றி முதலமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள். விவசாய வாரியம் என்று ஒன்று அமைப்பேன், அதிலே நான் தலைவராக இருப்பேன், கட்சி சார்பற்ற ஒருவர் துணைத் தலைவராக இருப்பார், அவருக்கு மந்திரி அந்தஸ்து கொடுக்கப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் சொன்னது என்ன, செயல்படுவது என்ன? குழு என்று சொல்லி அதில் அமைச்சரே இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. எல்லாக் குழுக்களையும்போல இதுவும் ஒரு குழுதான் இதனால் எந்தக் காரியமும் நிறைவேற்றப்பட முடியாது. இப்படிச் சொல்லி நாராயணசாமி நாயுடுவை வேண்டுமானால் நீங்கள் ஏமாற்றலாம், ஆனால் கோடிக்கணக்கான விவசாயிகளை ஏமாற்ற முடியாது. ரெவின்யூ அமைச்சரவர்கள் ஒன்று சொன்னால் அது அவரது சொந்தக் கருத்து என்று சொல்கிறார்கள். இதுதான் ஒற்றுமையா? விவசாயிகளிடத்தில் எவ்வளவு தூரம் நம்பிக்கை ஊட்டினீர்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எல்லாவற்றையும் ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். மத்திய அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், ரிசர்வ் பேங்க் அதை ஒத்துக்கொள்ளாது எனவே நாங்கள் அப்படிச் சொல்லமாட்டோம் என்று சொன்னார்கள். மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை என்றால், ரிசர்வ் பேங்க் ஒத்துக்கொள்ளவில்லை என்றால், நாங்களே அதைத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னீர்களே அதைச் செய்வீர்களா? அதற்கான அறிக்கை இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன. உறுப்பினரின் நேரம் முடிந்து விட்டது. சப்ஜெக்ட்டிற்குள்ளே போகாமல் வேறே பேசிக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினரவர்கள் உட்கார வேண்டும். மற்றவற்றை வேறு யாரிடமாவது கொடுத்துப் பேசச் சொல்லுங்கள்.

**திரு. நா. சுந்தரராஜ் :** முடித்து விடுகிறேன். இந்த அறிக்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற முறையிலும், மத்திய அரசோடு மோதல் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலும் இருந்தால், நீங்கள் அவ்வாறு மோத வேண்டுமென்று விரும்பினால் அதற்கு காங்கிரஸ் கட்சி தயாராக இருக்கிறது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*** வேடசந்தூர் திரு. வி. பி பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே சொல்லப் பட்டிருப்பது வெறும் வார்த்தைகள் அல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற அந்த வார்த்தைகளைக் கையாளும் பொழுது இந்த நாட்டு மக்களின் எண்ண அதிர்வுகளை, இதய உணர்வுகளை இதயத் தராசில் எடை போட்டு, செயலாற்ற வேண்டும் எனும் அந்தத் தத்துவத்தை இந்தியத் துணைக் கண்டத்திற்கு உணர்த்த தமிழக மக்கள் நடத்திய மவுனப் புரட்சியில் விளைந்த இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் இந்த அரசின் கொள்கைகளை, கோட்பாடுகளைக் கோடிட்டுக் காட்டும் வகையில் மேதகு ஆளுநர் அவர்கள் வாசித்தளித்த உரை இந்தத் தமிழகத்திலே ஒரு நிலையான, ஒளிமயமான ஆட்சிக்கு முன்னணி யாக, முகப்பு ஓவியமாக அமைந்திருக்கிறது என்று சொல்லி நான் என் பேச்சைத் தொடங்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30)

அண்ணாவால் வகுக்கப்பட்டு இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட இரு மொழிக் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று ஆளுநர் அறிவித்திருப்பது, இந்த அரசு அண்ணாவினுடைய அரசு, எந்தவிதமான சூழ்நிலையிலும் கொள்கையை அடகு வைக்காத அரசு என்பதை உறுதிப் படுத்துவதாக இருக்கிறது. அதேபோல் 25 ஆண்டுகாலமாக இந்தத் தமிழகத்து ஆசிரியர் சமுதாயம் குரல் கொடுத்து வந்தும் கேளாச் செவி யினராக இருந்த நிலை மாறி, ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற கோரிக்கையை, இந்த அரசு, ஆட்சிப் பொறுப்பினை ஏற்று 24 மணி நேரத்திலே நிறைவேற்றியிருக்கிறது என்பது இந்த அரசு வெறும் வாக்குறுதி களை அள்ளித் தெளிக்கின்ற அரசு அல்ல, இந்த அரசு சொல்லியவைகளைக் கனிவுடன், பணிவுடன் செயலாற்றும் என்பதை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்தத் தமிழகத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற திருமணக் கடன் ஆசிரியர்களுக்கும் இனி கிடைக்கும். இத்தனை நாட்களாக ஆசிரியப் பெருமக்கள் குரல் கொடுத்து வந்த, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஸ்தல ஸ்தாபன ஊழியர்களைப் பயன்படுத்துகின்ற கொடுமைகளிலேயிருந்து அவர்களுக்கு விடுதலை அளித்த அரசாக, ஆசிரியர்களுடைய அரசாக இது விளங்குகின்றது. தேர்தல் கால வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது என்கின்ற வகையிலே, ஆசிரியர் பிரச்னையை இந்த அரசு பொறுப்பேற்ற





உடனே தீர்க்கிறது. ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அரசிடம் ஒரு சேய், தாயிடம் எதிர்பார்ப்பதைப் போல எதிர்பார்க்கிறார்கள். இந்த நேரத்திலே, இத்தகைய சிறப்பான சலுகைகளை, 25 ஆண்டுகாலமாக அரசிடம் குரல் கொடுத்து கேட்கப்படாத கோரிக்கைகளை நிறைவேற்றிய இந்தத் தமிழக அரசு, தனியார் பள்ளிகளுக்கும் இந்தச் சலுகைகளை வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையிலே நெல் கொள்முதல் விலைக்கு மத்திய அரசு குறிப்பிட்டிருக்கும் விலைக்கும் மேலாக, ரூ. 105-ஐ, தமிழக அரசு வழங்கி வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருப்பது, இந்த மாநிலத்திலேயிருக்கிற ஏழை, எளிய விவசாயிகள்பால் இந்த அரசு கொண்டிருக்கிற பற்றினையும் பாசத்தினையும் காட்டுவதாக அமைந்திருக்கிறது. மைய அரசு விலை அதற்குக் கம்மியாக இருக்கிறது. அருமை எதிர்க்கட்சி நண்பர் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற நேரத்திலே, பஞ்சாபிலே மாநில அரசு சார்பிலே அத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, மத்திய அரசைக் கேட்கவில்லை என்று சொன்னார். இந்த நேரத்திலே ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் நெல்லிக் குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, இதேபோல், ஒன்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. 1973-74 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு உதவி ரூ. 1,500 கோடி. அதிலே ரூ. 40 கோடிதான் தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று கவர்னர் உரையிலே அப்பொழுது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணா எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த பொழுது, மத்திய அரசு உதவி பெறுவதற்கு, எங்களுடைய உதவி எப்பொழுது தேவையோ அப்பொழுதெல்லாம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசினுடைய விலை குறைவாக இருந்தும், தமிழக அரசு, மூட்டை ஒன்றுக்கு, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 105 வழங்குகிறது விவசாயிகளுக்கு. இந்த நேரத்திலே மைய அரசு கோதுமைக்கு 600 கோடி ஆதரவு விலை கொடுப்பதையும், வடபுலத்திலே இருக்கிற கரும்புக்கு நிர்ணயித் திருக்கிற விலையையும் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

1969 ஆம் ஆண்டு வரை 3,463 கோடியிலே 262 கோடி, ஆக 8 சதவிகிதம் தான் தமிழகத்திலே தொழில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. அது 1979 ஆம் ஆண்டு வரையிலே, 15,668 கோடியிலே 616 கோடிதான் தமிழகத் திலே முதலீடு என்பது 4 சதவிகிதம் ஆகிறது. மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்க வேண்டிய நேரத்திலே இந்தத் தமிழக அரசு தட்டிக் கேட்கும் என்கிற அளவிலே, அந்த அறிவிப்புகள் ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன.

விவசாயக் கடன் சலுகைகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு கொடுத்த வாக்குறுதியைவிட, பாராளுமன்றத் தேர்தலிலே கூட, அருமை மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல், முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள், கொடுத்த வாக்குறுதிகள் ஏராளம். காலக் கெடுக்கள் வைக்கப்பட்டன. தமிழக விவசாயிகளிடம் கடன் மார்ச் மாதம் 15 ஆம் தேதி ரத்து செய்யப்படும், மார்ச் மாதம் 30 ஆம் தேதி ரத்து செய்யப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், நடந்தது என்ன? ரிசர்வ் வங்கியினுடைய தலையிலே தூக்கிப் போட்டது மட்டுமல்ல, கூட்டுறவுக் கடனை ரத்து செய்வது என்பது கூடாத ஒன்று, முடியாத ஒன்று என்று கர்நாடக மாநிலத்துக் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஜகாங்கனூர் சொல்லியிருக்கிறார். 4 தினங்களுக்கு முன்பே, இந்த அரசு குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு ஆவன செய்யும் என்றுதான் ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், இன்று அதற்காக, விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றத் தவறி விட்டது என்று சொல்கிறார்கள். 13—6—1980லே " இந்து " பத்திரிகையிலே ஒரு செய்தி குறிப்பிடப்படுகிறது. மத்திய அரசின் துணை நிதியமைச்சர் திரு. மகன் பாகி பரோட் ஒன்று சொல்லியிருப்பதாக அதில் வந்துள்ளது.

The writing off, of co-operative dues will seriously affect the liability of co-operative credit system and under-mine its very structure.

தமிழக அரசு அப்படிச் சொல்லவில்லை. குறிப்பாக, சிறு விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும், குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பி. ராஜகோபால் நாயுடு பாராளுமன்றத்தில் பேசுகிறபொழுது, இந்த உர விலையால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், நிலச்சுவான்தார்களை விட சிறு விவசாயிகளே என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய நிதியமைச்சர் அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே வழங்கப்படுகிற கடன்களிலே 50 சதவிகிதம் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஆளுநர் உரையிலே, குறிப்பாக சிறு விவசாயிகளுக்கான சலுகைகள் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதை வைத்துக்கொண்டு வாக்குறுதிகளை மீறியிருப்பதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் கடந்த காலத்திலே வாக்குறுதியை அளித்துவிட்டு, முடியாது, கூடாது என்று பேசுவதை விட, வாக்குறுதியை அளித்த நாங்கள் இன்று வரையிலும் அந்த விவசாயிகளின் கடன்களைக் கடந்த 2½ ஆண்டுகளில் 50 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்திருக்கிறோம். தேர்தலிலே இரண்டு அணிகளும் வாக்குறுதிகளைக் கொடுத்தோம். யார்



கொடுத்த வாக்குறுதிகளை நம்பலாம் என்று மக்கள் தெளிவாக முடிவெடுத்து, தீர்ப்பளித்திருக்கிறார்கள். நாங்களும் வாக்குறுதிகளைக் கொடுத்தோம், நீங்களும் வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். 50 கோடி ரூபாய்கள் விவசாயக் கடன்களை ரத்து செய்தோம் என்பதற்காகவும், கடந்த காலத்திலே இருந்தவர்கள் விவசாயிகளைச் சந்தித்த காலங்களிலே எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

அதேபோல, நதி நீர்ப் பங்கீடு, நதி நீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கிறது. தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் காவிரி நீரை எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் குறுவை நெல்லுக்குத் தண்ணீர் வராமல் இருந்த காலத்தில் ஒரே ஒரு மணி நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேவராஜ் அர்சுடன் பேசி ஒரு மணி நேரத்தில் விவசாயிகள் பிரச்சினையை முடித்துக் கொடுத்தார்கள். இத்தகைய நதி நீர்ப் பிரச்சினை பேசித் தீர்க்கப்படும் என்று சொல்வது விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதமாகும் என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

River Boards and Inter-State Water Disputes Bill
1955 ஆம் ஆண்டிலே பாராளுமன்றத்திலே சட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தாலும், அண்டை மாநில நதிநீர்ப் பிரச்சினைகள் தேங்கிக் கிடக்கின்றன. 1955 ஆம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு சுணக்கம் காட்டுகிறது.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியான மதுரை மாவட்டம் வேடசந்தூரில் வரலாறு காணாத அளவில் 1977 ஆம் ஆண்டு குடகனாற்றில் வெள்ளம் வந்தது. அந்த அணையினைக் கட்டித் தரவேண்டும். அதேபோல கடந்த காலத்தில் அந்த அணை கட்டப்பட்டாலும் வேடசந்தூரில் அந்தத் தண்ணீர் பாயாத காரணத்தால் புதிதாகக் கட்டப்படுகின்ற அணையை என்னுடைய தொகுதி மக்களுக்குப் பயன்படும்படி, இங்கே உள்ள நிலங்களுக்குப் பாய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து சமீபத்தில் பாராளுமன்றத்தில், சிமெண்ட் உற்பத்தி செய்ய வந்துள்ள சில விண்ணப்பங்களில் 'மைனிங் லீஸ்' கிடைக்காத காரணத்தினால் அனுமதி கொடுக்க முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள், அது இந்துப் பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியான வேடசந்தூரிலே பாதிப் பகுதியில் இந்த மூலப் பொருள் கிடைக்கிறது. அங்கு திருச்சியிலே உள்ள தனியார் கம்பெனி ஒன்று இங்கே நிலம் எடுத்து

திருச்சி மாவட்டத்திலே சிமெண்ட் கம்பெனி வைத்திருக்கிறார்கள். எஞ்சி உள்ள நிலத்தில் உள்ள மூலப் பொருளைக் கொண்டு ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலையை என்னுடைய தொகுதியிலே அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேங்கி நிற்கின்ற கைத்தறி துணி வாங்கிட கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய் முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளதும், வேலையில்லா பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் அளிப்பதைக் கோடிட்டுக் காட்டியிருப்பதும், தாழ்த்தப்பட்டோர் நலனுக்குச் சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் தயாரித்துச் செயல்படவிருப்பதும், முறைப்படுத்தப்படாத தொழில்கள் உள்ள தொழிலாளர் நலனுக்குச் சட்டங்கள் கொண்டு வரப்படும் என்று கோடிட்டுக் காட்டியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

கவர்னர் உரையில் பல்வேறு சீரிய திட்டங்களைப் பற்றி எல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். அடுத்து வரப்போகிற வரவு-செலவுத் திட்ட உரையில் முதல்வர் அவர்கள் அறிவிக்கப் போகிற திட்டங்களைப் பற்றி முகப்புரையாக கவர்னர் உரை அமைந்திருக்கிறது. மத்திய அரசை எது எதற்கெல்லாம் தட்டிக் கேட்க வேண்டுமோ அவற்றைப் பற்றிய குறிப்புகளை எல்லாம் வரவேற்று, இந்த நாட்டில் இருக்கும் எல்லா அரசியல் கட்சியினரும் எங்களுடைய குரலுக்கு இணை குரலாக, கூட்டுக் குரலாக எழுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு,—கப்பல் பேர ஊழலைப் பற்றிச் சொன்னார்கள், கப்பல் வெளியே தொங்க விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களை மக்கள் வீழ்த்திவிட்டார்கள், சட்ட மன்ற தேர்தலிலே என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

(முற்பகல் 10.40)

**திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் வரலாற்றிலே மிகச் சிறப்பு மிகுந்தது. பிப்ரவரி மாதம் 17-ம் தேதி அநியாயமாக, அக்ரமமாக இந்த மாநில ஆட்சி கலைக்கப்பட்டது. தமிழக மக்கள் பேரெழுச்சி கொண்டு அதே ஆட்சியை இந்த அரியாசனத்தில் அமர்த்த வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அப்படிப்பட்ட பேரெழுச்சிக்குக் கை கொடுத்த ஜனநாயகக் கட்சிகளுக்கு அந்த ஜனநாயகக் கூட்டணியில் சேர்ந்து நின்று செயலாற்றியதற்கு மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச்சு மாதம் 2-ம் தேதி சென்னை நகர் அண்ணா சாலையில் சிந்திய ரத்தம் வீண் போகவில்லை என்பதனை இந்தத் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டியுள்ளது. தமிழ் நாட்டில் தேர்தல் முடிந்த பின்னரும் பல உயிர்கள்





பலியாயின. அவர்களுடைய தியாகங்களுக்கு, மகத்தான தியாகங்களுக்கு மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வீர வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரை மிக நாசூக்காக, மிக முக்கியமான சில கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளது. 1969 ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த முதலீட்டில் சுமார் 8 சதவிகிதம் தமிழ் நாட்டில் செய்து இருந்தது. அது 1979 ஆம் நிதி ஆண்டின் முடிவில் 4 சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்பதைப் பார்க்கிறபோது பெரும் தொழில்கள் தொடங்குவதில் தமிழ் நாடு எந்த அளவிற்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியபோது பார்த்தால், அவர் ஏதோ கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டு இருக்கிறாரோ என்று நினைக்கிற அளவிற்கு இருந்தது. இன்றையதினம் வந்து இருக்கும் பட்ஜெட்டைப் பார்க்கிறபோது, நம்முடைய பட்ஜெட் எந்த அளவிற்கு அமைய இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். குதிரை கீழே தள்ளியது மட்டுமல்ல, குழியையும் தோண்டிக்கொண்டு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மத்திய அரசு பெட்ரோல் மீது போட்டு இருக்கும் வரி, ரூ. 3,100 கோடி. உரத்தின் மீது போட்டிருக்கும் வரி ரூ. 500 கோடி, ரயில்வே கட்டணம் ரூ. 201 கோடி; வரி உயர்வு 280 கோடி ரூபாய், பற்றாக்குறை மூலமாக 1,417 ரூபாய் ஆக மொத்தம் 5,503 கோடி ரூபாய், இந்த ஆண்டு இந்திய மக்கள் புதிய வரியைக் கொடுத்துத் தொலைய வேண்டும்.

இப்படி வரியைப் போட்டு விட்டு, நமக்குக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுத்து விட்டால் பரவாயில்லை. அப்படியும் தராமல் இருந்து விட்டால், நம்முடைய தலையில், தமிழக மக்கள் தலையில் 350 கோடி ரூபாய் விழுகிறது. அதை நாம் செலுத்தித் தீரவேண்டும். இதன் காரணமாக விலையேற்றமும் மக்களைத் தாக்கும், சிறு தொழில்களும் சிதையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் மாநில அரசு பட்ஜெட்டை சூறையாடப்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அரசின் வருவாயும் பெட்ரோல் முதலியவற்றிற்கு அதிகம் செலவழிப்பதன் மூலம் குறைகின்ற காரணத்தால் சிறு தொழில்கள் வளர்வதற்குக் கூட வழி இல்லாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய பங்குத் தொகையை மத்திய அரசு ஒதுக்கிக் கொடுத்தால், சிறு தொழில்கள் அதிகம் வளர்வதற்கு வழிகோலும்.

ஆகவே, இந்த நிலையை மாற்ற தகுந்த குரல் எழுப்ப வேண்டும். நமக்கு உரிய பங்கைப் பெற வேண்டும். அந்த வகையில் ஜனநாயக சக்திகள் ஒன்று சேர்ந்து குரல் எழுப்புகிற வகையில் இந்த அறிக்கையில் இருக்கும்படியான நோக்கம் வரவேற்கத் தகுந்த ஒன்று என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநில அரசுக்கும் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் மாநில அரசுக்குத் தமிழ் நாட்டில் கிடைக்கும் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் வருவாயை நாம் புறக்கணித்து வருகிறோம், பூரண மது விலக்கு என்ற பெயரால். ஆகவே நாம் கைக் கொண்டு வரும் பூரண மது விலக்கை ரத்து செய்து விடவேண்டும். அதன் மூலமாக நாட்டில் உள்ள லஞ்ச லாவண்யங்கள் அகற்றப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதன் மூலம் ஒரு புதிய வருவாயை நாம் பெற இயலும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்'ம் என்கிற முறையில் அறிவிப்புக் கொடுத்து இருப்பது வரவேற்கத் தக்கது. இருப்பினும் பல்லாயிரக்கணக்கான, பல லட்சக்கணக்கான வயது வந்த ஆணுக்கும் பெண் ஊக்கும் வேலை அற்று இருக்கும் இளைஞர்களுக்கும் ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு மாநில அரசுகள் இதனைச் செய்து இருக்கின்றன. நம்முடைய அரசும் அதனைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக ஆக்காமல், பஞ்சாயத்து, யூனியன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாத்திரம் அரசு ஊழியர் களாக ஆக்கப்பட்டு இருக்கிறது. அதை வரவேற்கிறேன். இருப்பினும், நகராட்சி, மாநகராட்சி, தனியார் பள்ளிகள் ஆசிரியர்களை விட்டு விட்டது ஏன் என்று புரியவில்லை. அடுத்தபடியாக, அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். அனைத்து ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முறைப்படுத்தப்படாத தொழில்களில் வேலை செய்து வருபவர் களுக்கு நன்மை செய்வோம் என்று கூறப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அதிலே ஒன்று நம்முடைய சென்னை மாநகரில் ஏற்றுமதி செய்யப்படும் 'ரெடிமேட் டிரஸ்'—ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பெண்கள் பற்றியது. பெரும்பாலும் பெண்களே அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்கள் மாதம் 60 ரூபாய், 70 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு வேலை செய்கிறார்கள்.





முதலாளிகள் பல இலட்சக்கணக்கான செல்வங்களைத் திரட்டி, வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்து, இன்று இந்த நாட்டிலே கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழில் தமிழ்நாடு பூராவும் பல்வேறு இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக சென்னை மாநகரில் எழும்பூரில் பணியாற்றும் சகோதரிகள் இன்றைக்கு மிகவும் கஷ்டத் திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வசதிகளும் சலுகைகளும் கிடைக்க முயற்சி செய்து, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின்கீழ் நாம் கொண்டுவந்த சட்டம் காலாவதியாகி விட்டது, அரசு போனதினாலே. அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அது ஆய்வுக் குழுவின் பரிசீலனையில் இருந்தது. இடையிலே அரசு போனது. அதனால் அந்தச் சட்டம் காலாவதியாகிவிட்டது. அதையும் புதுப்பித்து கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பீடித் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்டம் சில இடங்களில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட அமைப்புகளைக் கண்காணித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு முக்கியமான பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிலே மாணவர்களும் பெற்றோர்களும் பாடப் புத்தகங்களும் நோட்டுகளும் கிடைக்காமல் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இன்றைக்கு இந்த அரசு உருவான உடனேயே இந்தப் பிரச்சனைகளை எல்லாம் தீர்க்க முடியாது. என்றாலும் அதில் இருக்கிற சிக்கலை கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்து, இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

இன்றைக்கு மின் விளக்குகள் கிராமப்புறங்களில் சரியாக எரியவில்லை. அரசு அதிலே போதுமான அக்கறை காட்டி, கிராமப்புறங்களில் எல்லாம் நல்ல முறையிலே மின் விளக்குகள் எரியச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே திண்டுக்கல் நகரில் சுமார் 1½ இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. இதைப் போன்ற பல்வேறு நகரங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலே குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனைகளிலே போதுமான அளவுக்கு மருந்துகள் கிடைக்க உதவி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, அந்த மருந்துகள் நோயாளிகளுக்குக் கிடைக்க உத்தரவாதமும் அளிக்க வேண்டும். அதற்குரிய கண்காணிப்பு இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது இந்தத் தேர்தலிலே நாம் பெற்ற படிப்பினை என்ன என்பது பற்றி. நான் இந்தச் சட்டமன்றத்தில் ஏற்கெனவே உறுப்பினராக இருந்திருக்கிறேன். பிப்ரவரி மாதம் சட்டசபை நடந்துகொண்டிருந்தது. நானும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்பதைப்போல நடந்து கொண்டிருந்தது. கடைசியாக சென்ற பிப்ரவரி மாதம் 17-ந் தேதி இந்தச் சட்டமன்றத்தை அநியாயமாக அக்கிரமமாகக் கலைத்துவிட்டார்கள் என்ற செய்தி சோதிர்ச்சியைத் தந்தது. இதை ஒரு சர்வாதிகாரம், எதேச்சதிகாரம் என்று சாடுகிறோம். அன்றைய தினம் இதைக் கண்டித்தோம். தமிழ்நாட்டு மக்களிடம் சொன்னோம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கட்சி இரண்டரை ஆண்டுக் காலம் ஆட்சி செய்திருக்கிறது. மேலும் இரண்டரை ஆண்டுக் காலம் ஆட்சி செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறது. அதைச் செய்ய விடாமல் இடையிலே கலைத்தார்கள். ஆட்சியைக் கலைப்பதற்கு என்ன குற்றச்சாட்டு இருந்தது? எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் கலைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட நிலை இருந்தால் இங்கே சட்ட ஆட்சி இருக்காது; ஜனநாயகம் இருக்காது; சமஷ்டி முறை இருக்காது. ஆகவே, எதேச்சதிகாரம் என்று சாடுகிறோம்.

பிப்ரவரி மாதத்தில் இதே மன்றத்தில் திரு. உமாநாத் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் இங்கே ஒரு விவாதத்தைக் குறிப்பிட்டார்கள். மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் சென்னையில் வந்து பேசினார்கள். இந்த முதலமைச்சருக்கு ரோசம் இருந்தால் உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் தமிழ்நாட்டு மக்கள் ராஜிநாமா செய்யச் சொல்ல வேண்டும்; அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைத்தான் திரு. உமாநாத் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஒரு மத்திய அமைச்சர் பொறுப்பு உணர்ச்சியுடன் பேச





வேண்டாமா? ஒரு மாநில அரசைக் கவிழ்க்க இவ்வாறு தூண்டி விடுகிற வேலையைச் செய்யலாமா என்று இங்கே கேட்டார்கள். அதையே இன்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். மானம் இருந்தால், ரோசம் இருந்தால் அவர்கள் ராஜிநாமா செய்ய வேண்டும், செய்வார்களா என்று நாம் கேட்கலாம். இப்படியே போனால் அது எங்கே போய் நிற்கும்? ஒரு கட்சி தோற்று விட்டால் உடனே அந்த ஆட்சியைக் கலைப்பது என்று இருந்தால் இந்த நாட்டிலே சமஷ்டி ஆட்சி என்பது நிலைபெற்றிருக்க முடியுமா? ஜனநாயகம் இருக்க முடியுமா?

திரு. நா. சுந்தரராஜ்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் ஈல்டு ஆகவில்லை; உட்காருங்கள்.

திரு. என். வரதராஜன்: ஆகவே இந்த ஆட்சியைக் கலைத்தது சரியல்ல என்பதை எடுத்துக்காட்டும் வகையில் 4½ கோடி மக்களின் பேரெழுச்சிக்குப் பின் இன்றைக்குத் தமிழ் நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பெருமையோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதைத்தான் இந்த இடத்திலே சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சி பற்றி அதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356-வது பிரிவு பற்றிக் கவலைப்படுகிறோம். (மணி யடிக்கப்பட்டது).

(முற்பகல் 10.50)

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே. பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் இங்கே சட்டசபையைக் கலைத்தது சம்பந்தமாகச் சொன்னார்கள். ஆனால் 1977 ஆம் ஆண்டு மத்தியிலே ஜனதாக் கட்சி அரசுப் பொறுப்பிலே இருந்தபோது ஒன்பது மாநிலங்களைக் கலைத்தார்களே . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலிலே எவ்வாறு இருந்தது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மத்திய அமைச்சரை இந்த அவையிலே அவமானகரமாக, அசிங்கமாக விமரிசனம் செய்வதைத் தாங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது ஒன்றும் அவமானம் அல்ல.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பற்றி நான் அதிகமாகக் கவலைப்படவில்லை. அவர்களுடைய கொள்கைகளை நாங்கள் புரிந்துகொள்ளுகிறோம். ஆனால் அவர்களுடன் கூட்டு சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைகள் பற்றித் தான் நான் நட்பு முறையிலே கவலைப்படுகிறேன். அண்ணாவினுடைய கொள்கைகளைப் பின்பற்றுவதாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள். அண்ணா அவர்களுக்குப் புகழ் பல்வேறு துறைகளிலே வந்திருக்கலாம். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், இரண்டு முக்கியமானவற்றை மனதில் கொண்டிருக்கிறோம். அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிலைபெற்றிருந்த காங்கிரஸ் ஆட்சியை, ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டி அகற்றினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையில் அந்த அற்புதமான மாற்றத்தை 1967 ஆம் ஆண்டிலே செய்தார்கள். ஆகவே. அதை அண்ணா அவர்களுடைய அற்புதமான காரியமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையிலே அதனைத் தனது மிகப் பெரிய மூச்சாக அண்ணா அவர்கள் வைத்திருந்தார்கள். மத்தியிலே உள்ளவர்கள் நம்முடைய மாநிலத்தைச் சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாநில சுயாட்சியைப் பாதுகாப்போம் நம்முடைய நிலையைப் பாதுகாப்போம் என்று குரல் எழுப்பினார்களே அந்த இரண்டு குரல் மிக முக்கியமான குரலாக அண்ணா அவர்களுடைய கொள்கையாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதியது. இந்த இரண்டு கொள்கைகளையும் இந்தத் தேர்தல் களத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வாறு அமல் நடத்தியது என்பதை அந்த நண்பர்கள் நட்பு முறையிலே சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கலைஞர் மீது பற்று வைத்திருப்பவன். அவருடைய தேர்தல் பிரசங்கத்தை ரேடியோவிலே கேட்டேன். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை கிண்டல் செய்தார்கள். இந்திய அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடிய 356-வது பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று நமது கட்சியின் சார்பாகக் கேட்ட சமயத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தத்தளித்தது என்றார்கள். அந்தப் பிரசங்கத்தினுடைய தொடர்ச்சியை நான் கேட்டேன். ஒரு மாநில அரசாட்சியை அடாவடித்தனமாகக் கலைக்கும்படி துணை செய்த அந்த 356-வது பிரிவைத் திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஏற்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, எங்களுடைய தலைவர் ரேடியோ உரையிலே சொன்னதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். எங்களுடைய கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் அரசியல் சட்டத்தில் இருக்கின்ற 356-வது பிரிவு நீக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றத்திலே வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அதைவிட என்ன விளக்கம் இன்னும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். பாராளுமன்றத்திலே 356-வது பிரிவை எதிர்த்தோம், அன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துக்கொள்ளவில்லை என்று அவர்கள் ரேடியோவிலே பேசினார்கள். ஆனால் இன்று அந்த 356-வது பிரிவை எதிர்க்கிறாரா, ஏற்கிறாரா என்பதைச் சொல்லாமல் விட்டது சாதாரண விஷயமா? 1977 ஆம் ஆண்டுக்குரிய இந்தச் சட்டமன்ற நடவடிக்கை குறிப்புக்களைப் படித்துப் பார்க்கும்படி நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் ஆதரித்தோம். முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தது பற்றி மாறி மாறிப் பேசினார்கள், எங்களுடைய ஆட்சியைக் கலைத்துவிட்டார்களே என்று. கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் மற்றும் அந்தக் கட்சியிலே உள்ள உறுப்பினர்களும் அதுபற்றிப் பேசினார்கள். அப்படிப்பட்ட கொள்கைகளை வைத்திருந்த நீங்கள் இன்றைக்கு என்ன சொல்கிறீர்கள்? ஒரு மாநிலத்தில் அதிகாரம் படைத்து அதிகமான சீட்டுக்களுடன் உட்கார்ந்திருந்த ஒரு நிலையான ஆட்சியை அகற்றியது பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் ஒரு வார்த்தை சொன்னது உண்டா என்று கேட்கிறேன்.

நீங்கள் அண்ணாவின் கொள்கையைக் கைவிட்டுவிட்டீர்கள். ஜனநாயகத்துக்குப் புறம்பாக சென்றீர்கள், ஆகவேதான் தோல்வி கண்டீர்கள். ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். தேர்தலிலே தோல்வி அடைந்தவர்களை மனம் புண்படச் செய்யவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதவில்லை. நட்போடுதான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய பொதுக் குழுவிலே தீர்மானம் போடுகிறீர்கள். நீங்கள் தோல்விக்கான காரணம் பற்றிப் பரிசீலிக்கிறீர்கள். எதிர்க்கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களுடைய பிரசங்கம் விடுதலையில் வந்திருக்கிறது.

விடுதலையிலே வந்திருக்கிறது, "எம். ஜி. ஆர். கட்சி பொதுமக்களை ஏமாற்றி, வெற்றி வாய்ப்புகளை பெற்று விட்டது. இந்த தோல்வி தமிழக மக்களுக்கிடையிலே இன உணர்வு பாதிக்கப்பட்ட காரணத்தால் ஏற்பட்ட விளைவு என்பதை மறந்து விடக் கூடாது" என்று பேசியிருக்கிறார்கள். இது விரும்பக்கூடியதா? இல்லவே இல்லை. நம்முடைய பேரவையினுடைய தலைவரை நாம் எல்லாம் தேர்ந்தெடுத்து சிம்மாசனத்தில், அமர்த்திய நாளன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். "நாங்கள் எதிர்க்கட்சியாக இருப்போம், எதிரிக்கட்சியாக இருக்க மாட்டோம்" என்று சொன்னார். ஆனால் இன்றைக்கு அவர்கள் இப்படி பேசுவதைப் பார்க்கும் போது நாங்கள் எதிர்க் கட்சி அல்ல; எதிரிக்கட்சியாகத்தான் இருக்கிறோம், எதை வேண்டுமானாலும் கொப்பி விடுவோம் என்பதுபோல இருக்கிறது.

அன்றைக்கு 1977-ல் மலையாளி என்ற பிரச்னையை எழுப்பினார்கள், ஆனால் அது எடுபடவில்லை. மீண்டும் இன்று பார்ப்பனர் என்ற புதுப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர். நான் அவர்களை அன்போடு வேண்டுகிறேன். அவர்கள் தயவுசெய்து இந்த முறையைக் கைவிட வேண்டும். இது பிரச்சினையைத் தடுக்க உதவாது. அதற்குப் பதிலாக பிரச்சினையைத் தூண்டி விடுவதற்குத்தான் இது உதவும். தமிழ் நாட்டிலே 1977 ஆம் ஆண்டு உருவான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பில் திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்களிலே இருந்துதான் பாதிப் பேர் பிரிந்து சென்றார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே தமிழக உழைப்பாளிகள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான தமிழக உழைப்பாளிகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? எந்தத் தமிழர்களைச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை.

ஒன்றை நான் சொல்ல வேண்டும். நன்றி அறிவிப்பு கூட்டத்திலே கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது சொன்னார்கள், "நான் தமிழ்நாட்டின் வீட்டு நாயாக இருப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள்." அவர் அந்த 'நாய்' என்ற வார்த்தையை எப்படி உபயோகப்படுத்தினாரோ, இலக்கியத்தில் அந்த சொல்லின் சிறப்பு பொருள் என்னவோ, எனக்குத் தெரியாது. தமிழ்நாட்டின் வீட்டு நாயாக இருப்பேன்





என்று அவர் சொன்னதை வாழ்த்தி வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் பிப்ரவரி மாதம் 15, 16 தேதிகளில் இந்த ஆட்சியை கலைக்க வேண்டும் என்று டெல்லிக்குப் போய் வேட்டைநாயாக நடந்துகொண்டார்கள். இன்றைக்கு அதை இல்லை என்று சொல்ல முடியுமா?

(மேசையைத் தட்டும் ஒலி)

* **திரு. ஏ. சி. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருமைக்குரிய இந்த மாமன்றத்தின் பேரறிஞர் அண்ணா பெருந்தலைவர் காமராஜ், மூதறிஞர் ராஜாஜி போன்றோர்களின் பேச்சுக்கள் பதிவாகி உள்ள குறிப்பேடுகளில் இந்த எளியவனின் பேச்சும் குறிப்பேட்டிலே பதிவு செய்யும் பேறு பெற்றமைக்கு, காரணமாக இருந்த, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை அவரது காலடியிலே காணிக்கையாக்குகிறேன்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலிலே மக்கள் வாக்களித்தவுடன் அதிகாரம் அவர்கள் கையிலே வந்தவுடன் தமிழக சட்டசபையின் 6வது சட்ட பேரவையின் ஆயுளுக்கு இரண்டரை ஆண்டு காலம் முன்பாக வேட்டு வைத்த நல்லவர்களுக்கு அவர்களுடன் ஒத்துழைத்த, அவர்களுக்கு துணை போன நல்லவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பித்து விட்டார்கள். கலைப்பதற்கான அதிகாரம் அவர்கள் கையில் இருக்கலாம். கலைத்தும் இருக்கலாம் அதற்கு உடந்தையாகவும் இருக்கலாம். ஆனால் அப்படி கலைக்கப் படுவதற்கு முன்போ, அல்லது கலைக்கப்பட்டதற்கு பின்போ இதுவரை இந்த அரசு மீது எந்தவிதமான குற்றமும் சொல்லமுடியாத அளவில் இந்த அரசு மீது களங்கம் கற்பிக்கப்பட முடியாத நிலையில் புரட்சித் தலைவரின் அரசு, நீதியின் அரசாக தர்மத்தின் ஆட்சியாக, சத்தியத்தின் ஆட்சியாக அமைதியின் ஆட்சியாக நடந்திருக்கிறது. அத்தகைய தர்மத்தின் தலைவன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்தநேரத்திலே தமிழக பொது மக்களுக்கும் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகவாதிகளின் கழுத்திலே பூமாலையாக அலங்கரிக்கும் இந்திய அரசியலைப்பின் 356வது பிரிவின் சட்டம் ஒரு சில சர்வாதிகாரிகளின் கழுத்திலே பாம்பாக மாறி, வேண்டாதவர்களையும் பிடிக்காதவர்களையும் பழிவாங்கும் அந்த கொடிய சட்டம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து மாற்றப்பட வேண்டும், திருத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி

[திரு. ஏ. சி. சண்முகம்] [1980 ஜூன் 26

அதற்கு இந்த மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள் என்று நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூட பல கட்டங்களில், பல முறை இதை வலியுறுத்தி இங்கே பேசியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

ஆளுநர் உரையில் பல நல்ல கருத்துக்கள், பல நல்ல திட்டங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. எங்கே கூட்டாட்சி வந்தால் மும்மொழிக் கொள்கை திட்டம் புகுத்தப்படுமோ என்று அஞ்சி தமிழக மக்கள் தமிழகம் என்றென்றும் அண்ணாவின் பூமிதான், அண்ணாவின் பூமியாகத்தான் இருக்கும் என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பேரறிஞர் அண்ணாவின் உயிர் மூச்சாகிய இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை இங்கே அறிவித்தபோது எங்களைப் போன்ற இளைஞர்களின் ரத்தநாளங்கள் சூடேறி புதிய உத்வேகத்தில் நாங்கள் இருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக தமிழ் சமுதாயமும், மாணவர் சமுதாயமும் என்றென்றும் புரட்சித் தலைவர் அரசுக்குக் கடமைப் பட்டிருக்கிறது.

வேலைக்கு உணவுத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்ற இந்த அரசு பாடுபடும் என்று அறிவித்திருப்பது உள்ளபடியே பாராட்டுக் குரியது. மக்கள் அதை பெருமளவில் பாராட்டிக் கொண்டும் இருக்கிறார்கள். அதைப் பற்றி பெருமையோடு பேசிக்கொண்டும் இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"கொடிது கொடிது வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்று சொல்வதைப் போன்று 11 ஆண்டுகள் பள்ளியிலும், 4 ஆண்டு காலம் கல்லூரியிலும் படித்து வேலையில்லாமல் கஷ்டப்பட்டு நொந்து போயிருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வாழ்க்கையில் ஒளியேற்ற வறுமையை உணர்ந்த, தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் ரூ. 50 அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று அறிவித்ததை ஒரு சிலர் கிண்டல் செய்தார்கள். கேலி செய்தார்கள், நையாண்டி செய்தார்கள். பட்டதாரிகளை வீணாக சோம்பேறிகளாக ஆக்குகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் மீண்டும் அரியணையில் புரட்சித் தலைவர் அவர்கள் அமர்ந்தவுடன் வறுமையை உணர்ந்த, வறுமையின் சொந்தக்காரராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் அந்தத் திட்டத்தை அமுல் நடத்த இருப்பது



1980 ஜூன் 26] [திரு. ஏ. சி. சண்முகம்]

கண்டு எங்களைப் போன்ற இளைஞர் சமுதாயமும், படித்துக் கொண்டிருக்கிற மாணவர்களும் இத்திட்டம் காரணமாக ஒரு புது உத்வேகம் பெறுகிறார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

தமிழக அரசும் கேரள அரசும் செய்து கொண்டுள்ள மின்சாரம்— அலுமினியம் என்னும் பண்டமாற்று ஒப்பந்தத்தை மைய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை உறுப்பினர்களும் ஒரு வேண்டுகோளாக விடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் தமிழ்நாடு எந்த அளவிற்கு வளம் பெறும், தமிழ்நாட்டிற்கு எந்த அளவிற்கு நன்மைகள் பயக்கும் என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

கைத்தறித் துறையை எடுத்துக் கொண்டால், கைத்தறித் துறை மேம் பாட்டிற்காக புரட்சித் தலைவர் அரசு சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 5.77 கோடி ஒதுக்கி அந்த நிறுவனத்தை சிறப்புள்ள நிறுவனமாக, உயர்ந்த ஒரு நிறுவனமாக மாற்றியமைக்கு நெசவாளர் வர்க்கம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 1975-76ல் 17 கோடி ரூபாயாக இருந்த விற்பனை அளவு 1979-80ல் 36 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருப்பதைக் காணும்போது புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கி ஆசிரியர் பெரு மக்கள் வாழ்வில் விளக்கேற்றிவைத்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஆசிரியப் பெருமக்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்கு உரிமை கொடுத்து பல மாநிலங் களுக்கு வழிகாட்டியாக இருக்கிற வகையில் புரட்சிகரமான ஒரு திட்டத்தை அறிவித்திருக்கும் புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல கருத்துக் களை எடுத்துச் சொன்னார்கள். கப்பல் பேர ஊழலைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் நாட்டில் கப்பல்பேரத்தில் ஊழல் செய்ய முயற்சித்தார்கள் என்றுதான் கலைஞர் இங்கே குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் பல கருத்துக் களை வெளியிட்டார்கள். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியதை முதல் அமைச்சர் அவர்கள் நிறைவேற்றவில்லை என்றார்கள். நான் இந்த

நேரத்தில் ஒன்றை இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறன். திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் அவர்களது கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு அறிக்கை விடுத்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம், விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள் அது குறித்து அண்ணா பேப்பரிலும், மக்கள் குரலிலும், தினமும் ஆர். வி. சுவாமிநாதன் கொள்கை என்னவாயிற்று என்று தினமும் கேட்டுக்கொண்டதற்கு பதில் தராமல் பிறகு நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொன்னார்கள், எங்களால் முடியாது என்று. அதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் வாக்குப் பெட்டியிலே ஊழல்கள் நடந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆளுநர் அவர்கள் அமர்ந்திருக்கின்ற அந்த ஆட்சிக் காலத்திலேதான் இது ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அடுத்து மூதுகுளத்தூர் தொகுதியிலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடந்த தேர்தலில்தான் காங்கிரஸ் ஓட்டுப் பெட்டிக்குள் செருப்புத் துண்டைப் போட்டு சிங்கம் பெட்டிக்கு ஓட்டு போட்ட வரலாறு எல்லாம் நடந்திருக்கிறது இதையும் உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகபடுத்த விரும்புகிறேன். மேலும், அண்ணா நகர் தொகுதியிலே ஓட்டுப் போடப்பட்டதைப் பற்றியும் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே பல நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கு, அவர்கள் எண்ணத்திற்கு மீண்டும் நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள் என்பதைக் கூறி ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

* **திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள நிற்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே தேர்தல் முடிவுகளைப் பற்றி சிறந்த முறையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்திலே இருக்கக்கூடிய 4½ கோடி மக்கள் 1980-ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற தேர்தலில், மத்திய அரசுக்கு 1977-ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்று, மக்களுடைய ஆதரவைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தது



சரியல்ல, இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல், இது சர்வாதிகாரத்திற்கு அடிகோலக்கூடிய செயல் என்பதைத் தமிழக மக்கள் திட்டவட்டமாக தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். இது ஜனநாயகப் படுகொலை, எனவே இதை அங்கீகரிக்கவில்லை என்பதை தமிழக மக்கள் தங்கள் தீர்ப்பாக அளித்திருக்கிறார்கள். இது இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, 4½ கோடி தமிழக மக்கள், அதிலேயும் குறிப்பாக அடித் தட்டிலே இருக்கின்ற சாமான்ய மக்கள், உழைக்கின்ற மக்கள், இந்த அரசின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு, இந்த அரசுக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். இதையும் ஆளுநர் உரையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் பிரச்னைகளை, விவசாயிகளின் பிரச்னைகளை, விவசாயத் தொழிலாளர்களின் பிரச்னைகளை, கைத்தறித் தொழிலாளர்களின் பிரச்னைகளை, மற்றும் உழைக்கின்ற மக்களின் பிரச்னைகளை தீர்க்கக்கூடிய முறையில், அவைகளை அணுகுகின்ற முறையில் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறியோரின் வாழ்வு உயரும் என்று தமிழக மக்கள் இந்த அரசை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த அரசிடம் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கையை நிறைவேற்றக்கூடிய முறையிலே, காரியங்கள் நடைபெறும் என்று இதிலே தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையிலேதான் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்கள் வாழ்வு உயருவதற்காக "வேலைக்கு உணவுத் திட்டம்" மீண்டும் அமுல் படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே முறையிலேதான் தமிழகத்திலே உள்ள வேலையில்லாத பட்டதாரிகளுக்கு நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது உடனடியாக வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல.

இன்றையதினம் வேலைவாய்ப்பைத் தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்துள்ள லட்சக்கணக்கான இளைஞர்கள் காத்து இருக்கிறார்கள். அவர்கள் அரசு அலுவலகங்களில் வேலை பெறும் வயது வரம்பு 25 என்று இன்றையதினம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பு தேடிதரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்யும் அனைவருக்கும் வயது வரம்பு குறுக்கீடு இல்லாத அளவுக்கு, அவர்களுக்கு வேலை கிடைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, தமிழகத்திலே கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ்க மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு இல்லாது, சீரான முறையிலே உணவுப் பொருள்கள் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிலும்,

குறிப்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக 105 ரூபாய் விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டு, சீரான முறையிலே அதற்கான ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

இன்றையதினம் மத்திய அரசின் நடவடிக்கையின் விளைவாக உரத்தின் விலை உயர்ந்திருக்கிறது. எரிபொருள், டீசல் போன்ற பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல், கரும்பு போன்ற பொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கிடைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. மத்திய அரசு ஏற்கனவே நெல்லுக்கும் மற்ற பொருள்களுக்கும் நிர்ணயித்திருக்கும் விலையை மாற்றியமைக்கும் முறையில், தமிழகத்தின் விவசாயிகள் குரலை எதிரொலிக்கும் முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுத்து அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களைக் கொள்முதல் செய்யவேண்டும்.

மற்றொரு விஷயத்தையும் மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பத்திரிகையில் படித்திருப்பீர்கள். சர்க்கரை விலை ஒரு குவிண்டால் 670 ரூபாய் அளவுக்குச் சென்றிருக்கிறது. அதே நேரத்தில் சர்க்கரைக்குத் தேவையான மூலப்பொருள் கரும்புக்கு விலை உயரவில்லை. அன்றைக்கு என்ன விலை கரும்பு விவசாயிகளுக்குத் தரப்பட்டதோ அதே விலைதான் இன்றைக்கும் கொடுக்கப்படுகிறது. அதே போன்றுதான் பருத்தி போன்ற பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசிடத்தில் இருக்கிறது. மத்திய அரசு கொள்கையை மாற்ற உறுதியான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறு விவசாயிகளை எடுத்துக் கொண்டால் தமிழகத்தைப் பொறுத்த வரை 9 லட்சம் விவசாயிகள் பம்ப் செட்டுகள் மூலம் விவசாயம் செய்கிறார்கள், இந்திய நாட்டிலுள்ள பம்ப் செட்டுகளில் சரிபாதிக்கு மேல் தமிழகத்தில் இருக்கின்றன. சிறு விவசாயிகள் கடன்பட்டு விவசாயம் செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய தானியம், நெல், கரும்பு தேசத்தின் விவசாய உற்பத்தியை, வருமானத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. அவர்கள் தங்கள் சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய மட்டும் விவசாயம் செய்ய வில்லை. மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய தேசியக் கடமையை. நிறை வேற்றி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசியக் கடமையாற்றக் கூடியவர்



களுக்கு நியாயமான கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்க வேண்டுமென்பதில் மத்திய அரசின் கொள்கை எதிரான நிலைமையில் இருக்கிறது என்பது தெரியும். அந்த விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

இன்றையதினம் கூட்டுறவு நிறுவனங்கள் சம்பந்தமாகத் தேர்தல்கள் நடத்த கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நிறுவனங்களை எதேச்சதிகார முறையில் அதிகாரிகள் நிர்வகித்து வருகிறார்கள். அவற்றை ஜனநாயகப்படுத்தவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்வை நடத்தி ஜனநாயகப்படுத்த வேண்டும்.

கைத்தறி சம்பந்தமாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டில் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் இருப்பவர்கள் கைத்தறித் தொழிலாளர்கள். கைத்தறித் துணித் தேக்கம் இருக்கிறது. அதைக் கொள்முதல் செய்ய ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், இன்றைய தினம் பிரதம சங்கங்களில் 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதுமானதாக இல்லை. அதிகப்படியான தொகை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நெசவாளர்கள் சங்கங்களில் இருந்து துணியைக் கொள்முதல் செய்வதற்கான கொள்கையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். கோவாப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்யக்கூடிய விலை சங்கங்களைப் பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அடக்க விலைக்கும் குறைவான முறையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அடக்க விலையிலிருந்து 9 சத விகிதமும், 10 சத விகிதமும், குறைத்து கொள்முதல் செய்யப்படுகின்ற நிர்பந்தம் இருக்கிறது. இம்மாதிரி நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நமது தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள், பெரும் அளவிலான எண்ணிக்கையிலே விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக சரியான முறையிலே வழிமுறைகள் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

கேரள மாநிலத்திலே உள்ளதைப் போல நல்ல முறையிலே பயன்படுகின்ற விதத்திலே ஒரு முழுமையான சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தொழில் முதலீடு சம்பந்தமாக மத்திய அரசு மாற்றாந்தாய் போல் நடந்து கொள்கிறது என்பது இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 1969 ஆம் ஆண்டிலே 8 சதவீதமாக இருந்த முதலீடு, 1979 ஆம் ஆண்டிலே 4 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணத்தினால் தமிழகத்திலே தொழில் வளர்ச்சி குன்றி, வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. தொழில் முதலீட்டை அதிகரிப்பதற்கான முறையிலே தமிழக அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே தமிழக அரசு செயல்பட வேண்டும்.

அடுத்து, கோவை, திருச்சி பல்கலைக் கழகங்கள், காரைக்குடியிலே ஒரு பல்கலைக் கழகம், தமிழ் பல்கலைக்கழகம் இவைகளை எல்லாம் உருவாக்குவது பற்றி இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது என்பது இதிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல மாற்றம்தான். ஆனால் அது மட்டும் போதாது. சில உறுப்பினர்கள் பேசியபோது குறிப்பிட்டதைப்போல் நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, கூட்டுறவு நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களும் அரசின் திட்டங்களை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்கிறார்கள், அவர்களின் நிலையையும் உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஊராட்சி மன்றத் தேர்தலிலே வாக்காளர்களின் வயதை 18 ஆக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், ஊராட்சிகளுக்குத் தேர்தல் விரைவிலே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தேர்தல்கள் டிசம்பர் மாதத்திற்குள் நடைபெறுவதன் மூலமாக—தமிழகத்திலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலே அமைந்த ஜனநாயகப் பாதுகாப்பு அணி மக்களின் ஆதரவைப் பெற்றதைப்போல—18 வயதாக குறைப்பதன் மூலமாக அந்தத் தேர்தலிலே இந்த அணியை வெல்வதற்கு எந்தச் சக்தியாலும் முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் சம்பந்தமாக ஐந்து ஆண்டுத் திட்டம் உருவாக்கப்படும் என்று இந்த அறிக்கையிலே சரியான முறையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, குடியிருப்பு மனைகள் வழங்குதல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தருதல், அவர்களுக்காக சாலைகள் அமைத்துத் தருதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஐந்து ஆண்டு திட்டத்தின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே சந்தர்ப்பத்திலே இன்றைக்குத் தமிழகத்திலே தாழ்த்தப்பட்டோர் பலர் கொடுமைகளுக்கு ஆளாகிற நிலைமை இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர் வட்டத்திலே குளப்பாடி என்ற கிராமத்திலே கேணியிலே நான்கு அரிசன இளைஞர்கள் குளிக்கச் சென்றபோது அவர்கள்மீது மின்சாரத்தைப் பாய்ச்சியதால் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற சோக நிகழ்ச்சி சில தினங்களுக்கு முன்னாலே நடந்திருக்கிறது. அதைப் போலவே அவநாசித் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாத்து நின்ற கோபால் என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இதை சமுதாயப் பிரச்சினையாகக் கருதி அவர்களுக்குப் பாதுகாப்புத் தர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்கள் நலன் சம்பந்தப்பட்ட வரையிலும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. சக்தி பைப்ஸ் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டு இருக்கிறது. அதை தமிழக அரசு ஏற்று அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறித் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் இப்படிப்பட்டவர்கள் அன்ஆர்கனைஸடு தொழிலாளர்கள் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்காக எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்காகத் தேவையான நடவடிக்கைகளையும் சட்டங்களையும் நிறைவேற்றி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே நாம் எவ்வளவு பேசினாலும் இந்த மாநில நிர்வாகப் பொறுப்பை இந்த அமைச்சரவை ஏற்றிருக்கிறது. சமீபத்திலே மத்திய அரசு டீசல் விலையை, பெட்ரோல் விலையை உயர்த்தியிருக்கிறது, இரயில்வே கட்டணங்களை உயர்த்தியிருக் கிறது, மற்றப் பொருட்களின் விலைகளையும் உயர்த்தியிருக்கிறது, இப்படி விலைகளை உயர்த்தியிருப்பதன் காரணமாக ஐந்து ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மக்கள்மீது சுமை ஏற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சுமை தமிழக

(முற்பகல் 11-20)

மக்கள் மீதும் விழுந்து இருக்கிறது. ஆகவே, நாம் என்னதான் தமிழக மக்களுக்கு நிவாரணம் தரவேண்டும், நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும், அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்பினாலும்கூட, மத்தியப் பேரரசின் கொள்கைகள் நம்மை அந்தக் காரியங்களைச் செய்ய விடாத முறையில் இருக்கின்றன. ஆகவே, மத்தியப் பேரரசின் இந்தக் கொள்கையை, இந்த வரி விதிக்கும் கொள்கையை, மக்கள்மீது சுமை விதிக்கும் இந்தக் கொள்கையை மாற்ற நாம் தமிழகத்திலே மட்டும் நின்று அதற்கான இயக்கத்தை நடத்திவிடுவது போதாது. இன்றையதினம் தமிழகத்தில் உள்ள ஜனநாயக சக்திகளையெல்லாம் ஒன்றுதிரட்டி, இந்திய நாடு முழுவதும் இந்தக் கொள்கையைக் கொண்ட சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற அந்தக் கொள்கைக்காக ஒரு உருவான போராட்டத்தை, இயக்கத்தை நடத்தும் முறையிலே நம்முடைய மாநில அரசு மற்ற மாநில அரசுகளோடு சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. த. இராமசாமி : மாமன்றத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் சட்டமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த இராமநாதபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த ஜனநாயகத்தின் காவலர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டரை ஆண்டுக் காலம் தமிழகத்தில் ஒரு சீரான ஆட்சி, சிறப்பான ஆட்சி, நேர்மையான ஆட்சி, பழுதற்ற ஆட்சி, ஏழை எளிய மக்களுடைய ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆட்சி இரண்டரை ஆண்டுக் காலமாகத் தமிழகத்திலே நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியைச் சந்தித்து விட்டது என்பதற்காக இராஜினாமா செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும், இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் இங்கே கடுமையாகக் குரலெழுப்பினார்கள். அந்த நேரத்திலேயும்கூட நாங்கள் சொன்னோம், நாடாளுமன்றத் தேர்தல் என்பது வேறு, சட்டமன்றத் தேர்தல் என்பது வேறு என்ற விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியும்கூட, நீங்கள் ஆட்சியிலேயிருந்து இறங்கித்தான் ஆக வேண்டுமென்று குரலெழுப்பினார்கள். மத்தியப் பேரரசும் அதற்குத் தலைவணங்கும் வகையிலே இங்கே இருந்தவர்கள் தூது



வர்களாக அங்கே சென்று, தமிழகத்தில் உள்ள ஆட்சியைக் கலைக்கும் செயலில் ஈடுபட்டு ஜனநாயகத்தின் குரல்வளையை நெறித்தார்கள். தர்மத்தின் ஆட்சி, புரட்சித் தலைவரின் ஆட்சி கலைக்கப்பட்டது.

மூன்று மாத காலம் இங்கே கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆட்சி எந்த அளவிற்கு நடந்தது என்பதையெல்லாம் நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்ற நிலை இல்லை. அந்த அளவிற்கு நடந்து கொண்டு இருந்தது. ஏழை எளிய மக்களின் பிரதிநிதியாகச் சென்று, நடக்கின்ற அக்கிரமங்களை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பு இல்லாத வகையில், ஜனநாயக ஆட்சி இல்லாத வகையில் நடந்துகொண்டிருந்தது. இன்றைய தினம் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, ஆட்சியைக் கலைத்தது அக்கிரமச் செயல், தர்மத்தின் ஆட்சியைக் கலைத்ததற்காகச் சரியான தண்டனை தருகிறோம் என்று தமிழக மக்கள் தீர்ப்பு வழங்கினார்கள். புரட்சித் தலைவர் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைய தமிழக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையான வகையில் இங்கே அமர்த்தியிருக்கிறார்கள். இவ்வாறு புரட்சித் தலைவர் தலைமையில் ஆட்சியை அமைத்துத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பெரும்பான்மை பெற்று அமைந்திருக்கின்ற இந்த ஆட்சி கழகம் ஆட்சிக்கு வந்திருக்கிறது. அன்றையதினம் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததைக் காரணமாகச் சொல்லி, இராஜினாமா செய்யுங்கள் என்று சொன்ன அந்த நண்பர்களை, சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றையதினம் சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை பெற்றிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக, இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் சொல்லி இராஜினாமா செய்ய சொல்லுங்கள், பெரும்பான்மை நாங்கள் பெற்றிருக்கிறோம், எனவே மீண்டும் தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்கிறார்களா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பெரும்ான்மை பெற்று அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியினுடைய முன்னுரையாக, அடுத்து வரவிருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னுரையாக, முகப்புரையாக நாங்கள் என்னென்ன செய்ய இருக்கிறோம் என்பதைக் கவர்னர் உரையிலே மிகத் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். பட்டதாரிகளுக்குச் செய்திருந்த அறிவிப்பு ஆளுநர் ஆட்சிக் காலத்திலே முடக்கி வைக்கப்பட்டிருந்தது. அதை இன்றையதினம் செயலாற்றிருக்கிறோம் என்பதை இந்த உரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றைத் துவக்கவிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்து, பல்வேறு நெசவாளர்களின் பிரச்னைகள், விவசாயிகளின் பிரச்னைகள் ஆகிய இவற்றிற்கெல்லாம் முடிவு காண இந்த ஆளுநர் உரையில் திட்டங்கள் தீட்டப் பட இருக்கிறது என்று தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக நான் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியிலே ஆளுநர் ஆட்சியிலே நடந்த ஒரு கொடுமையை இந்த நேரத்திலே நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சொல்வதுதான் என்னுடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன். இராமநாதபுரம் தொகுதியிலே "அழகன்குளம்" என்ற ஒரு கிராமம் இருக் கிறது. இஸ்லாமியப் பெருமக்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு கிராமம் இது. அந்தக் கிராமத்திற்கு 3,000 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்பட வேண்டும். கெரசினுக்குப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்திலே, எங்கே அனுப்பினார்கள்? ஆனால், ஆளுநர் ஆட்சியில் 200 லிட்டர் மண்ணெண்ணெய்தான் அக் கிராமத் திற்கு வழங்கப்பட்டது. கரண்ட் கட்டுப்பாடு அப்பொழுது அதிகமாக இருந்தது. ஆகவே, இரவு நேரங்களில் மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலைதான் அங்கே இருந்தது. ஆகவே, அங்கே இருக்கக் கூடிய கிராம மக்கள், அது சம்பந்தமாக, மாவட்ட ஆட்சி அதிகாரிகளிடம், தந்திகள் மூலமாகவும் மனுக்கள் மூலமாகவும் தெரியப்படுத்தினார்கள். எங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மண்ணெண்ணெயைக் கள்ளச் சந்தையிலே விற்று விடுகிறார்கள்—எங்களுக்கு 200 லிட்டர்தான் விற்கிறார்கள். எங்களுக்கு 3,000 லிட்டர் தேவைப்படுகிறது. ஆகவே, இதற்கு ஒரு முடிவெடுத்தாக வேண்டுமென்று மனுக்கள் மூலமாகவும், தந்திகள் மூலமாகவும் மாவட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார்கள். ஆனால் என்ன நடந்தது? அந்த மனுக்கள், தந்திகள் எல்லாம் குப்பையிலே போடப்பட்டன; கேட்பாரற்ற நிலையில் கிடப்பிலே போடப்பட்டன. ஆகவே, அந்த கிராம மக்கள் ஒரு முடிவெடுத்தார்கள். அரசாங்க அதிகாரிகளுடைய கவனத்தை நாம் ஊர்ப் பக்கம் ஈர்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கூடிப் பேசி ஒரு முடிவெடுத்தார்கள். இராமநாதபுரம் வழியாகச் செல்லும் பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்சை நிறுத்தி வைக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை).

அப்படி நிறுத்தி வைத்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருவார்கள், விவரம் கேட்பார்கள், நாம் சொல்லலாம், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும்





என்று முடிவெடுத்தார்கள். அதன் பிரகாரம், அவ்வழியாகச் சென்ற ஒரு பஸ்சை நிறுத்தி வைத்தார்கள். பஸ் நிறுத்தி வைக்கப்பட்டது, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பஸ். எனவே, பாண்டியன் போக்குவரத்து கழகத் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதாவது இராமநாதபுரத்திலுள்ள பாண்டியன் போக்குவரத்துக் கழகத் துறை மேலாள ருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் காவல் துறைக்குத் தெரிவிக்கிறார். காவல் துறையினர் அங்கே போகிறார்கள். அங்கே சென்று, அந்த ஊர் மக்களை, கையிலே இருந்த பிரம்பாலே அடிக்கிறார்கள். தடியாலே அடிக் கிறார்கள். அந்தக் கிராம மக்கள் அலறித் துடித்துக் கொண்டு இரத்தம் வழிய, கிராமத்திற்குள்ளே ஓடுகிறார்கள். அதோடு விடவில்லை. அந்தச் சம்பவம் மார்ச் 14 ஆம் தேதி நடைபெறுகிறது. அன்றிரவு 2 மணி அளவில், 100 ரிசர்வ் போலீசை அழைத்துக் கொண்டு, 10,000 மக்கள் வாழக்கூடிய அந்த இடத்திற்குக் காவலர் செல்கின்றனர். இரவு 2 மணிக்கு உள்ளே நுழைகிறார் கள், காலை 5 மணிக்கு வெளியே வருகிறார்கள். 3 மணி நேரம் அந்தக் கிராமம் சூறையாடப்படுகிறது. பள்ளி வாசல் அடித்து நொறுக்கப்படுகிறது. ஏராளமான கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, அந்தக் கிராமத்திலே ஆடவர் இல்லாத வீடுகளுக்குச் சென்று பெண்களைக் கேவலமாகப் பேசியிருக்கிறார்கள், தகாத முறையில் அவர் களிடம் நடந்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற பொருள்களையெல்லாம் எடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கொடுமை அங்கே நடந்தது. அதோடு மட்டுமல்ல, 60 முஸ்லிம் பெரியார்கள் மீது, சிறைச் சாலையைப் பார்த்திரா தவர்கள் மீது, வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மேல் 307 பிரிவின் கீழ் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். அதன் காரணமாக, அவர்களை அந்த போலீஸ் ஸ்டேஷனிலே வைத்து, அடி, அடி என்று அடித்து, மதுரை மத்திய சிறையிலே அடைத்துள்ளார்கள். அதற்குப் பிறகு, 15 தினங்களுக்குப் பிறகு தான் அவர்களை வெளியே காணக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. என்ன கேட்டார்கள்? மண்ணெண்ணெய் கேட்டார்கள். மண்ணெண்ணெய் கொடுக்க முடியாத புரட்சித் தலைவர் அரசே, ராஜிநாமா செய், என்றெல்லாம் சொன்ன வர்கள், மண்ணெண்ணெய் கேட்ட அந்த இஸ்லாமியப் பெருமக்களை அடித்தது மட்டுமல்ல, அவர்களிடம் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டார்கள். 60 பெரியவர்கள் மீது வழக்கு போட்டுள்ள அந்த அக்கிரமச் செயலுக்கு ஆர். டி. ஓ. அளவிலாவது விசாரணை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று, ஏழை, எளியவர்களை வாழ்விக்க வந்த எங்கள் ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவரைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தொடரப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும். யாருடைய ஆட்சியிலே இந்தக் கொடுமைகள்

நடந்தன, ஆளுநர் ஆட்சியிலே இந்தக் கொடுமைகள் நடந்தன. புரட்சித் தலைவர் ஆட்சியிலே இம்மாதிரி நடந்திருந்தால், உண்ணாவிரதம் இருந்திருப்பார்கள். ஊர்வலம் நடந்திருக்கும். ஒரு காக்கை, குருவி செத்தால்கூட விசாரணை வேண்டுமென்று கேட்டு ஆர்பாட்டம் செய்திருப்பார்கள். ஆனால் இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியதாக, சங்கடமாக, ஈட்டியை நெஞ்சிலே குத்துவதைப் போல் இருப்பதாக நான் கூறிக் கொள்கிறேன் இதற்கு ஒரு விசாரணை தேவை, தேவை, தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்; தொடரப்பட்ட வழக்குகள் அத்தனையும் வாபஸ் பெறப்பட வேண்டும்.

அதோடு மட்டுமல்ல, சேது சமுத்திரம் திட்டத்தைப் பற்றி குறிப்பிடாதது மிகுந்த வேதனைக்குரிய செயல். மத்திய அரசு சேதுசமுத்திரம் திட்டம் கைவிடப்படும் என்று சொல்லியிருப்பது மிகவும் வேதனைக்குரிய செயல். தென் மாவட்டங்களை வளமாக்கக் கூடிய ஒரு திட்டம் அது. அந்தத் திட்டத்தைக் கைவிடுவது சரியல்ல. அத்திட்டத்தை நிறைவேற்ற புரட்சித் தலைவர் அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, பாம்பன் ரோடு பாலம்.

(முற்பகல் 11-30)

பாம்பன் பாலத்திற்கு கடலின் மேல் ரோடு போடப்படுகிறது. 6¼ கோடி ரூபாய் திட்டம். ஆனால் கடந்த 20 மாத காலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏன் என்றே புரியவில்லை, கடலிலே போட்ட தூண்கள் எல்லாம் அப்படியே நிற்கிறது. இன்றைய தினம் 9 கோடி ரூபாய்கள் ஆகும் என்று சொல்லுகிறார்கள். இதன் மூலம் 2-3/4 கோடி ரூபாய்கள் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே இன்னமும் காலம் தாழ்த்தாது உடனடியாக இதைச் செய்து முடிக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த உரையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு. வாழ்க புரட்சித் தலைவர் ஆட்சி, வளர்க அண்ணாவின் கொள்கை என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** வணக்கத்திற்குரிய பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி கூறுகின்ற வாய்ப்புக் கொடுக்கின்ற வகையில் என்னை இங்கே உறுப்பினராக ஆக்கிய என்னுடைய ஆலங்குளம் தொகுதி வாழ் மக்களுக்கு முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு ஏழை எளிய மக்களாலே உருவாக்கப்பட்ட அரசு. குறிப்பாக கிராமப்புற மக்களால் ஏற்பட்ட அரசு என்பதனை ஆளுநர் உரை தெள்ளத் தெளிவாக காட்டுகிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்





கொள்கிறேன். மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலேதான் கிராமப்புற மக்கள் முன்னேறுவார்கள். கிராமங்கள் முன்னேறும் என்று சாதாரண ஏழை மக்கள் நம்புகிறார்கள். அந்த ஏழை மக்களுடைய நம்பிக்கைக்குத் துணையாக, துணிந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். நில உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்து இருப்பவர்கள், அவர்கள் எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தாலும் அஞ்சாமல், அந்த அதிக நிலம் வைத்திருப்பவர்களிடம் இருந்து நிலத்தைப் பிடுங்கி ஏழை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் லட்சியமாகும். அது இந்த ஆளுநர் உரையில் வரும் என்று எதிர் பார்த்தோம். அப்படி வரவில்லை என்றாலும் அடுத்து வரும் உரையிலே இடம் பெறும் என்று நம்புகிறேன். இந்த மாதிரி புரட்சித் திட்டங்களைத் தீட்டி பிற மாநிலங்களுக்கு தமிழ் நாடு நல்ல முன்னோடியாக விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களில், குறிப்பாக என் தொகுதியான ஆலங்குளம் தொகுதியில் மட்டுமல்ல, எல்லா கிராமப் புறங்களிலும் குடிநீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி போன்றவைகளை இன்றைய தினம் அரசிடம் எதிர்பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு கிராமப்புற மக்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து இருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகிற வகையிலே, எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதிகளும் சாலை வசதிகளும், போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட வேண்டும். இது குறித்து கவர்னர் உரையில் அதிகம் குறிப்பிடப்படாவிட்டாலும், அரசு இதைச் செய்யும் என்ற காரணத்திலே அந்த உரைக்கு நன்றி செலுத்துகிறேன்.

அண்ணல் காந்தி அடிகள் சொன்னார், எல்லாரும் சட்டை அணிகிற வரையில் நான் சட்டை அணியப் போவதில்லை என்று. அதைப்போல எல்லா கிராமப்புறத்திலே இணைப்புச் சாலைகள் போடும்வரை நெடுஞ்சாலைக்குச் செலவிடும் நிதியில் இருந்து எடுத்து. கிராமப்புற இணைப்புச் சாலைக்குப் பயன்படுத்தி, எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை போட, இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும். எங்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சொன்னதைப்போல், "கிழியாத ஆடை, ஒழுகாத வீடு, ஆறாத சோறு" இவைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, அதற்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் உறுதுணையாக இருக்கும் என்று கூறி, வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கா. கோ. கிருஷ்ணசாமி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய காங்கேயம் தொகுதி மக்களுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை இந்தச் சபைக்கு வரும்படியான வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கிகொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னுடைய தொகுதிக்குச் செய்ய வேண்டிய சில கடமைகளைச் செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடு ஒரு சில பிரச்னை களை இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று எனது தொகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாக கேட்டுக்கொண்டும், ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சி காலத்தில் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு எங்கெங்கே எல்லாம் தேவையோ அங்கேயெல்லாம் மலைப்பாம்பு போல் வளைந்து வளைந்து ஆய்வு எடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எங்கள் பகுதிக்காக விஸ்தரிப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அது செயல்படுகிற நேரத்தில், ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். கவர்னர் ஆட்சியில் அந்தத் திட்டம் முடக்கப்பட்டு விட்டது. மீண்டும் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் வட்டமலக்கரை என்ற ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடையில் ஆண்டுதோறும் வற்றாது நீர் ஓடிக்கொண்டு இருக்கும். அந்தத் திட்டத்தையும் எனது தொகுயில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருப்பதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் சென்னிமலை பகுதியில் கைத்தறித் தொழில் அதிக மாக இருந்து கொண்டு இருக்கிறது. இப்போது கைத்தறித் துணிகள் அதிக மாகத் தேங்கிக் கிடக்கின்றன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற் றக்கழகம் ஆட்சி இருந்த காலத்தில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டு இருந்தார்கள். ஆனால், கவர்னர் ஆட்சி காலத்தில் அது முடக்கப்



பட்டு விட்டது. மீண்டும் வெளிநாடுகளுக்கு கைத்தறி துணிகளை அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், கைத்தறி நெசவாளர்கள் வாழ்வில் நல்லதொரு ஏற்றம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு அரசு பல நல்ல சலுகைகளை அளிக்க இருக்கிறது என்பது குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கடன் பளுவைக் குறைக்க நட வடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன் என்று கூறி, அமர்கிறேன்.

* திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரை மிகப் பெரிய ஏமாற்றத்தைத் தருகிறது. தேர்தல் நேரத்தில் இன்றையதினம் ஆளும் கட்சியாகப் பொறுபேற்று இருக் கிற அரசு எவற்றையெல்லாம் சொல்லியதோ. எந்தெந்த வாக்குறுதிகளை அளித்ததோ அதைப் பற்றி எதுவுமே குறிப்பிடாதது வருத்தமாக உள்ளது. ஆளுநர் அறிக்கை, அரசின் அறிக்கை என்ற வகையில் எல்லோரும் எதிர்பார்ப் பதால், அதில் ஏதாவது அதைப் பற்றி சொல்லுவார்கள் என்று எதிர்பார்த் தோம், ஒன்றும் குறிப்பிடாதது ஏமாற்றத்தைத் தருகிறது என்பதைச் சொல் லிக்கொள்கிறேன்.

காரணம், அவர்கள் தேர்தல் சமயத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு கிலோ அரிசி இலவசமாகத் தருவோம், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு தருவோம், என்று பலவிதமான வாக்குறுதிகளைத் தந்து இருக் கிறார்கள். அப்படிப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவது குறித்து இங்கே ஏதேனும் வரி வடிவம் காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஒன்றுமே காணவில்லை.

நியாயமாக நடந்து முடிந்த தேர்தல் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறார் கள். இருந்தாலும் என்னுடைய தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த * * தேர்தல் காலத்தில் நடந்து கொண்ட நிகழ்ச்சியை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இங்கே பேசு கின்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் வேண்டாத ஒரு வார்த்தையை இங்கே உபயோகித்து இருக்கிறார்கள். அதனை வாபஸ் பெறவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா): அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: இங்கே பல்வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எங்கள் கட்சித் தலைவர்களையெல்லாம் எந்த அளவிற்குக் கேவலமாக விமர்சித்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உண்மையிலேயே நடைபெற்ற சம்பவத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த வார்த்தையை விட்டு விட்டுச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் கோணலாம்பள்ளம் என்ற கிராமத்தில் ஒரு தேர்தல் பணி மனையைத் திறந்து வைத்துவிட்டு, நானும், மேலவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. கோசு மணி அவர்களும் வந்து கொண்டு இருந்தநேரத்தில் எங்களை வழி மறித்து ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கினார்கள். நாங்கள் வந்த கார் அடித்து

(முற்பகல் 11-40)

நொறுக்கப்பட்டது. அதன் பிறகு மின் விளக்கை அணைத்து, அந்த இருட்டிலே அடையாளம் கண்டுகொள்ள முடியாத காரணத்தால் நாங்கள் உயிர் தப்பினோம்; நான் இந்த அவைக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு காவல்துறையிலே புகார் செய்திருக்கிறோம். இன்று வரையில் ஆளும்கட்சியில் இருக்கிற நீங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க அதிகாரிகளுக்கு அறிவுரை தந்திருக்கிறீர்கள். இனிமேலாவது நடவடிக்கை எடுக்கச் சொல்வீர்கள் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு நீங்கள் ஆளும் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தந்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். என்னைப் போன்றவர்கள் கொடுத்திருக்கிற புகார்களை விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு தடை விதிக்காமல் இருக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் கவர்ச்சியான வாக்குறுதிகளைக் கொடுத்து இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இருந்தாலும் முடிந்த அளவுக்காவது நிறைவேற்றினால் நாங்கள் அதற்கு உறுதுணையாக இருப்போம்.

சென்றமுறை நீங்கள் ஆட்சியிலே இருக்கும்போது வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் தருவோம் என்று சொன்னீர்கள். இன்றையதினம் அதையே மீண்டும் சொல்லியிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது "இளைஞர் அணி" என்ற அமைப்பை ஏற்படுத்தி, அவர்களுக்கு மாதம் 175 ரூபாய் தருகின்ற திட்டத்தை வைத்திருந்தது. நீங்கள் அறிவித்திருக்கிற 50 ரூபாய் திட்டத்திற்குப் பதிலாக இப்படிப்பட்ட



திட்டத்தை அமுல்படுத்தினால் அது உதவிகரமாக இருக்கும். உதவித்தொகை கொடுப்பதோடு நிற்காமல் வேலைவாய்ப்புத் திட்டத்தையும் உருவாக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க முடிந்தது. அப்படிப்பட்டத் திட்டங்களை மீண்டும் உருவாக்கினால் அதை நாங்கள் வரவேற்போம். மீதம் இருக்கிற பேருந்துகளை எல்லாம் கூட நீங்கள் தேசியமயமாக்கினால் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்புத் தர முடியும். ஆனால் நிச்சயமாக நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள். காரணம், பஸ் முதலாளிகள் எல்லாம் இப்போது உங்களிடம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் உதவியாக இருப்பீர்களே தவிர, பஸ்களை தேசியமயமாக்க மாட்டீர்கள். வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்க, இந்த நாட்டிலே இருக்கிற இளைஞர்கள் நல்வாழ்வு பெறுவதற்கு மீதம் இருக்கிற பஸ்களை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய மேம்பாட்டுக்கான திட்டங்களை அறிவித்திருக்கிறீர்களா என்று துருவித் துருவிப் பார்த்தோம். அப்படி எந்தவிதமான திட்டத்தையும் நீங்கள் அறிவிக்கவில்லை. வருவாய்த் துறை அமைச்சரவர்கள் விவசாயிகள் பெற்றிருக்கிற கடன்களை தள்ளுபடி 'செய்வோம்' என்று என்னுடைய ஊரிலே சொன்னார்கள். அவர் சொல்லிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம். விவசாயிகள் பெற்றிருக்கிற கடன் நம்முடைய வருவாயில் மூன்றில் ஒரு பாகம்தான் அந்தக் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியைக் கலைத்தது சர்வாதிகாரம் என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற உங்களுடைய கூட்டணிக் கட்சிகள் எல்லாம் அராஜகம், சர்வாதிகாரம் என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், நீங்கள் எல்லாம் கூட இந்த அவையில் இருந்தீர்கள். அப்போது, இந்த நாட்டிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களை எல்லாம் இவர்கள்தான் கலைத்தார்கள். அதை நீங்கள் அராஜகம், சர்வாதிகாரம் என்று கூறவில்லை (குறுக்கீடு). என்னால் ஆதாரத்தோடு கூற முடியும்.

திரு. பி. முசிறிப்புத்தன்: தலைவரவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்ததுபற்றிச் சொன்னார்கள். நகராட்சிகளை எல்லாம் கலைத்தார்களே, அப்போது இவர் எங்கே போயிருந்தார் என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பதவிக் காலம் முடிவதற்கு முன்னாலேயே 'மார்க்கெட்டிங் கமிட்டி'யை இந்த ஆட்சிக்காரர்கள் கலைத்தார்கள் என்பதை என்னால் நிரூபிக்க முடியும். இப்படிப்பட்ட ஆட்சி. . .

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, ஊராட்சிகளையும் ஊராட்சி ஒன்றியங்களையும் கலைத்தது அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தது, தொடர்ந்து அவர்கள் பதவியில் இருந்த நேரத்தில் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒருமுறை, இருமுறை தேர்ந்தெடுக்கப் பட்டால் எவ்வளவு காலம் பதவியில் இருப்பார்களோ அதற்கு மேலே இருந் தார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : அதைத்தான் நானும் சொல்கிறேன். தேர்ந் தெடுக்கப்பட்ட பதவிக்காலம் முடிவதற்கு முன்னாலேயே அவர்கள் காலம் முடிவதற்கு முன்னாலேயே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைத்திருக்கிறது என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். என்னால் அதை நிரூபிக்க முடியும், நீங்கள் மறுக்கிறீர்களா? மார்க்கெட்டிங் கமிட்டியை அதன் காலம் முடிவதற்கு முன்னாலேயே கலைத்து இருக்கிறார் கள். கூட்டுறவு நிறுவனங்களைக் கலைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா) : அவர் சொல்வது ஊராட்சி மன்றங்களையோ, நகர சபைகளையோ பற்றித்தான். மார்க்கெட்டிங் கமிட்டி பற்றியல்ல.

திரு. செ. இராமலிங்கம் : மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. அதை மறுக்க முடியாது. இப்படி நிர்வாகச் சீர்கேடுகளும், ஊழலும் மலிந்த ஆட்சியை மத்திய அரசு கலைத்தது. அதற்குப் பின்னாலே இந்தத் தேர்தல் வந்தது.

திரு. பி. முசிறிப்புத்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1976 ஆம் ஆண்டு கலைத்ததைச் சொல்கிறாரா அல்லது இந்த ஆண்டு கலைத்ததைச் சொல்கிறாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : ஊழல் நிறைந்த, சீர்கேடு நிறைந்த அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தது பற்றித் தான் சொல்கிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் : தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு கலைத்த விவரத்தை பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கடற்கரையிலே சொன்னார்கள். இப்போது கலைத்ததைப் பற்றி அவர்கள் ஒன்றும் சொல்ல வில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ புதிதாகச் சொல்கிறார்கள்.



திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, கடற்கரையிலே தெளி வாகவே சொன்னார்கள். சில தவறான புகார்களைக் கொடுத்தார்கள் என்று தான் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் உங்கள் ஆட்சியைக் கலைத்து நியாயமான காரணங்களின் அடிப்படையிலேதான்.

திரு. மி. வின்சென்ட் : தவறான தகவல்களைக் கொடுத்ததாகச் சொன் னார்கள். யார் தவறான தகவலைக் கொடுத்தார்கள் என்பதை அவர்களுடைய தலைவரைக் கேட்டால் தெரிந்துகொள்ளலாம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, தவறான தகவல் கொடுத்த வர்கள் யார் என்பதை திருமதி இந்திரா காந்தி அவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டார்கள். நான் அவர்களை அடையாளம் சொல்ல விரும்பவில்லை. அது அவர்களுக்கே தெரியும். எனவே நியாயமான காரணங்களின் அடிப்படை யில் தான் உங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். மக்கள் கொடுத்திருக்கின்ற இந்தச் சக்தியை நியாயமான நேர்மையான காரணங்களுக்காகப் பயன்படுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கி றோம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 5 ஆண்டு திட்டத்தை நிறைவேற்ற இருக் கிறோம் என்று சொல்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் உங்கள் ஆட்சி யிலே துன்பப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிபட்ட காரியங்களை நீங்கள் மீண்டும் தொடரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். விழுப்புரம் சம் பவம் எல்லோருக்கும் தெரியும். உங்கள் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட வர்கள் கொலை செய்யப்பட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்களது வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டது உங்கள் ஆட்சிக் காலத்திலேதான். அப்படி நீங்கள் நிறைவேற்றிய சாதனைகள் போன்று உங்களது இப்போதைய 5 ஆண்டுத் திட்டத்திலேயும் நிறைவேற்ற வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யிலே 10 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேதான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 6 மாத காலத்தில் 45 ஆயிரம் குடியிருப்புக்களைக் கட்டித் தந்தார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை நீங்கள் நிறைவேற்றினால் நிச்சயமாக இந்த 5 ஆண்டு திட்டத்துக்கு அர்த்தம் இருக்கும் என்று எங்களால் புரிந்துகொள்ள முடியும். ஆகவே அப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கும் கள்.

அடுத்து நெசவாளர்களுடைய மேம்பாடு பற்றி கவர்னர் அவர்களுடைய உரையிலே ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. நெசவாளர்கள் நிச்சயமான ஊதியம், நிச்சயமான வேலை இல்லாமல் துன்புறுகிறார்கள். அவர்களுக்கு கல்வி வசதி, வீட்டு வசதி, போன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கின்ற

அளவுக்கு நெசவாளர்களின் மேம்பாட்டுக்கான சட்டங்களைக் கொண்டுவர
வேண்டும் என்று இந்தப் பேரவையில் நான் கேட்டுக்கொள்கிறேன். நெச
வாளர்களைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே வாழ்கின்ற விவசாயி
களுக்கு அடுத்த நிலையிலே இருக்கின்றவர்கள். அந்த நெசவாளர்களுடைய
பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. எனவே இந்த
நாட்டிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் தேவையான
முற்போக்குத் திட்டங்களை எல்லாம் அமல்படுத்த வேண்டுமென்று உங்களைப்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 3 ஆண்டு காலத்தில் விவசாயிகளுக்காக அதைச் செய்வோம்,
இதைச் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றுமே செய்யவில்லை.
இன்றையதினம் உரவிலை ஏறி இருக்கின்றது. தமிழக அரசு மீண்டும்
விலையை ஏற்றாமல் மானியம் கொடுத்து விவசாயிகளுக்கு உரம் கிடைக்க
ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களை உடனடி
யாக ரத்து செய்யவேண்டும். கடந்த 3 ஆண்டுகளாக விவசாயக் கடன்களை
ஒத்தி வைத்திருக்கிறீர்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
விவசாயிகள் கொடுக்கவேண்டிய வாரத்தைப் பொறுத்தவரையில் கடந்த
மூன்று ஆண்டுகாலமாக பாக்கியாக இருக்கின்றது. அவைகளை எல்லாம்
தள்ளுபடி செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
குத்தகை விவசாயிகள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அந்தக் குத்தகை
களை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களை
எல்லாம் இந்த ஆளுநர் உரையிலே கொண்டு வந்திருப்பீர்கள் என்று நான்
பார்த்தேன். அமைச்சரவர்கள் தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். அப்
படிப்பட்ட வாக்குறுதிகள் எல்லாம் இந்த ஆளுநர் உரையிலே காணப்பட
வில்லை. ஆகவே ஏழை எளிய விவசாயிகளுக்குத் தேவையான நல்லபல
திட்டங்களை எல்லாம் நீங்கள் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். மூன்றாண்டு காலத்தில் நீங்கள் எவ்வளவோ சொன்னீர்களே ஒழிய

(முற்பகல் 11-50)

ஏதாவது செயல்படுத்தப்பட்டதா என்றால், எதுவுமே செயல்படுத்தப்பட
வில்லை. வரவிருக்கும் காலத்திலாவது அவைகளை எல்லாம் நிச்சயமாக
நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சிறு சிறு கிராமங்களாக
இருக்கிற பகுதிகளிலெல்லாம் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது.
மினி பஸ்கள் விடுகிற திட்டத்தை கடந்த 3 ஆண்டு காலமாக திரும்ப திரும்ப
சொல்லிக் கொண்டு வருகிறீர்களே ஒழிய ஒரு மினி பஸ் கூட எங்கள் தொகுதி



யில் விடப்படவில்லை. எனவே இந்த மினி பஸ்கள் விடுவதாக இருந்தால்,
திருவிடை மருதூரில்—ஏற்கெனவே 14 வழித் தடங்கள் எடுத்துக்கொள்ளப்
பட்டதாக சொல்கிறார்கள்—அவைகளில் அந்த பஸ்களை விட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிகளில், நெய்வாசல், துக்காச்சி பழிஞ்சலூர்
ஆகிய பகுதிகளில் பாலங்கள் இல்லை. இரெயில்வே செஸ் திட்டத்தில்
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், இந்த பாலங்கள் கட்டுவதற்
கான திட்டத்தை அனுப்பி வைத்தோம். அவைகள் நிறைவேற்றப்படவில்லை.
எங்கள் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி
இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் இந்த பாலம் கட்டும் பணியை எடுத்துச்
செய்ய முன் வந்தால் அதற்கான அனுமதி வழங்க வேண்டும் என்று பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருக்கிற தொகுதி
களுக்கு போதுமான அளவுக்கு அந்த தொகுதிகளுக்கான திட்டங்களை நிறை
வேற்றுவது கிடையாது. அதை என்னால் ஆதாரத்தோடு சொல்ல முடியும்.
திருவிடைமருதூர் ஒன்றியத்தில் இரண்டாண்டு காலத்திற்கு முன்னால்,
சர்பிளஸ் நிதியிலிருந்து செய்வதற்கு அனுமதிக்காக வந்திருந்த திட்டங்கள்
எல்லாம் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கின்றன. மீண்டும் அப்படி ஒரு
நிலைமை ஏற்படாமல் எந்த கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும்
சரி, போதுமான, தேவையான காரியங்களை எல்லாம் உடனடியாக செய்து
தரவேண்டும் என்று கேட்டு, இந்த ஆளுநர் அவர்களுடைய உரையை
கண்டித்து அமர்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,
இந்த மாமன்றத்திலே, அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, எங்கள்
புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியை மீண்டும் கொண்டு வந்து, என்
னுடைய கருத்துக்களையும் இங்கே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்து
வாக்குகள் அளித்த தமிழக மக்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்
கொள்கிறேன்.

பிப்ரவரி மாதம் தமிழகத்திற்கு ஓர் இருண்ட காலம். அந்த மாதத்தில்,
இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் பாராளுமன்ற தேர்தல்
களின் முடிவுகளை காண்பித்து, இந்திய காங்கிரஸ் கட்சியினரும், திராவிட
முன்னேற்றக் கழகத்தினரும், சேர்ந்து சட்டமன்றத்தைக் கலைத்தார்கள். அவர்
களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டு ஜனதா கட்சி
ஆட்சி மத்தியில் ஏற்பட்ட பிறகு பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும்
சேர்ந்து சட்டமன்றங்களை கலைக்க வேண்டும் என்று கோருகையில், காங்கி
ரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் அதை எதிர்த்தார்கள். அது

மட்டும் அல்ல, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்த பிறகும்கூட காங்கிரஸ் கட்சியைச்
சார்ந்தவர்கள் அத்தகைய சட்டமன்றக் கலைப்பை எதிர்த்து வந்திருக்கிறார்
கள். ஆனால் பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட இந்த கலைப்பை அவர்கள் எதிர்த்
தார்களா ? இல்லையே. 'அன்-டெமாக்ரடிக்' என்று சொன்னார்களே,
அதை அவர்கள் தொடர்ந்து பின்பற்றி நமது தமிழக அரசை கலைத்தபோது
எடுத்துச் சொன்னார்களா ? ஆனால் நம்முடைய தமிழக அரசையும் மற்ற
சில மாநிலங்களையும் அவர்களே கலைத்திருக்கிறார்கள். ஆனால் அளிக்க
வேண்டிய தீர்ப்பைத்தான் அளித்திருக்கிறார்கள் தமிழக மக்கள் என்பதை
நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் காட்டியிருக்கின்றன. அது மட்டும்
அல்ல, இன்றைக்கு தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலை
மையிலே தான் ஆட்சி அமைந்திருக்கிறது. அவருடைய ஆட்சிக்குத்தான்
மக்களுடைய வாக்குகள் கிடைத்திருக்கின்றன. திருவள்ளுவர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்—

"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச்செயின்" என்று கூறியிருக்கிறார்.

உலகத்தை காப்பவன் அரசன். ஆனால் நீதி முறை தவறாமல் அவன் ஆட்சி
செய்தால் அந்த அரசை அந்த நீதிமுறையே காக்கும் என்று சொல்லியிருக்கி
றார்கள். அது போன்று நீதிமுறையின் நெறிமுறையின்படி எந்த தவறும்
செய்யாமல் ஆட்சி செய்த புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி இன்றைக்கு
மீண்டும் மலர்ந்திருக்கிறது தமிழகத்திலே.

நம்முடைய நண்பர் திரு. சுந்தரராசன் அவர்கள் பேசுகிறபோது இடை
யிலே ஒன்றை குறிப்பிட்டார்கள். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே
பல அராஜக செயல்கள் எல்லாம் நடைபெற்றன என்று சொன்னார்கள்.

ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நாங்கள் சந்தித்த
தெல்லாம் வெறும் அராஜகத்தைதான். காலையில் எழுந்து தேர்தல் பணிக்
குச் செல்கிற நண்பர்கள் மாலையில் உயிரோடு வீடு திரும்புவார்களா என்ற
சந்தேகம் எங்களுக்கு இருந்தது. என் தொகுதியைப் பொறுத்தவரையில்
தினம் தினம் அராஜகத்தைத்தான் நாங்கள் சந்தித்து வந்தோம். பலயிடங்
களில் வாக்காளப் பெருமக்களை வாக்களிக்க விடவில்லை. மிரட்டல்களாலும்,
பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தியும் வாக்காளப் பெருமக்களை
எவ்வளவு தூரம் தாக்கியிருக்கிறார்கள் என்பது பத்திரிகைகளில் வந்திருக்கிற
உண்மையான செய்திகளாகும். எங்கள் தொகுதியைச் சேர்ந்த ஒரு நண்பர்
உயிரோடு மெயின் ரோட்டில் எரிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியிலிருந்து
எவ்வளவு தூரம் அவர்கள் அராஜகச் செயல்களைச் செய்திருக்கிறார்கள் என்





பதை உணரலாம். அதுமட்டுமல்ல, என் தொகுதியைப் பொறுத்தவரையில்
நான் இதற்கு முன்பு கூட 1977 தேர்தலில் நிற்கிற நேரத்திலகூட அன்று
திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பல வாக்குச்சாவடிகளை அவர்களே
கைப்பற்றி அன்று வாக்குகளை அளிக்கவிடாமல் செய்தார்கள். இந்தத் தேர்
தலிலும் அந்நிலையில்தான் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி
அவர்கள் செய்தார்களே தவிர பொதுமக்கள் அப்படியிருந்தும் நல்லமுறையில்
யில் இந்த முறையும் நல்ல தீர்ப்பினை வழங்கியிருக்கிறார்கள். நல்லாட்சி
அமையவேண்டும் என்று சொன்னால் அது புரட்சித் தலைவர் தலைமையில்
அமையக்கூடிய ஆட்சிதான் என்று முடிவு செய்து மக்கள் இன்று எங்களுக்கு
வாக்களித்திருக்கிறார்கள். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப்
பிறகு ஆளுநர் உரையில் நல்ல பல திட்டங்களை, அண்ணாவின் கொள்கை
களையெல்லாம், தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறை
வேற்றுவதற்கு வேண்டிய வழிகளை இந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல் காலத்தில் சிலர்
பல தவறான பிரச்சாரங்கள் செய்திருந்தபோதிலும் சரி, புரட்சித் தலைவரின்
முந்திய ஆட்சி சொன்னதுபோல் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு ரூபாய் 50
கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றுவோம் என்று
ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து ஊராட்சி ஒன்றிய ஆசிரி
யர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்ற பல ஆண்டுக்கால
கோரிக்கையை இன்றைக்கு நிறைவேற்ற இந்த அரசு முன்வந்திருக்கிறது.
கடன் சுமையைக் குறைப்போம் என்று சொல்லி பாராளுமன்றத் தேர்தல்
நேரத்தில் வாக்குகளைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
வர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் தேர்தல் முடிந்த பிறகு எங்களால்
அதைச் செய்யமுடியாது அது தேர்தல் வாக்குறுதி என்று ஓடிவிட்டார்கள்.
அவர்களால் செய்யமுடியாத காரியத்தை புரட்சித் தலைவர் அவர்களின் அரசு
அமைந்திருந்த நேரத்தில் ரூபாய் 40 கோடி அரசாங்கக் கடன்களை எல்லாம்
ரத்து செய்து ஏழை மக்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். அந்தக் கடன்
களை ரத்து செய்ததற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறார்கள்
என்ற மகிழ்ச்சிகரமான செய்தியும் நமக்குக் கிடைத்திருக்கிறது. சிறு விவ
சாயிகள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு குழு அமைப்போம் என்று சொல்லி
யிருப்பது விவசாய பெருமக்கள்பால் அரசு கொண்டிருக்கிற அக்கறை தெள்ளத்
தெளிவாகக் காட்டுகிறது. சிறு விவசாயிகள் பிரச்னை மட்டுமல்ல. விவசாயத்
தொழிலாளர்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை
இந்த அரசு மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் தொழிற்சாலைகளைப் பொறுத்து அது பின்தங்கிய தொகுதி. அங்கு தொழிற்சாலைகள் எதுவும் இல்லாமல் இருக்கிறது. ஒரு சர்க்கரை ஆலை மட்டும் இருக்கிறது. அதுவும் வேலை வாய்ப்பு என்று சொன்னால் வெளியேயிருந்து வருபவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். காகித ஆலை ஒன்று ஆரம்பிக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் காகித ஆலையை வெகு விரைவில் துவக்க வேண்டும். பல தொழிற் சாலைகளை எங்கள் தொகுதியில் ஏற்படுத்துவதன் மூலம் அங்குள்ள வறட்சி நிலையைப் போக்க வேண்டும். இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, உர விலையை மத்திய அரசு ஏற்றியிருக்கிறது. அப்படி விலையை ஏற்றி மத்திய அரசு விவசாயிகளின் வயிற்றெரிச்சலை வாங்கியிருக் கிறது என்பதை உணர முடிகிறது. ஆக, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள் வது, மதராஸ் பெர்டிலைசேர்ஸ் என்றிருக்கிறது. அவர்கள் கூட்டுறவு ஸ்தாப னங்கள் மூலம், பாரி அன்ட் கோ., ஷாவாலஸ் கம்பெனி மூலம் உரம் விநியோகம் செய்கிறார்கள். அப்படி பாரி அன்ட் கோ., ஷாவாலஸ் கம்பெனி மூலம் உரம் விற்பனை செய்வதால் அவர்களுக்கு இடையில் நல்ல லாபம் கிடைக்கிறது. உதாரணமாக, காம்ப்ளக்ஸ் உரம், பாரி அன்ட் கோ., ஷாவாலஸ் மூலம் விற்பனை செய்கிறபோது அவர்களுக்கு ரூபாய் 250 வரை லாபம் கிடைக்க வழிவகை செய்கிறார்கள். ஆகவே நேரடியாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் விற்ப

(நண்பகல் 12-00)

னைக்கு ஏற்பாடு செய்தால், இடைத் தரகர்கள் இடையிலே இல்லாமல், சிறு விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்தால், நல்ல பலன்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு மூட்டை உரத்திற்கு விலையும் 10 ரூபாய் குறைவதற்கும் வழிவகை கிடைக்கும். ஆகவே, இதை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு இந்த வாய்ப் புத் தந்த மன்றத்திற்கு நன்றிகூறி, விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

* **திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்**: மதிப்பிற்குரிய சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்திலே உரையாற்ற வாய்ப் பினை நல்கிய எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கெல்லாம் முதற்கண் நன்றி கூறி, ஆளுநர் அவர்கள் உரையின்மீது சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே வேலையற்ற பட்டதாரிகளுக் கெல்லாம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே அவர் களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்திருக்கி றார்கள். ஆனால், அதே நேரத்தில் தேர்தல் கால அறிக்கையில், நம் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற கூட்டங்களில் வேலையற்ற பட்டதாரி களுக்கு மட்டுமல்லாமல், செகண்டரி கிரேடு டீச்சர்களுக்கும் சேர்த்து நாங்கள்





உதவித் தொகை வழங்க இருக்கிறோம் என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார் கள். ஆனால், ஆளுநர் உரையிலே வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மட்டும் என்று சொன்னால், ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஒருவேளை ஆசிரியப் பெருமக்கள் மீது உங்களுக்கு ஏதேனும் கோபமா? அல்லது அவர்கள் உங்களுக்கு ஓட்டுப் போடவில்லை என்று தெரிந்து, அவர் களை விட்டு விட்டீர்களா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, அந்த உதவித் தொகையை செகண்டரி கிரேடு டீச்சர்களுக்கும் வழங்க வேண்டுமென்று ஒரு முடிவைச் செய்யவேண்டுமென்று நான் இநத நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், வேளாண்மை விளைபொருட்களை விற்பதற்கான வசதி களை ஏற்படுத்தித் தரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விரிவு படுத் தும் திட்டம், கூட்டுறவு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு புதிய சட்டங்களின் பேரிலே அமைப்புகள் கொண்டு வந்து தேர்தல் நடத்த இருக்கிறோம் என்று கூறியிருக்கிறீர்கள். இன்றைய தினம் தமிழகத்தில் ஜனநாயக முறையில் நமக்குக் கீழே இருக்கின்ற எந்த அமைப்பிலும் முறையாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதற்காக புதிய சட்டமாக்குவதன் பேரிலே தேர்தல் நடத்த இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படி இந்தத் தேர்தல் வருகின்ற வரையிலே, இந்த நிர்வாகம் நடைபெறுகின்றபோது, ஒரு தனிக் கட்சி, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அந்த நண்பர்களுக்கு மட்டும்தான் அந்த வாய்ப்பு, அவர்கள் அந்த அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கின்ற அடிப் படையிலே அமையப் போகின்றதா, அந்த நிர்வாகத்திற்கு கீழே வருகின்ற அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக மேலவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் எல்லாம் பங்கு கொள்ளுகின்ற வகையிலே இந்தத் தேர்தல் நடக்கின்ற வரையில் இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதாகச் சொல்லுகின்ற நேரத்தில், மத்திய சர்க்கார் மீது ஒரு காரணத்தைச் சொல்லுகின்ற அடிப்படையிலே ஆளுநர் அவர்கள் உரையிலே ஒரு வாசகம் இருக்கிறது. 'மத்திய அரசு இவ்வாறு தமிழ் நாட்டில் பெருந் தொழில்களைத் தொடங்காததன் விளைவாகவும், புதிய பெருந் தொழிகளுக்கு அனுமதி அளிக்கத் தாமதிப்பதன் காரணமாகவும் வேலையற்றோர் எண்ணிக் கையும் தமிழ் நாட்டில் மிக அதிகமான நிலையிலே இருந்து வருகின்றது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக தமிழக அரசைப் பொறுத்தவரை யிலே எந்தத் துறையிலே நீங்கள் மத்திய சர்க்காரிடம் எந்த பெருந் தொழி

னுக்கு அனுமதி கேட்டிருக்கிறீர்கள். அப்படி கேட்டு, மத்திய சர்க்கார் அனுமதி மறுத்திருக்கிறதா? தனியார் துறையிலே இருக்கின்றவர்கள் அல்லது அரசுத் துறையிலே இருக்கின்றவர்கள் அல்லது இரண்டும் சேர்ந்து கூட்டாக அனுமதி கேட்டு, மறுக்கப்பட்டிருக்கிறதா. அல்லது தனியார் கேட்டு, இந்த அரசு அனுமதித்து, சிபார்சு செய்து, மத்திய சர்க்கார் அனுமதி மறுத்திருக்கின்றதா என்பதை நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன். இதிலே மத்திய சர்க்கார் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். எந்த மத்திய சர்க்கார் என்பதை அறிய விரும்புகிறேன். நீங்கள் ஆண்ட 2½ ஆண்டு காலத்தில் மத்தியிலே ஜனதா கட்சியின்கீழ் இருந்த மத்திய அரசா என்பதையும் நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

அதைப்போல், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவதை பொறுத்தவரையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர் குறிப்பிட்ட காலம் வரையிலே அந்தப் பகுதியிலே தங்கள் சொந்த வீட்டில், இல்லங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேலை மாற்ற உத்தரவு வருகின்றபோது, ஒரு கோட்டத்துக்குள் மாற்றுவது என்று வகுத்துக் கொள்வது நல்லது என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த உத்தரவு இன்றையதினம் வருகின்றபோது, பஞ்சாயத்து யூனியனிலே இருந்து சி.இ.ஓ.வுக்கு அனுப்பப்பட்டு, அவர்களிடம் அதிகாரம் வருகின்றபோது, மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றப்படுகின்ற நிலையும், பஞ்சாயத்து யூனியனிலிருந்து இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றுகின்ற செயலும் இருக்கக்கூடாது. அதே பஞ்சாயத்து யூனியனில் அதே ஊரில் 3, 5 ஆண்டுகளே இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல் 18 வயது வந்தவர்களுக்கல்லாம் வாக்குரிமை தரவேண்டுமென்ற அடிப்படையில் ஊராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. இளைஞர்களுக்கு வாய்ப்புத் தருவதை வரவேற்கிறேன். இன்றையதினம் ஊராட்சி மன்றங்கள், பெரிய பஞ்சாயத்துக்கள் இரண்டாயிரம், மூவாயிரம் வாக்காளர்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதிலே மதுரா கிராமங்கள் என்று சொல்லக்கூடிய பல துணைக் கிராமங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட மதுரா கிராமங்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து தரப்படாத நிலைமை இருக்கிறது. பதினெட்டு வயது என்று சொல்லுகிறபோது அப்படி இருக்கிற மதுரா கிராமங்கள் தனிப் பஞ்சாயத்துக்களாக ஆகும் உரிமை பெறக்கூடிய நிலைமையில்





எவ்வளவோ கிராமங்கள் தமிழகத்தில் இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே, அவற்றை உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்குள்ளாக தனிப் பஞ்சாயத்துக்களாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் நெடி-கோழியனூர். செட்டணை-நாரேரிக்குப்பம், சென் ஆலப்பாக்கம்—கொரளூர், கட்டளை—மாரிமங்கலம், எண்டியூர்-த்ருவம்மாபேட்டை ஆகிய மதுரா கிராமங்கள் இருக்கின்றன. 18 வயது என்று ஆக்குகிறபோது அந்தக் கிராமங்கள் தனி பஞ்சாயத்துக்கள் ஆகும் அடிப்படையில் இருக்கும் பெரிய கிராமங்கள். ஆகவே, ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் அவற்றைத் தனிப் பஞ்சாயத்துக்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில் சட்டமன்ற உறுப்பினர்களையும் மேலவை உறுப்பினர்களையும் சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து கருத்துக்களைச் சொல்லும் வாய்ப்பு இருக்கிறது. நகராட்சி மன்றங்களில் அந்த நிலை இல்லை. நகராட்சி மன்றக் கூட்டங்களுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கும் உரிமையைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாலுக்காவில் குண்ணம் கிராமம் உலகப் பிரசித்தி பெற்ற கிராமம். அந்த இடத்திலே உலகமே போற்றுகிற கறுப்புக் கல் விளைந்து கொண்டிருக்கிறது. அங்கே தனியார் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலை இருக்கிறது. உங்களுடைய அரசு இதை தேசிய மயமாக்குவோம் என்ற திட்டத்தை அறிவித்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். தனியார்களுக்கு விடப்பட்ட அந்த காண்டிராக்ட் இந்த ஆண்டு முடியப் போவதாக அறிகிறேன். உடனடியாக அதைத் தேசியமயாக்கி தனியார் அடிக்கும் கொள்ளை லாபத்தை தடுத்து நிறுத்த வேண்டும். மைலம் கிராமத்தில் அது சம்பந்தமான ஒரு தொழிற்சாலை துவக்க வேண்டும்.

என்னுடைய தாலுக்காவில் பிரிட்டானியா பிஸ்கட் போன்று உலகப் புகழ் பெற்ற 'ஆரோபுட் பிஸ்கட் பாக்டரி'யில் கடந்த 20 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெற்று 600-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிர்வாகத்தின் சார்பாக இருக்கின்ற இயக்குநர்கள் தூண்டுதலால் குப்புசாமி என்ற தொழிலாளியின் கையை வெட்டியிருக்கிறார்கள். போலீசில் புகார் தரப்பட்டு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. லாக் அவுட் செய்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையிலே உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இவர்களுடைய ஊதிய உயர்வு பிரச்சினைகளும், நியாயமான கோரிக்கைகளும் நிறைவேற சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய திண்டிவனம் தொகுதியைப் பொறுத்தமட்டில் ஏராளமான கிராமங்களில் பாதை வசதி இல்லை, பஸ் வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை. நான் தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லச் சென்ற நேரத்தில் அவைபற்றிய கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவற்றைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தந்திருக்கிறேன். அதை உங்கள் மத்தியில் கவனப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும்போது அனைவரும் வரவேண்டுமென்று அழைப்பை நல்கினார்கள். தமிழகமே திரண்டதாகச் செய்தி வந்தது. அந்த வைபவத்திற்கு வந்து திரும்பியவர்கள் எல்லாம் திண்டிவனம் வழியாகப் புகைவண்டி நிலையத்திற்குப் போகும் நிலைமை. அவர்கள் திண்டிவனத்தில் எவ்வளவு பெரிய தீவிரமான அராஜகத்தில் ஈடுபட்டார்கள் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புகை வண்டி நிலையத்தில் வண்டிகள் நிற்கின்றன. இருக்கிற டிக்கடைகளிலும் உணவு விடுதிகளிலும் உள்ள உணவுப் பண்டங்களை எடுத்துச் சாப்பிடுகிறார்கள், காசு கேட்டால், தரமுடியாது என்று மறுக்கிறார்கள். வண்டியில் வந்தவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது.

(பிற்பகல் 12-10)

அது மட்டுமல்ல. என்னுடைய ஊரிலே புகைவண்டி நிலையம் இருக்கிறது. பக்கத்திலே ஸ்டேட் பஸ் ஸ்டாண்ட் இருக்கிறது, பக்கத்திலே பஜார் இருக்கிறது. ஆகவே அந்த வண்டியிலே வந்த அவ்வளவு பேர்களும் கடைகளுக்குப் போய் மாம்பழக் கடை, டீக்கடை இவைகளில் என்ன என்ன உணவுப் பொருட்கள் இருந்தனவோ அவ்வளவையும் வாரிவாரி எடுத்துக்கொண்டு வண்டிக்கு வருகிறார்கள். தகராறு நடைபெறுகிறது. ஜெயலட்சுமி என்ற பெண், ஒரு தாய் விறகுக் கடை வைத்திருக்கிறார். அவருடைய கடையிலே ஏறக்குறைய 500 ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. போலீசாரிடம் புகார் செய்யப்பட்டு இருக்கிறது, எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல. மாம்பழம் விற்றுக்கொண்டிருந்த ஒரு ஏழை சகோதரியை மானபங்கம் செய்கின்ற முறையில் மேலாடையை அந்த நண்பர்கள் இழுத்து இருக்கிறார்கள். இது நகரத்திலே இருக்கிற அவ்வளவு பேர்களுக்கும் தெரியும் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

அதற்குப் பின்னாலே நகரத்திலே இருக்கிற மக்களுக்கு அந்தச் செய்தி காட்டுத்தீயாகப் பரவுகிறது. நகரத்து மக்கள் ஒன்றாகத் திரளுகிறார்கள். அதே நேரத்திலே அன்றைய தினம் அந்த வண்டியிலே வந்த நண்பர்கள்





எல்லாம் சொன்னார்களாம், இரட்டை இலைக்கு வாக்களிக்காத தொகுதியா? கைக்கு ஓட்டுப் போட்ட தொகுதியா? இந்திரா காந்திக்கு ஓட்டுப் போட்ட தொகுதியா? நாங்கள் எல்லாம் யார் தெரியுமா, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆட்சியிலே வந்திருக்கிறவர்கள், மதுரை மேற்குத் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி அரிவாளாலே அடித்து இருக்கிற நிகழ்ச்சி நடந்திருக்கிறது. நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மதுரை மேற்குத் தொகுதியாக இருந்தாலும், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் தொகுதியாக இருந்தாலும் சரி, எங்களுடைய மாவட்டம் படையை ஆட்சி செய்த பரம்பரை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

ஆனால் அதற்கு மேலே தகவல்கள் சென்னைக்கு வருகின்றன. தமிழகத்து அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கே வருகிறார்கள். அவர்கள் என்னைப் போன்ற புதியவர்கள் அல்ல. கடந்த சட்டமன்றத்திலே அனுபவம் உள்ள அமைச்சர் பெருமக்கள் வருகிறார்கள். பாதிக்கப்பட்ட அவர்களுடைய தோழர்கள் மருத்துவமனையிலே இருந்த காரணத்தினாலே உணவு வசதி, வாகன வசதி, இந்த வசதிகள் எல்லாம் செய்து மதுரைக்கு அனுப்பிவைத்தார்கள். மகிழ்ச்சி. வெளியூரிலிருந்து வந்த அந்தக் காலிகள் என்று நான் சொன்னால் ஒத்துக்கொள்ள மாட்டீர்கள். அராஜக வாதிகள் என்று என்னால் இந்த சட்டமன்றத்திலே அவர்களை அழைக்க முடியது. ஆனால் பாதிக்கப் பட்டவர்களை, அந்தச் சகோதரியை, துயருற்று இருந்தார்களே அவர்களை, கண்ணீரும் கம்பலையுமாக காட்சியளித்தார்களே அவர்களை, அமைச்சர் பெருமக்கள் சந்திக்கவில்லை. அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் ஆறுதல் சொன்னார்களா என்றால் இல்லை. ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. அதோடு மட்டுமல்ல, அந்தத் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனக்கு ஒரு தகவலும் வரவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் அங்கே இருக்கிறேன். பத்திரிகையிலே செய்தி வருகிறது. அமைச்சர் செய்தி தருகிறார். திண்டிவனத்திலே திட்டமிட்ட சதி தாக்குதல் என்று. திண்டிவனம் என்றாலே உங்களுக்கு ஒரு அலர்ஜி இருக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும்? ஆனால் தமிழகத்தினுடைய அத்தனை பத்திரிகைகளிலேயும் செய்தி வருகிறது. செங்கற்பட்டிலே, மதுராங்கத்திலே, அச்சரப்பாக்கத்திலே காலித்தனம் கலவரம் நடந்தது என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.* நான் ஒன்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். காலிகள் யார், அராஜகவாதிகள் யார் என்பதை நாடு

* மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கு இணங்க அகற்றப் பெற்றது.

அறியட்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களுக்கு தந்தி கொடுத்திருக்கிறேன். அதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தி உடனடியாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறி இந்த அளவிலே நான் விடைபெறுகிறேன். ஆளுநர் உரைமீது இங்கே பேசிய நண்பர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் அதை குயில் என்று சொன்னார்கள், அது குயில் அல்ல, கத்துகின்ற காகமாக இருக்கிறது என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, அவையிலே இல்லாத ஒரு உறுப்பினருடைய பெயரைச் சொல்லி அவர் வெளியிலிருந்து இப்படிப்பட்ட குற்றச்சாட்டைப் புரிந்து இருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறலாமா என்ற கேள்வியை நான் தங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா):** அவையிலே வந்து மறுப்பதற்கு வாய்ப்பு இல்லாத ஒருவரைப்பற்றி குறிப்பிடுவது மரபல்ல. எனவே அப்படிக் குறிப்பிட்ட அந்தக் கருத்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அது பத்திரிகையிலே வந்திருக்கிறது, அதைத்தான் சொன்னார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இரா. முத்தையா):** பத்திரிகையில் வந்திருந்தாலும் அதை அவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவைத் தலைவர் அனுமதித்தால் அதைக் குறிப்பிடலாம்; அவைத் தலைவரின் அனுமதியின்றி, அவையிலே வந்து மறுப்பதற்கு வாய்ப்பு இல்லாத ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுவது மரபல்ல. எனவே தான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்திரவிட்டேன்.

* **திரு. க. பாரமலை:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முதன் முறையாக இந்த மன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய என்னுடைய மானாமதுரை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வாய்ப்பினை உண்டாக்கித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எங்களை ஆளாக்கிய தலைவர் காமராஜ் அவர்களுக்கும் வணக்கத்தைச் செலுத்தி என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

நம்முடைய மேதகு கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற பல்வேறு திட்டங்களை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். குறிப்பாக, விவசாயக் கடன்களை முடிந்த அளவில் விரைவில் ரத்து செய்ய



உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இந்த உரையில் கூறப்பட்டிருக்கிறது. அதோடு இந்தக் கடன்கள் பெருமளவில் இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசாங்கத்தின் உதவியோடுதான் அதை நிவர்த்திக்க முடியுமென்று அந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் நாட்டு அரசாங்கம் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று எந்த அளவிற்குக் கோரிக்கையை வைத்து நடவடிக்கை மேற்கொள்கிறார்களோ அதைப்போலவே தமிழ் நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் ஒன்று சேர்த்து மத்திய அரசாங்கத்திலிருந்து நாம எதிர்பார்க்கின்ற சலுகைகளைப் பெற தமிழ்நாடு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அப்படியெடுக்கும் முயற்சிகளில் எங்கள் காமராஜ் காங்கிரஸ் கட்சி துணை நிற்கும் என்ற உறுதியையும் தருகிறேன்.

ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் ஐந்தாண்டுத் திட்டம்—விசேஷ ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தப்படும் என்று அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே ஓரிரு வார்த்தைகள் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஹரிசன நலத் துறையின்கீழ் இன்று செயல்பட்டு வருகின்ற 'தாட்கோ' அரிசன வீட்டு வாரியம் இன்றைக்குப் பெயரளவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த எமெர்ஜென்பி காலத்திலேயிருந்து போதிய நிதி ஒதுக்கீடு அந்தக் கழகத்திற்குச் செய்யப்படவில்லை. இருந்தாலும் அந்த அமைப்பு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு வருவதால் அரசாங்கத்திற்குப் பெருந்தொகை இழப்பு ஏற்படுகிறது—சம்பளத்தின் வாயிலாக அனைத்து அதிகாரிகளுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரிகளை வைத்து 'தாட்கோ' செம்மையாகச் செயல்பட வேண்டுமென்றால் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக வேலை வாய்ப்புகளிலும் கல்வித்துறையிலும் இட ஒதுக்கீடு ஒதுக்கி உத்தரவிட்டிருக்கிறார்கள். நான் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இடையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த உத்தரவு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற பிறகு உடனடியாக அமல் செய்யப்படும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்த 18 சதவிகிதம் என்ற ஒதுக்கீடு எதனால் அதிகமாகக் கூட்டிக் கொடுக்கப்படவில்லை என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நிர்வாக உத்தரவின் மூலம் அவ்வாறு கொடுக்கப்பட முடியும்

என்றால் மாண்புமிகு முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், 18 சதவிகிதம் என்பதை குறைந்தபட்சம் 30 சதவிகிதம் என்று ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வரப்போகின்ற தேர்தலிலே—ஆறு மாதத்திலே நகராட்சிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் தேர்தல் நடைபெற இருப்பதாக அறிக்கையிலே இருக்கிறது. அப்படித் தேர்தல் நடக்கும் காலத்தில்—ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் ஒரு உறுதியைத் தந்திருக்கிறார்கள். பஞ்சாயத்துப் பெருமன்றங்களுக்கு நடக்கும் தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம்—ரிசர்வேஷன் கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்வோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள். நடக்க இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துத் தேர்தல்களிலே இன்றைக்குச் சட்டமன்றத் தேர்தலிலே இருப்பதைபோல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வேஷன் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதோடு, அவசரநிலை இருந்த காலத்திலும் சரி, அதற்குப் பின்னாலும் சரி. தமிழகத்திலே பல்வேறு நிலைகளிலே இருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அல்லது பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது உயர்ந்த அதிகாரிகள், திறமைமிக்க அதிகாரிகள், உரிய பதவிகளில் அமர்த்தப்படாமல் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் இருக்கிறது. அதுபற்றி தமிழகத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு உணர்வு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட வேலை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் (நாங்கள் தனியாகவே, பெயர்களைக் குறிப்பிட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.) மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஒவ்வொருவர் பிரச்னையிலும் தனிக் கவனம் செலுத்தி, நியாயம் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்திலே, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்பது எல்லோருக்கும் தெரியும். சமீபத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக, வெள்ளத்தின் காரணமாக, மேலும் கடுமையாக, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் துவங்க இரண்டு மாதங்கள்தானிருக்கின்றன. உடைபட்ட ரோடுகள் இன்னும் சீர்செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட கண்மாய்களைத் தற்காலிகமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் முழுமைக்கும் போதிய





தண்ணீர் கிடைக்க நிரந்தரமாக ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படவில்லை. ஆகவே, முதல்வர் அவர்களை, பணிவோடு கேட்டுக்கொள்வேன், எங்களுடைய பாதிக்கப்பட்ட பகுதியிலே, ரோடுகள், கண்மாய்கள் ஆகியவற்றை, கொஞ்சம் தீவிர கவனம் செலுத்தி, அவசர உணர்வோடு அதைத் சீர்செய்யவேண்டும், என்று.

ஏற்கனவே, கிருதுமால்நதி திட்டம் முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அது நடைமுறையில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். பன்னெடுங்காலமாக, அந்தப் பகுதியிலேயுள்ள மக்கள், பாசன வசதி பெற, கிருதுமால் நதி திட்டத்தை மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அமுல் நடத்துவதிலே கொஞ்சம் தீவிர கவனம் செலுத்தி, வருகிற பட்ஜெட்டிலே அதிக நிதி ஒதுக்கி, இந்தத் திட்டம் நிறைவேற ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகியும், குடி தண்ணீர் இல்லையென்ற நிலை என்னுடைய பகுதியிலே அதிகமாக இருக்கிறது. திருபுவனத்திலேயிருந்து அருப்புக்கோட்டைக்குத் தண்ணீர் கொண்டு செல்லும்போது, பக்கத்திலேயிருக்கிற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும், என்ற ஒப்புதல் அடிப்படையிலே, அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், பஞ்சாயத்துக்கள் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது, அவர்களிடம் நிதி வசதி இல்லை, ஆகையினாலே, அந்தப் பகுதி கிராமங்களுக்கு தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்கிற அளவிலே இன்றைக்குப் பல்வேறு கிராமங்களில் குடிதண்ணீரில்லாமல், 4 மைல், 5 மைல் பெண்கள் நடந்து சென்று தண்ணீர் எடுக்கிற பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்துக்களில் நிதி வசதி இல்லையென்று சொன்னால், அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்கமே நிதியுதவி செய்து, அக்கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரையிலே 30 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால், இடம் பற்றிய தகராறு நீதிமன்றத்தில் இருந்த காரணத்தால் நீதி திட்டம் அமுல் செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. நீதிமன்றத்திலே அரசாங்கத்திற்குச் சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்த ஆண்டே அந்த ஆஸ்பத்திரியைக் கட்ட முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரிகள் கட்டும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதையும் உடனடியாக நிறைவேற்றிக்கொடுக்கும்படி பிற்பட்ட என்னுடைய மாவட்ட மக்களின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தேர்தல் அறிக்கையிலே நிலச் சீர்திருத்தம் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படாமல் விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள், அதிகமாகப் பேசாமல், செயலிலே தீவிரம் காட்டும் சக்தி படைத்தவர் என்ற காரணத்தாலே, அதைச் சொல்லக் கூடாது, செயலிலே செய்து விட வேண்டுமென்ற நம்பிக்கை காரணமாக, அவர் விட்டிருப்பார் என்று நம்புகிறேன். எங்கள் கட்சியின் சார்பிலே நான் தெரிவிப்பது, உபரி பினாமி நிலங்களைக் கைப்பற்றுவதிலே நீங்கள் தீவிரமாக இருக்கவேண்டும். அதுபற்றி சட்டசபையிலும் பேசியிருக்கிறீர்கள், வெளியிலும் பேசியிருக்கிறீர்கள். அதற்கு எங்களது அணி உங்கள் பின்னால் நிற்கும் என்று சொல்லி, அறிக்கையிலே அது இடம் பெறவில்லையென்று சொன்னாலும், அதை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

மானாமதுரை தொகுதியிலே மெலெட்டூர் கிராமத்தில் ஒரு பிரசித்தி பெற்ற கோயிலும், அக்கோயிலுக்கு ஒரு தேரும் இருக்கிறது. அந்தத் தேர் பன்னிரண்டுக் காலமாக, ஓடவில்லை. அதை ஓட்ட வேண்டுமென்று அங்கேயிருக்கிற மக்கள் பன்னெடுங் காலமாக அரசாங்கத்திடம் சொல்லிக்கொண்டிருந்தாலும், சிவகங்கை தேவஸ்தானத்திற்குச் சொந்தமான கோயில் என்ற காரணத்தாலே, அவர்கள்தான் செய்யவேண்டுமென்று சொல்லி, இன்றைக்கு அந்தத் தேர் ஓடாமல் இருக்கிறது.

ஆனால், தேவஸ்தானங்கள் எப்படி இருக்கிறது என்று சொன்னால்—மிகவும் மோசமான நிலைமைகளில் இருக்கின்றன. உதாரணமாக திருப்புவனத்தில் ஒரு வார மார்க்கட் இருக்கின்றது. அந்த வார மார்க்கட்டை பகிரங்கமாக ஏலத்தில் விட்டால் வருஷத்திற்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கும். ஆனால் அதை பகிரங்க ஏலத்தில் விடாமல் தனிப்பட்டவர்களுக்கு இரகசியமாக வாடகைக்கு விட்டிருப்பதால் 4,000, 5,000க்குத் தான் போயிருக்கிறது. இதனால் வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. சட்டபூர்வமாக வரக்கூடிய வருமானத்தை இழந்து, கோவிலுக்குப் போதுமான வசதி செய்து தர இயலாமல் இருக்கிறது. எனவே அரசாங்கம் இதிலே தலையிட்டு அறநிலையத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக இன்றைக்கு போலீஸ் வழக்கைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏராளமான வழக்குகளை ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் மீது போட்டிருக்கிறார்கள். 307 செக்ஷன்படி போட்டிருக்கிறார்கள். பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறையை வைத்திருக்கிற காரணத்தால் இந்த வழக்குகளை முடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 107 செக்ஷன் மேல் போடப்பட்ட வழக்குகளுக்காக வாரம் ஒரு முறை அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டும். அவர்கள் அனைவரும் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்கள் உரிய நேரங்களில் வாய்தாவுக்குப் போக முடிவதில்லை. அதனாலேயே அவர்கள் சிறையில் வாடும் நிலைமைக்கு ஆளாகிறார்கள். தேர்தல் காலங்களிலும் சரி, தேர்தலுக்குப் பின்னாலும் சரி, இன்றைக்கு ஆளுகின்ற ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த சில அதிகாரிகள் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வருமானால் அவர்கள் மீது தனிக் கவனத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 107 செக்ஷன்படி போடப்பட்ட வழக்குகள் 6 மாதத்திற்குள் முடியாவிட்டால் தானாகவே காலாவதியாகிவிடும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். இப்படிப்போட்டிருக்கிற வழக்குகளுக்காக, என் மாவட்டத்தைச் சார்ந்த பரமக்குடி, முதுகுளத்தூர், சிவகங்கை, மானாமதுரை போன்ற பகுதிகளில் இருந்து வழக்குகளுக்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் உரிய கவனம் செலுத்தி இப்படிப்பட்ட வழக்குகளிலிருந்து நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு என்னுடைய வேண்டுகோளைப் பரிசீலிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டு, வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவை மாற்று தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் ஆளுநர் உரையின் மீது நடைபெற்று வருகின்ற விவாதத்தை சில நேரம் நான் கவனித்துக் கொண்டிருந்தேன். ஒருபுறம் முழுமையான கவர்னர் உரையை ஆதரித்தும், மறுபுறம் கடுமையாக எதிர்த்தும், கருத்துக்கள் வழங்கப்படுவதை நான் பார்க்க முடிந்தது. ஆக தேர்தல் காலத்தில் ஏற்பட்ட உறவுகள் நினைவு நீண்டுகொண்டு இருக்கிறது என்பதை நடைபெற்ற வாதப் பிரதிவாதங்கள் தெளிவாகக் காட்டுகிறது. என்னுடைய ஜனதா அணியைப் பொறுத்தவரையில், நடைபெற்ற விவாதத்தில் நடுநிலைமையை மேற்கொண்டு, ஆளுநர் உரையில் காணப்படுகின்ற நிறைவுகளைப் போற்றியும் குறைகளை இடித்துரைத்தும், கருத்துக்கள்

சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்ற ஒரே கட்சி ஜனதா கட்சித்தான் என்பதை பெருமையாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆக, ஆளுநர் உரையில் பேசுகின்றபோது, வரையறையை மீறிச் செல்லாமல் ஆளுநர் தொட்டுச், சமர்ப்பித்திருக்கின்ற விஷயத்தை மட்டும் தொட்டு நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

ஆளுநர் உரையைப் படித்துப் பார்க்கிறபோது, முதன் முதலாக என் கவனத்திற்கு, வருகிற பிரச்னை—மாறுபட்ட கருத்தை முதன் முதலிலே இந்தச் சட்டமன்றத்திலே வைக்கிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. காரணம், இந்த உரையில் 4-வது பக்கத்தில் மொழிப் பிரச்னை தொட்டுப் பேசப்பட்டு இருக்கிறது. ஆளுகின்ற சர்க்காரின் மொழிக்கொள்கை மிகத் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. இரு மொழிக்கொள்கையில் உறுதியாக இருப்போம் என்பதை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய அணியைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்னையில் மாறுபட்ட கருத்து உடையவர்கள் நாங்கள். எங்களுடைய அணி மாறுபட்ட கருத்துடையது தான் என்றாலும், அந்த மாறுபட்ட கருத்தை இந்த நிலையிலே வலியுறுத்திக் கூறி, எடுத்த எடுப்பிலேயே முரண்பட்ட கருத்துக்கு என்னை இலக்காக்கிக்கொள்ள விரும்பாமல், அந்த விஷயத்தை அப்படியே விட்டு விட்டு, மற்ற பிரச்சனை குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் தொட்டுப் பேச விரும்புகிறேன்.

அடுத்ததாக, நான் காணுகின்ற விஷயம், வேலைக்கு உணவு திட்டம் தொடர்ந்து அமலாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். ஜனதா அரசாங்கம் மத்தியில் ஏற்பட்ட பிறகு அது ஒரு செழுமையான திட்டம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு நாட்டுக்கும், பொதுவாக அத்தனை மாநிலங்களுக்கும் அவர்கள் தந்த ஒரு நல்ல திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்படும் என்று இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு இருப்பதைக் கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அந்தத் திட்டம் அமலாக்கப்படுவதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. திட்டங்கள் முழுமையாக திட்டமிடாத காரணத்தால் சில நிலைகளில் இதற்கு தரப்படுகிற மானியம், தானியம், பணம் திருப்பித் தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பல கோணங்களில் இருந்து வந்து கொண்டு இருக்கின்றன. எனவே முழுமையாக அதனை நிறைவேற்ற திட்டங்களைத் தீட்டுவதோடு மட்டுமல்லாமல், அவைகள் முழுமையாகவும், திறமையாகவும் செயலாக்கப்படுவதற்கான சூழ்நிலையை ஆளுகின்ற சர்க்கார், பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிற சர்க்கார் நிச்சயம் செய்யும் என்று நான் நம்புகிறேன், ஆசைப்படுகிறேன்.



இன்னொன்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை விரைவில் தரப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மகிழ்ச்சி அடைகிறேன். அது ஒரு பாராட்டுதற்குரிய அம்சம். ஆனால், அதிலே தெளிவாக இல்லாமல் இருப்பதை நான் பார்க்கிறேன். அதற்கு அதற்கு இடையில் அடித்தளம் அமைக்க நேரம் தேவையா என்று தெளிவு படுத்தப்படவில்லை. எதுவும் குறிப்பிடபடவில்லை. இந்த ஆண்டா, மறு ஆண்டா, படுத்தப்படவில்லை. விரைவில் செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. காலக்கெடு எதுவும் தரப்படாத நிலையில் அரசு ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறது. ஆகவே, ஒரு காலக்கெடு குறிப்பிட்டு, அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்ற முன் வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆசைப்படுகிறேன்.

இன்னொரு நல்ல திட்டத்தையும் நான் இதிலே பார்க்கிறேன். விவசாயிகள் பிரச்னையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குறைகளை தெரிந்து கொள்வதற்கும், அவற்றை நிறைவு செய்வதற்கும் மாநில அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் குழுக்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அது வரவேற்கத் தக்கது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் அந்தக் குழுக்களில் நடுநிலை உள்ளம் கொண்டவர்களைப் போடுங்கள். அரசியல் அங்கே புகுந்து விடக்கூடாது என்று நாம் எண்ணுகிறோம். இன்று இருக்கும் சமுதாய அமைப்பையும், மக்களின் மனநிலையையும் பார்க்கிறபோது எந்தத் தொழில் துறையில் இருக்கும் தனி மனிதனும் அரசியல் கட்சிகள் சார்பற்றவர்களாக இருக்க முடியாது என்று நான் அறிவேன். ஆகவே, அங்கே அங்கம் வகிக்கிற நபர்கள் எல்லாக் கட்சியையும் சேர்ந்த பொது நபர்களாக இருக்க வேண்டும் என்கிற முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் தரப்படும் என்பது கவர்ச்சிகரமான வாக்குறுதி. நான் நிச்சயமாக அது குறித்து விமர்சித்துப் பேசமாட்டேன். காரணம், விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கின்ற கடன்கள் ஒட்டு மொத்தமாக ஒழித்துவிடுவது என்கிற நிலையை நாம் மேற்கொள்வது பொருளாதாரத்தில் நாம் பார்க்கிறபோது செழுமையான கொள்கை இல்லை என்பது என்னுடைய எளிமையான கருத்து. இருந்தாலும், விவசாயிகளுடைய கடனை ரத்து செய்யவேண்டும் என்று கருத்துக்கள் பரிமாறப்படும்போது, அதை எதிர்த்துப் பேசுகின்ற நிலையில் நான் இல்லை. காரணம் விவசாயப் பெருமக்களின் குரோத உணர்ச்சிக்கு என்னை இலக்காக்கிக்கொண்டு விடுவேனோ என்ற

அச்சத்தின் காரணமாக நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. விவசாயிகளுக்கு இருக்கும் கடனை ஒழித்து விடுவது என்ற நிலையை நாம் மேற்கொள்வதாக இருந்தால் சமுதாயத்தில் வேறு நிலைகளில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளர் வர்க்கம் இருக்கிறது, அவர்களும் கடன் தொல்லையில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களும் நிவாரணம் பெறுவதற்கு அருகதை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதைச் செயல்படுத்த அரசு தீவிரமாக எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை எங்களுடைய கட்சி முழுமையாக ஆதரிக்கும். இதற்கிடையிலே ஊராட்சி ஒன்றியங்களிலே வேலை பார்க்கும் ஆசிரியர்களின் கருத்தை இந்த அரசு ஆராய்ந்து பார்த்திருக்கும்; அவர்களும் தங்களுடைய நிலையை அரசு ஊழியர் என்ற நிலைக்கு உயர்த்த இசைவு அளித்திருப்பார்கள்; அதற்குப் பிறகுதான் அரசாங்கம் நிச்சயமாக இந்த முடிவை எடுத்திருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

அடுத்து இருக்கிற ஒரு விஷயத்தில் எனக்கு அதிகமான சந்தேகம் இருக்கிறது. பஞ்சாயத்துத் தேர்தலிலே வாக்காளர்களாக இருப்பதற்கு 18 வயது போதும் என்று அரசாங்கம் மாற்றுக் கருத்து கொண்டதாக இருக்கிறது. இந்த விஷயத்தில் நான் அரசை கடுமையாக எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். ஏற்கெனவே 21 வயது என்று இருக்கிற நேரத்திலேயே 19 வயது உள்ளவர்களும், 18 வயது உள்ளவர்களும் 18 வயதிற்குக் குறைந்தவர்களும் கூட வாக்காளர் பட்டியலிலே தங்களுடைய பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையிலே, வாக்காளர்கள் ஏற்கெனவே அரசு நிர்ணயித்துள்ளபடி 21 வயது உடையவர்களாக இருக்க வேண்டும். அந்தக் கருத்தைத் தளர்த்தக்கூடாது என்று நான் சொல்லும்போது இளைஞர்களுடைய எதிர்ப்புக்கு நான் ஆளாவேனோ என்ற அச்சம் இருந்தாலும் கூட சமுதாயத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் சொல்கிறேன்; ஏற்கெனவே இருக்கிற வயது வரம்பை அரசாங்கம் மாற்றிவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். 18 வயது என்று குறைக்கும்போது 15 வயது, 14 வயது உடையவர்களும் வாக்காளர் பட்டியலிலே இடம்பெற்று, குழந்தைகள் கூட வாக்காளர்களாக மாறும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய கட்சி வரவேற்கின்ற கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவைகளைச் செயல்படுத்துவதற்கு எங்களுடைய கட்சி துணை



நிற்கும் என்று கூறி, என்னுடைய கருத்தை சுருக்கமாகச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக மகிழ்ச்சி தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** வணக்கத்திற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றத்திலே எனக்கு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னை பெருவாரியான வாக்குகளை அளித்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த என்னுடைய போடி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் முதலிலே நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, "தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்; தர்மம் மறுபடியும் வெல்லும்" என்று அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிற எங்களுடைய புரட்சித் தலைவர் அரசை இந்த நாட்டிலே மீண்டும் மலர வைத்த தமிழக வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராஜன் அவர்கள் முன்மொழிந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன் என்று கூறிக்கொண்டு, என்னுடைய போடி தொகுதி மக்களின் சார்பாக இந்தப் பேரவையின் மூலமாக, இந்தப் பேரவையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்களின் முன் சில கோரிக்கைகளை வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

என்னுடைய போடி தொகுதியில் பல்லவராயன்பட்டி, மேலசிந்தளச்சேரி, டி. சிந்தளச்சேரி, டொம்புச்சேரி பகுதிகளிலுள்ள மக்கள் குடிநீர் பிரச்சினையினால் அவதியுற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் விவசாய விளைநிலம் பாதிக்கப்பட்டு, வானம்பார்த்த பூமியாக இருக்கிறது. அந்தப் பகுதியை வளமாக்க வேண்டுமானால், குடிநீர் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்றால், பெரியாற்றிலிருந்து ஒரு கிளைக் கால்வாயை ஏற்படுத்தி, அந்தக் கால்வாயை இந்த ஊர்கள் வழியாகக் கொண்டு வந்து, மறுபடியும் பெரியாற்றிலே சேர்த்து விட்டால், அந்தக் கால்வாயின் மூலமாக அங்குள்ள குளங்கள் எல்லாம் நிரப்பப்பட்டால், அங்கே உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊற்றெடுத்து அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, பண்ணையபுரம், கரியனம்பட்டி, மல்லிங்காபுரம் பகுதிகளிலே ஏல விவசாயிகளும், ஏலக்காய் விவசாய தொழிலாளிகளும் ஏராளமாக இருக்

கிறார்கள். அவர்கள் கேரளாவுக்குச் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றாலும் விளை பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்றாலும் ஒரு அதாவது போடி வழியாக மட்டும்தான் கேரளாவுக்குச் செல்ல வேண்டும் அல்லது கம்பம், கூடலூர். குமிழி வழியாகத்தான் செல்ல முடியும். அப்படிச் செல்லும் போது 50 மைல், 60 மைல் என்று செல்ல வேண்டி இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குச் செலவு அதிகமாகிறது. சிக்கனமான முறையிலே அவர்கள் செல்ல வேண்டுமென்றால் சாக்குளுத்துமெட்டு வழியாக சுமார் 16 கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு சாலையை அமைத்தால் அவர்களுக்கு வசதியும் வாய்ப்பும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதை இந்தச் சபையின் மூலமாக என் தொகுதிக்குச் செய்து கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக போடிநாயக்கனூர் சுமார் 1¼ இலட்சம் பொது மக்களைக் கொண்டிருக்கின்ற ஒரு பெரிய நகரமாக இருந்துகொண்டிருக்கிறது. 1944-லே அங்கு போடப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்படியே இன்றும் அங்கு குடிநீர்த் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் ஜனத்தொகை இன்று 4 மடங்கு கூடி இருக்கின்ற நிலையிலே அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. ஆகவே அந்த நகரசபைக்குத் தேவையான குடிநீர் விஸ்தரிப்புத் திட்டத்தை மதிப்பிற்குரிய குடிநீர் வடிகால் வாரியத்துறையின் அமைச்சரவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று நம்புகின்றேன்.

அடுத்தபடியாக பண்ணைபுரத்திலேயும் கரியனம்பட்டியிலேயும் மல்லிங்காபுரத்திலேயும் மழை பெய்யும்போது காட்டாற்று வெள்ளம் தறி கெட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அந்த ஊர் பொதுமக்கள் எவ்வளவோ சிரமப்பட்டும் அந்தக் காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலை ஒவ்வொரு வருடமும் ஏற்பட்டு ஏராளமான அரிசன குடும்பங்களின் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி பலமுறை நாங்கள் அரசிடம் கூறியிருக்கிறோம். இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகவும் தெரிவித்துக் கொள்கிறோம். தயவுசெய்து இந்தச் பிரச்சினையை சீர் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஏற்கெனவே கேரளாவிலே உள்ள கொச்சின் துறைமுகத்திலே இருந்து மதுரை மாவட்டத்திற்கு போடி வழியாக ஒரு பாதை இருக்கின்றது. குமிழி வழியாக ஒரு பாதை இருக்கின்றது. மதுரை மாவட்டத்திற்கு கொச்சின்



துறைமுகத்திலிருந்து சரக்குகளைக் கொண்டு வருவதற்கு ஏதுவான பாதை இந்த இரண்டும்தான். ஆனால் இந்த இரண்டு பாதைகளும் மிகச் சிறிய பாதையாக இருப்பதால் சரக்குகளைக் கொண்டுவர முடியாத சூழ்நிலையிலே அங்கிருந்து கோயம்புத்தூர் வழியாகவோ அல்லது திருவனந்தபுரம் வழியாகவோதான் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்தத் துறைமுகத்தால் மதுரை மாவட்டத்துக்கு பயனில்லாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே தமிழக அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி இதை நேஷனல் ஹைவேஸ் ஆக்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போடியிலே சின்னாறு என்ற ஒரு ஆறு இருக்கின்றது. இந்த ஆற்றை கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 15 ஆயிரம் பேர்கள் கடந்து சென்று அங்குள்ள காப்பி மற்றும் இலவு விவசாய நிலங்களில் கூலி வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பகுதி மழைப் பகுதியாக இருப்பதால் மழை பெய்யும்போது அந்த நதியிலே பயங்கரமான வெள்ளம் வந்து கொண்டிருக்கும். ஆகவே அங்கேயுள்ள மக்கள் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தங்கிவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். சிலர் ஆற்றைக் கடந்து செல்ல முயற்சிக்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று உயிர்கள் அந்த வெள்ளத்திற்கு அவ்வாறு பலியாகக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த அரசு அந்த பகுதியிலே, சின்ன ஆற்றிலே ஒரு சிறிய நடக்கக்கூடிய பாலமாவது கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போடியில், சுற்றியுள்ள பாரஸ்டு (காடுகள்) விளை நிலங்களிலிருந்து கிட்டத்தட்ட 40, 50 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கிருந்த ஜமீன்தார், அந்த நிலங்களையெல்லாம் அங்குள்ள சில விவசாயிகளுக்கு குத்தகையாகவும், பின்னால் அவைகளை மானியமாகவும் எழுதி கொடுத்து விட்டார். ஆனால் ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்த பிறகு அந்த நிலங்களை அப்படியே விட்டு விட்டு அரசிடம் காட்டாமல் அறிக்கை கொடுத்து விட்டார். ஆனால் பின்னாலே அந்த அரசுகள் மூன்று தலைமுறைகளாக விவசாயிகள் அனுபவித்து வந்த அந்த நிலங்களிலிருந்தும் அவர்களை வெளியேற்ற முயற்சி செய்தன. அப்போதிருந்த அரசுகளின் தலையீடுகள் காரணமாக, அவர்களின் பெருமுயற்சிகளின் காரணமாக அந்த நிலங்கள் அப்படி அப்படியே சில பேருக்கு பட்டா போட்டு கொடுக்கப்பட்டன. சில பேர்கள் தவறான முறையிலும், அன்றிருந்த அரசை அணுகி பட்டா வாங்கிக் கொண்டார்கள். அப்போது காங்கிரஸ் அரசு

ஆட்சியில் இருந்தது. ஆனால் 1 ஏக்கர், ½ ஏக்கர் வைத்திருக்கிற ஏழை விவசாயி அரசாங்கத்தையும் அணுக முடியாத சூழ்நிலையில், மற்ற அதிகாரிகளையும் சந்திக்க முடியாத சூழ்நிலையில் பட்டா பெறமுடியாத நிலையிலும் ஏராளமான இலவங்காய், காப்பிச் செடிகளை அந்த நிலங்களில் விளைவித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் பட்டா கொடுக்க முடியாத பல சூழ்நிலைகள் இருந்தாலும்கூட நமது அரசு தயவுசெய்து அவர்களுக்கு அந்த விளை நிலங்களை பட்டாக்கள் போட்டு கொடுத்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய நமது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடந்து முடிந்த தேர்தலிலே வன்முறை ஆடியது. எதிர்க் கட்சிகளை தாக்கியது' என்று கூறினார்கள். என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

பாலாறுபட்டி, விசுவாசபுரம், பத்ரகாளிபுரம் ஆகிய ஊர்களில் எல்லாம் எனக்கு எதிர்க்கட்சியாக நின்றிருந்த நண்பருக்கு சொந்தக்காரர்கள், உறவினர்கள் ஏராளமான பேர்கள் இருந்தார்கள். நான் மிகவும் பின்தங்கிய நிலையில் மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் என்னை பலமுறை தாக்க முயற்சி செய்தார்கள். என்னையும் என் கார் டிரைவரையும் பல முறைகள் தாக்கி காயப்படுத்தியிருக்கிறார்கள். பாலாறுபட்டி என்ற கிராமத்திலே அனைத்து பொதுமக்களையும் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்குகள் போடவிடாமல் மிரட்டி தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். வாக்குச் சாவடிக்கே செல்லவிடாமல், அந்த ஊரில் ஓட்டுக்கூட போட முடியாமல் செய்த அந்த நல்ல நண்பர்கள் எங்களுடைய அரசைப் பார்த்து வன்முறை ஆடியும், எதிர்க்கட்சிகளைத் தாக்கியும் அராஜகம் செய்ததாக சொல்கிறார்கள் என்று கூறி விடைபெறுகிறேன். என்னைப் பேச அனுமதித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. இ. முத்துராமலிங்கம் :** வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களே, மற்றும் உறுப்பினர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி கூறும் தீர்மானத்தின் மீது, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இதனை வரவேற்று, இதிலுள்ள சில நல்ல கருத்துக்களை போற்றி, சேர்க்க வேண்டிய ஒரு சில கருத்துக்களையும் கூற விழைகின்றேன்.





ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்தமைக்கு எங்களது கட்சியின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்து, மேலும் ஒரு சில மைனாரிட்டி ரைட்ஸ் என்ற ஒரு சில தனிப்பட்ட உரிமையை வைத்துக் கொண்டிருக்கிற சில தனியார் பள்ளிகளை நடத்துபவர்கள் சர்வாதிகாரிகளாக செயல்படுகிறார்கள். அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணற்ற தொல்லைகளுக்கும், எண்ணற்ற இன்னல்களுக்கும் ஆளாகிறார்கள்.

(முற்பகல் 12-50)

உதாரணமாக, இராதாபுரம் தொகுதியில் திசையன்விளை பேரூராட்சியில் உலகரட்சகர் உயர்நிலைப் பள்ளி என்ற பள்ளியில் பணி புரிகிற, கிட்டதட்ட பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கே பணி புரிந்த செல்வராஜ், அலன் மைக்கிள் என்ற ஆசிரியர்களை எட்டு மாதமாக ஸஸ்பென்ஷனில் வைத்து இன்னும் அதில் எந்தவிதமான ஒரு முடிவும் ஏற்படாமல் அதை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட தனியார் பள்ளிக்கூடங்களில் பணி புரிகிற ஆசிரியர்களுக்கு தகுந்ததொரு பாதுகாப்பு இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுடைய கடன் சுமையிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாக ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு எங்கள் கட்சி சார்பாக வரவேற்பு கூறி வாழ்த்துகிறேன். இருப்பினும் விவசாயச் சங்கம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு பல்வேறு கிராமங்களில் மூன்று அல்லது நான்கு ஆண்டுக்காலமாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாத ஒரு குறை இருந்து வருகிறது. இதை இந்த அரசு எப்படிச் செயல்படுத்தப் போகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் இவற்றிற்கு அரசு அறிவித்துள்ளபடி ஆறு மாதங்களில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றில் தனி அதிகாரிகள் மூலம் ஒரு சில திட்டங்களை நிறைவேற்றப்பட்டாலும்கூட முழுமையாக அரசுத் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குப் போய்ச் சேர முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு குடிநீர் வழங்கவேண்டும் என்ற ஒரு கொள்கையை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தினாலும் அதுபற்றி ஆளுநர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனது தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி, பணகுடி பேரூராட்சி, செட்டிகுளம் பஞ்சாயத்து, இலவஞ்சிபுரம் பஞ்சாயத்து இவற்றிற்கு இந்த அரசிடமிருந்து ஏற்கனவே தொகை வழங்கப்பட்டிருந்தும் முழுமையாக குடிநீர் திட்டம் அங்கே செயல்

படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் பெருமானுக்கு ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரையில் இன்னும் கூட கிராமங்கள் பேருந்துகளைப் பார்க்காத ஒரு நிலை இருந்துவருகிறது. பேருந்து எப்படி இருக்கும், அதை நாங்கள் பார்க்க வேண்டும் என்று கூறுகிற அளவிற்கு ஒரு சில குக்கிராமங்கள் இருக்கின்றன. அப்படிபட்டதொரு நிலையை மாற்றி எல்லாக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ மக்களுக்கு எண்ணற்றச் சலுகைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது. இருப்பினும் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு இருக்கும் அன்றாடப் பிரச்னையான கட்டுமர மீனவர்கள் பிரச்னை, விசைப் படகுப் பிரச்னை போன்றவற்றிற்கு இந்த அரசு நிரந்தரமான ஒரு தீர்வினைக் காணவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இறுதியாக, தேர்தல் நடந்த நேரத்தில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எங்களது தொகுதிக்கு வருகை தந்திருந்தபோது அங்கே போடப் பட்டிருந்த விழா மேடையை ஹைவேஸ் என்ஜினியர், ரோடு இன்ஸ்பெக்டர்ஸ் போன்றவர்கள், முதல் அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக அந்த மேடையை பிரித்தெடுக்க வேண்டும் என்று அவர்கள் அதிகாரம் செலுத்திய நேரத்தில் அதைத் தடுத்த நமது இயக்கத்தைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் ஜான் தேவ இரக்கம், முருகேசன், இராமச்சந்திர மார்த்தாண்டம், ஜெய்சிங், கே. எஸ். கோனார், சுயம்புகேசன் போன்றவர்கள்மீது கொலை வழக்கு போடப்பட்டுள்ளது. இப் படிப்பட்ட வழக்குகள் எவ்வளவோ போடப்பட்டிருப்பினும்—அவ்வழக்குகளை இந்த அரசு வாபஸ் பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இந்த வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு காந்தி-காமராஜ் தேசியக் காங்கிரஸ் சார்பில் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக ஆளுநர் உரையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் உண்மையான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.





பெருமதிப்பிற்குரிய ஆளும் கட்சி அங்கத்தினர் டாக்டர் சமரசம் அவர்கள் இங்கே பேசும்போது, 1—6—1980-ம் நாள் தமிழகத்திலே சூரியனே தென்படவில்லை என்ற கருத்தை மிகுந்த உற்சாகத்தோடு குறிப்பிட்டார்கள். அவர் டாக்டருக்குப் படித்தவர். விஞ்ஞான உண்மைகளை நிச்சயமாக மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அறிந்திருக்கும் ஆற்றல் பெற்றவர். பொதுவாக, ஒவ்வொரு நாள் மாலையிலும் சூரியன் மறைவது உண்மைதான். மறைவதுபோல் தோன்றும். ஆனால், அதே நேரத்தில் உலகத்தில் வேறொரு பகுதியில் சூரியன் ஒளியுடன் விளங்கிக் கொண்டிருப்பான். இதை சமரசம் அவர்கள் நிச்சயமாக அறிந்திருப்பார்கள். அதையும் மீறித்தான், டாக்டர் சமரசம் போன்றோரின் வாதத்தை மீறித்தான் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து மூன்றாம் முறையாக போட்டியிட்டு, நான் வெற்றி பெற்று வந்திருக்கிறேன். அந்த வகையில் என்னுடைய தொகுதி மக்கள் இந்த மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் தெரிந்தோ, தெரியாமலோ சில முக்கியமான உண்மை களை மனப்பூர்வமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "வறுமைக் கோட்டின் கீழே இருக்கும் மக்களின் சதவிகிதம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் இருந்து வருகிறது" என்ற ஒரு பேருண்மையை கவர்னர் பெருமகனார் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல. "நாடு வறுமையில் இருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் வாழ்விலே விளக்கேற்றி வைக்க தன்னால் இயன்றவரை எல்லாவற்றை யும் இந்த அரசு செய்ய உறுதி கொண்டுள்ளது" என்று ஆளுநர் தனது ஆர் வத்தை காண்பித்திருக்கிறார்கள், அதோடு மட்டுமல்ல. அப்படி ஆர்வத்தைக் காண்பித்த நம்முடைய ஆளுநர் "தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துடிப்பாக செய லாற்றும் அரசு இங்கே அமைந்திருப்பதாகவும்" குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்துடன் "இந்த அரசும், மன்ற உறுப்பினர்களும் வறுமையைத் துடைக்கவும், எளியோரின் வாழ்வை உயர்த்தவும் பாடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டு" என்றும், தன்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. தமிழ்நாடு வறுமையில் மிதந்து கொண்டிருக் கின்றது என்றும், வறுமைக் கோட்டின் கீழே வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 1977-க்குப் பிறகும்கூட, மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் 1977-லே பொறுப்பேற்றார்—அதற்குப் பிறகும்கூட நாளுக்கு நாள் வறுமை வளர்ந்து வருகின்றது என்ற உண்மையை கவர்னர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் என்னுடைய சில கருத்துக்

களைச் சொல்வதற்கு முன்னால், வேறொரு புதிய கருத்தை தெரிவிக்கவும், அந்தத் தெளிவுபடுத்தவும் விரும்புகிறேன். பொதுவாக, இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் அதன் தலைவர் உள்பட, சொற்பொழிவாளர்கள், எழுத்தாளர்களாக இருக்கின்ற பலரும் 'அமரர்' என்ற வார்த்தையை அண்ணாவின் பெயரோடு ஒட்டிப் பேசி வருவதைப் பார்க்கிறோம். அநேகமாக அறிவுக் கருத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற இந்த மாமன்றம், பகுத்தறிவுக்கு மதிப்பு தருகின்ற இந்த மன்ற உறுப்பினர்கள் இந்தக் கருத்தை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'அமரர்' என்ற சொல் தமிழ் இலக்கியத்தில் வந்தாலும் சரி, பேச்சு வழக்கில் வந்தாலும் சரி, அறிவு இயக்கத்தைக் கண்ட நாம் 'அமரத்துவத்தை' ஐதீகப் பொருளில் ஒத்துக்கொள்வதில்லை என்பதை பெருமதிப்பிற்குரிய மன்ற உறுப்பினர்களுக்கும். மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, அண்ணாவின் பெயரைக் கூறுகின்றபோது, "நாமம்" என்று சொல்வது அ.தி.மு.க.வினரின் வழக்கமாக இருக்கிறது. இந்த நாமத்தை அழிக்கத்தான். . . 60, 70 ஆண்டுகாலமாக தமிழ் இயக்கம் பாடுபட்டது. நாமத்தை அழிக்கத்தான் திரு.வி.க., மறைமலை அடிகள், தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நம்முடைய பேறிஞர் அண்ணா ஆகியோர் போராட்டம் நடத்தினார்கள். ஆகவே, இந்த நாமத்தை ஒழிக்கப் பாடுபட்ட பெரியாரின் பெயரால், அண்ணாவின் பெயரால் மீண்டும் இந்த நாமம் போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். 'அமரர்' 'நாமம்' என்று பேசும் பழக்கம் அ.தி.மு.க.விலிருந்து ஆளுநர் உரைவரைக்கும் வளர்ந்து வருவதை கண்டு வியப்படைகிறேன்; வருத்தப்படுகிறேன். அத்தகைய வார்த்தையை எதிர்காலத்திலே பயன்படுத்த வேண்டாம் என்று தாழ்மையுடன், பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, "தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்" என்று ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே இரண்டு முறை இந்த மன்ற உறுப்பினராக இருந்தவன். அக் காலத்திலே இருந்தும் அதற்கு முன்பாக பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலிருந்தும், இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை பெரும்பாலும் அறிவேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காங்கிரஸ் ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து அண்ணா காலத்திலும், பிறகு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை உலகம் அறியும்.



(பிற்பகல் 1-00)

ஆனால் 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு என்ன நடவடிக்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சிறப்புத் திட்டமாக அமலாக்கப்பட்டது என்பதை நான் அறிந்து கொள்ள விழைகிறேன். அது ஆளுநர் அறிக்கையில் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களுக்கு விளக்கப்பட வேண்டிய உண்மையாகும். கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அந்த நேரத்தில் 45,000 தாழ்த்தப்பட்ட குடி மக்களுக்கு எரியாத வீடுகள் சிமென்டால் ஆன வீடுகள் கட்டித் தந்தார்கள். அந்தத் திட்டம் நிச்சயமாக 1977 க்குப் பிறகு முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அந்தத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளம் தருகிறோமே தவிர திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசு நியாயமாக நடக்கிறது, தர்மப்படி நடக்கிறது என்று கான்ஸ்டிடியூஷனில் இல்லாத 'தர்மம்' என்ற வார்த்தையைக்கூட பயன்படுத்தி ஆளுநர் பெருமைப்படுகிறார். ஆளுநர் உரையில் வருகிறது. ஆனால் திருச்சி மாவட்டத்தில் 1973-79 ல் 300 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த 300 வீடுகளும் முன்னாள் அமைச்சர் சவுந்திரபாண்டியன் தொகுதியில் மட்டும் கட்டப்பட்டிருக்கின்றன. திருச்சி ஜில்லாவில் வேறு எந்த ரிசர்வ் தொகுதியிலும் கட்டப்படவில்லை. இதைத்தான் ஆளுநர் தர்மம், நியாயம் என்று புகழ்கிறார் போலும்! பல்வேறு முயற்சிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக ஆளுநர் உரையில் சொல்லப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்துவிட்டால் மயானச் செலவுக்கு 50 ரூபாய் தரப்படுகிறது என்பதுதான் புதிய திட்டமாகும். நான் வேதனையோடு குறிப்பிடுகிறேன்; இந்தியத் திருநாட்டில் சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் இறந்து போனால் தூக்கி எறியக் கூட நாதி இல்லை என்ற நிலைமை இருப்பது இது இந்த நாட்டுக்கு இழுக்கும் அவமானமும் ஆகும். வாழ வழி வகுத்தார் கலைஞர்; ஆனால் செத்துப் போனால் 50 ரூபாய் தருகிறோம் என்கிறது இந்த அரசு. இறந்து போனால் மயானச் செலவுக்கு 100 ரூபாய் கூடக் கொடுங்கள். ஆனால் அதோடு தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினை முடிந்து விடுகிறதா? வாழ்கிறபோது அவனுக்குத் தொழில் கற்றுக் கொடுக்க, படிக்க, வீடு கட்டிக்கொள்ள வேறு பல காரியங்களுக்கு அரசாங்கம் பணம் தரவேண்டும். செத்துப் போனால் 50 ரூபாய் அரசாங்கம் தருவது என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் பாமரத் தன்மையை ஆளும் கட்சி பயன்படுத்தி செய்யக்கூடிய காரியமாகும். அந்தத் திட்டம் தொடருவதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. அதோடு அவர்கள் முன்னேற பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டவேண்டும்.

1980 ஜூன் 26]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர், குறுக்கிடுவதற்குப் பொறுத்தருளக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு திட்டம் தேவையில்லை என்று உறுப்பினர் கருதுகிறாரா ?

**திரு. ஜே. எஸ். இராசு :** மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இதை நீங்கள் தொடருங்கள். ஐம்பது ரூபாயை நூறாகக் கூட தாருங்கள், பாராட்டுகிறேன். அதோடு நிறுத்திவிடாமல் ஏற்கனவே இருந்த அரசு செய்த திட்டங்களை எல்லோருக்கும் தரவேண்டுமென்று மதிப்பிற்குரிய நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 ரூபாயாகத் தருவதை 100 ரூபாயாகத் தாருங்கள் என்று சொன்னார்கள். எனது பெருமதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் 50 ரூபாய் தருவதை மறுக்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜே. எஸ். இராசு அவர்கள் பேச்சின் துவக்கத்திலேயே கலைஞர் ஆட்சிக் காலத்தில் வீடு கட்டித் தரும் திட்டத்தின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு நாலாயிரத்திலிருந்து நாலாயிரத்து ஐநூறு ரூபாய் வரை இலவசமாகக் கொடுத்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னொருவர் பேச்சிலே குறுக்கிட்டுப் பேசக்கூடாது. உறுப்பினர் தாம் பேசும்போது பதில் சொல்லலாம்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உண்மையான புரட்சித் தலைவராக விளங்கிய லெனின் அவர்கள் " ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மின்னொளியும் அறிவொளியும் அடிப்படையாக அமைந்திருக்கிறது " என்று குறிப்பிட்டார்கள். மிக முக்கியமாக இருக்கும் மின் ஒளியைத் தரக்கூடிய மின்துறை தமிழ் நாட்டில் எப்படியெல்லாம் நிர்வகிக்கப்படுகிறது என்பதை நாட்டு மக்கள் தெளிவாக அறிவார்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கும் பெரிய பிரச்னை விவசாயிகளின் பிரச்னை—இந்த விவசாயப் பிரச்னையில் மிக முக்கியமானது (Burning Problem) ஆக இருப்பது விவசாயப் பணிக்கு மின் இணைப்பு தருகின்ற பிரச்சினையாகும்.

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பாக அ.தி.மு.க. ஆட்சி மின்சார இலாகா மூலமாக ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகள் தங்கள் பாசனக் கிணற்றுக்கு மின் இணைப்புத் தேவை என்றால் பம்புசெட்டுகளை வாங்கி வைத்துவிட்டு உடனடியாக சம்பந்தப்பட்ட மின் இலாகா அதிகாரிகளிடம்



1980 ஜூன் 26] [திரு. ஜே. எஸ். இராசு]

தங்கள் பெயர்களை பதிவு செய்துவிட்டால் வெகு விரைவிலே அவர்களுக்கு மின் இணைப்புத் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை நம்பி பல்வேறு கிராமங்களிலே உள்ள வாழ்வின் அடித்தளத்திலே உள்ள விவசாயிகள் நினைத்தால் 100 ரூபாய்கூட கடன் பெற முடியாத நிலையில் உள்ளவர்கள்—தங்களிடம் இருந்த பண்டபாத்திரங்கள் முதல் மிச்சம் மீதியிருந்த நகைகளை எல்லாம் விற்று அல்லது கடன் பெற்று பம்புசெட்டுகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். பலன் ஒன்றையும் காணோம். வாங்கி வைத்த அந்த பம்புசெட்டுகள் மின் இணைப்பு தரப்படாததால் வறிதே கிடக்கின்றன. மனப்பூர்வமாகச் சொல்கிறேன், நான் கண்ட காட்சியைச் சொல்கிறேன், தமிழ் நாட்டிலே உள்ள வீடுகளிலே உள்ள திண்ணைகளிலே இன்றைக்கு பம்புசெட்டுகள் தூங்குகின்றன. ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கடன் பெற்று பம்புசெட்டுகளை வாங்கி வைத்திருக்கிறான், இரண்டு ஆண்டுகளாகின்றன, மின் இணைப்புக் கிடைக்கவில்லை. ஏதோ சிலருக்கு தந்திருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் எதிர்பார்த்த அளவிற்குத் தரவில்லை. கையிலே இருந்த நகையும் போய், முகத்திலே இருந்த புன்னகையும் போய் அவர்கள் இன்றைக்கு வேதனைக் கண்ணீர் விடுகிறார்கள் ; விழிநீரைத் துடைத்துக் கொடிருக்கிறார்கள்.

ஒரு அரசு வரி வசூலையும் செய்யவேண்டும். மின்சாரத் துறையிலே இருந்து வரவேண்டிய தொகையையும் வசூலிக்க வேண்டும், வருமானம் இருந்தால்தான். அப்பொழுதுதான் இப்படிப்பட்ட வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்ய முடியும். என்னுடைய வட்டத்தில் பெரம்பலூர், வரகூர் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் 2 ஆயிரம் பம்புசெட்டுகளை வாங்கி அவை இரண்டாண்டுகளாக வறிதே கிடக்கின்றன. அந்த விவசாயிகள் என்ன செய்வார்கள் ? குடும்பத்திலே நிகழ்கிற நல்லது கெட்டதற்கு செலவுக்கு எங்கே போவான்? எனவே மின் இணைப்பு தருகிற இந்தப் பெரிய பிரச்சினை குறித்து அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்பற்றி ஆளுநர் உரையிலே பொதுவாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, குறிப்பாகச் சொல்லப்படவில்லை. இதை மின்துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது சொல்லியிருக்கிறேன் ' காவிரி தென்பெண்ணை, பாலாறு . ' என்ற பாட்டைத்தான் படித்திருக்கிறோம் ; அல்லது குழந்தைகள் அதைப்பாட கேட்கிறோம். ஆனால் உள்ள நிலைமை வேறு. திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர் பகுதி, இராமநாதபுரத்தைவிட வறண்ட பகுதி என்பது நம்முடைய நாவலர் அவர்களுக்கும்



123049

தெரியும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களுக்கும் தெரியும். மிக வரண்ட பகுதி. எனவே விரைவில் விவசாய காரியங்களுக்கு மின் இணைப்பு தாருங்கள், இதைக்கூட அரசு செய்யாவிட்டால் நீங்கள் எப்படி நான்கு கிலோ வாங்கினால் ஒரு கிலோ இனாம் என்ற திட்டத்தை நிறைவேற்றுவீர்கள்? ஆகவே இந்தக் கருத்துக்களை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு எல்லா விவசாயிகளுக்கும் சீனியாரிடி பார்க்காது மின் இணைப்புத் தர வேண்டும். வரி வசூல் செய்வது ஒரு அரசின் கடமை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி எப்படி நடந்து வருகிறது என்றால், ஒரு பொதுவான கண்ணோட்டத்திலே பார்த்தால், ஏதோ நடந்தவரை நடக்கட்டும், வந்தவரை லாபம் என்ற போக்கில், 'நவாப்' பாணியில் இருக்கிறதே தவிர புதிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தைப் பார்க்க முடியவில்லை. அதற்காக வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. அரசு வரி வசூலை ஒழுங்காகச் செய்ய வேண்டும்; அவ்வாறு சரியாக வசூலிக்காவிட்டால் அமைச்சர்களுக்கும், சபாநாயகருக்கும் கூட சம்பளமே கொடுக்க முடியாத நிலைகூட வரும். ஆகவே திட்டங்கள் அதற்கு தீட்டப்படவும், அதை நிறைவேற்றவும் வருவாயைப் பெருக்க வேண்டும். அத்தகைய கடமை உணர்வு இல்லாமல் ஏதோ நடந்தவரைக்கும் லாபம் என்ற முறையிலே இந்த அரசு நடந்து கொண்டிருப்பது நல்லதல்ல. குறிப்பாக மின் இலாகாவில் பணம் இருந்தால் தானே கம்பம் வாங்க முடியும். பீங்கான் குமிழிகள் வாங்க முடியும். கம்பி வாங்க முடியும். கம்பம் வேண்டுமானால் நாம் செய்யலாம். கம்பி வேண்டுமானால் சிறிதளவு நாம் செய்யலாம், ஆனால் மற்ற பொருள்களுக்கு நாம் வெளி மாநிலங்களுக்குத்தானே போக வேண்டும். அவைகளை வாங்குவதற்கு நம்மிடம் பணம் வேண்டாமா? என்ன செய்யப் போகிறீர்கள்? எனவே மின் இலாகா மீது இன்றைக்கு மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். அந்தக் கொதிப்பைப் போக்க மின்துறை அமைச்சர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது முதலமைச்சரை ஏழைகளின் ஏந்தல் என்றும், வாரி வாரி வழங்கிய வள்ளல் என்றும், கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் என்றும் சொன்னார்கள். "இசை முரசு" நாகூர் அனிபா அவர்கள் கூட ஒரு காலத்தில் 'ஈந்து ஈந்து சிவந்தன எம். ஜி. ஆர். இருகரமே' என்று உச்ச சுவரத்திலே பாடியிருக்கிறார்கள். அப்படிப் பாடியதற்கு இப்போது அவர் வருத்தப்படுகிறார். எப்படியோ எம். ஜி. ஆர். நல்லவர் என்று நம்பி மக்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்.



(பிற்பகல் 1-10)

மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள், நீங்கள் ஆள வந்து இருக்கிறீர்கள். அண்ணா ஒப்புக்கொண்ட ஜனநாயகத்தின்படி; இதை நாங்கள் மதிக்கக் கடமைபட்டிருக்கிறோம். அதே நேரத்தில் சூரியனே அஸ்தமித்துப் போயிற்று என்று நீங்கள் சொல்வது சரியல்ல. கிட்டத்தட்ட 84 இலட்சம் பேர் உங்கள் கட்சிக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். நான் சொல்ல வருவது, இவ்வளவு பெரிய ஆட்சியை ஏற்றிருக்கின்ற எம்.ஜி.ஆர். அவர்கள் நல்ல அறிவிப்பைத் தந்தார்கள். ஆனால் கவர்னர் உரையிலே மத்திய அரசு மறுத்து விட்டது, அவர்கள் கொடுத்தால் நாங்கள் நிறைவேற்றுவோம் என்று சொல்வதும், டெல்லிக்கு லெட்டர் எழுதியிருக்கிறோம் என்று சொல்வதும், அடிக்கடி வருகிறது. ஆக இவ்வளவு நழுவல், இவ்வளவு தயக்கம் ஏன்? பிரச்சினைகளிலிருந்து விலகிப் போகும் தன்மையை இந்த அறிக்கையில் பார்க்கிறோம். ஏன் அப்பொழுதே, எலக்ஷன் அறிக்கை விட்டபொழுதே தெரியாதா? சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஒத்துக் கொள்ளாது, ரிசர்வ் பேங்க் கிளியரன்ஸ் கிடைக்காது என்பது ஏற்கெனவே தெரியாதா? அனைத்துக் கடன்களும் ரத்து என்று சொன்னீர்கள். ரத்து செய்து விட்டு, How to run our Government? How to rule our State? ரத்து பண்ணுவதாகச் சொன்னீர்களா இல்லையா? ஆட்சிக்கு வந்தாகிவிட்டது. ரத்து செய்ய வேண்டியதுதானே. இதற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்டை ஏன் எதிர் நோக்க வேண்டும்? மத்திய அரசுக்குக் கடிதம் எழுதுவானேன்? இந்திரா காந்தி அம்மையாரின் கருணையை எதிர்ப்பார்ப்பானேன்? "என்னால் கடனை ரத்து செய்ய முடியும்,? என்று எம். ஜி. ஆர். சொல்லிவிட்ட பிறகு இன்று விவசாயிகளுக்கான கடனை ரத்து செய்ய ஏன் தயங்க வேண்டும். எல்லோரும் சேர்ந்து மலையைத் தூக்கி என் தலையில் வையுங்கள், நான் தூக்குகிறேன் என்று யாரோ கதை சொன்ன மாதிரி மத்திய அரசு உதவி செய்தால் ரத்து செய்வேன் என்றால் என்ன பொருள்? எம். ஜி. ஆர். மட்டும் தான் இரண்டு தடவை முதல்வரானவர் என்று சொல்கிறார்கள். கலைஞர் அவர்கள்கூட 1969-லே முதல்வராக ஆனார், 1971-லே மறுபடியும் வந்தார். எனவே, அவரும் இரண்டு தடவை வந்திருக்கிறார்கள். காமராஜர்கூட வந்திருக்கிறார். அதில் மட்டும் பெருமையில்லை. இரண்டாவது முறையாக வந்த எம். ஜி. ஆர். விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்து விட்டோம் என்று சொல்ல வேண்டியதுதானே. கொஞ்சம் எனக்குக்கூட அதிலே சுயநலம் உண்டு. நானும் கடன் வாங்கியிருக்கிறேன். எல்லா உறுதிமொழிகளையும் நிறைவேற்றுவார் எம். ஜி. ஆர். என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்பது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் தாரக மந்திரம்; மூல மந்திரம். அவர் மைசூரிலே

அம்மன் முன்னால் ஜெபித்துக்கொண்டிருந்தபோதுகூட மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்றுதான் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்த மக்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் காரியங்களை நிச்சயமாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன், எனவே, ஒரே வரியில், ஒரே மந்திரத்தில், ஒரே திட்டத்தில், மன்னிக்கவும் ஒரே அறிவிப்பில் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிச்சயமாக கடன் ரத்து என அறிவிப்பார்கள் என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மக்கள் பார்த்து அமைத்த அரசு, மக்கள் விரும்பி அமைத்த அரசு, ஊழலைப்பற்றிக் கவலைப்படாமல், மலையை விழுங்கியதைப் பற்றிக் கவலைப்படாமல், ஆற்று மண்ணை அள்ளிக்கொண்டு போனதைப்பற்றி கவலைப்படாமல், மருத்துவக் கல்லூரியிலே அட்மிஷனில் நடந்த ஊழலைப் பற்றிக் கவலைப்படாமல், போலீஸ் ஸ்டேஷனில் புகுந்து கலாட்டா செய்ததை 'பற்றிக் கவலைப்படாமல், பரமக்குடியிலே தாசில்தாரின் குரல்வளையைப் பிடித்ததைப்பற்றிக் கவலைப்படாமல், நம் நாட்டு மக்கள் ரொம்ப நல்லவர்கள்— அந்த மக்கள் மீண்டும் நம்முடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களை முதலமைச்சராக அரியணையிலே அமர்த்தியிருக்கிறார்கள். இது மக்களின் தீர்ப்பு. மக்கள் தீர்ப்புக்கு வணங்கியே பழக்கப்பட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களை சென்ட் பர்சென்ட், நூற்றுக்கு நூறு, நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன், நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பு நிச்சயமாக நம்முடைய ஆளும் தரப்பிற்கு, ஆளுங்கட்சிக்குக், கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, ஆளுநர் உரையைப் பாராட்ட முடியாத நிலையில் இருக்கிறேன் என்று கூறி, வாய்ப்பளித்த மன்றத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நடந்து முடிந்த 1980 ஆம் ஆண்டு, பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னாலே, இந்தத் தமிழகத்திலே, ஜனநாயகம் அழிந்து விட்டது என்று ஏங்கிக் கொண்டிருந்த தமிழக மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து, அந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழக மக்கள் தூங்கவில்லை, நேர்மையையும், நீதியையும் இந்த நாட்டிலே நிலை நாட்ட அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அந்த வாக்குறுதிகளைப் பயன்படுத்தி, நல்லதொரு தீர்ப்பினை அளித்து, இந்தத் தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவர், எங்களுடைய இதய தெய்வம் என்பதை மீண்டும் நிலை நிறுத்தி, நல்லதொரு முடிவினை அளித்து, அப்படி



அளிக்கப்பட்ட அந்த முடிவிலே, வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கர் தொகுதியிலேயிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே, புரட்சித் தலைவருடைய தம்பியாக, எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டு நிறுத்திய நேரத்திலே, ஜனநாயகத்திற்கு சாவு மணி அடித்ததற்கு நன்றி கூறுகின்ற வகையிலே, அவருடைய குறிக்கோளை எடுத்துரைக்க என்னை ஆளாக்கி, இன்று நடைபெறுகின்ற இந்த ஆளுநர் உரையிலே, நன்றி கூறுகின்ற அளவுக்கு என்னை ஆளாக்கிய என்னுடைய தொகுதி மக்களுக்கும் இந்த மாமன்றத்தின் முன் என்னுடைய நன்றியைக் கூறி, ஆளுநர் உரைக்கு சிறு விளக்கங்கள் கொடுத்து, அந்த ஆளுநர் உரையிலே உள்ள போற்றுகின்ற தன்மைகளுக்கும் விளக்கம் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏதோ இந்த அரசு விவசாயிகளுக்கு எந்தச் சலுகையும் செய்யவில்லை, விவசாயிகளுக்காக நாங்கள்தான், எங்களைச் சார்ந்திருக்கிற இயக்கம்தான் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்று இங்கே சொல்லி, இவ்வளவு நாட்களாக இந்தத் தமிழக மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்த நிலைமைகளையெல்லாம் மறந்துவிட்டு, தமிழக மக்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்கிற இந்த நேரத்திலே, நாங்கள்தான், நாங்கள்தான் என்று வக்காலத்து வாங்குகின்ற நிலையிலே இங்கே பேசினார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் சிறு விவசாயிகளுக்கு ரூ. 40 கோடி என்று இருந்த கடனை ரத்து செய்தது புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சிதான் என்பதை மறந்துவிட்டு அவர்கள் பேசுகிறார்கள்.

அது மட்டுமல்ல; இந்த ஆளுநர் உரையிலே, விவசாயிகளுடைய குறைகளை அகற்ற, இந்த அரசு குறிப்பாக செயல்படும் என்ற ஒரு உண்மையான நிலைமையை குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கேட்கிறார்கள், விவசாயிகளுடைய கடன் ரத்து, ரத்து, ரத்து என்று சொன்னீர்களே, ஏன் ரத்தாகவில்லையென்று கேட்கிறார்கள். எனக்கு உண்மையிலே, அவர்கள் கேட்கின்ற கேள்வி சிரிப்புக்கு இடமாக இருக்கிறது. மணமகனும் மணமகளும் ஊர் அறிய, பெரியவர்கள் வாழ்த்துக் கூற, திருமணம் செய்து கொள்கிறார்கள். திருமணம் நடைபெற்ற உடனே, இந்தச் சமுதாயத்து மரபு, குறிப்பாக, இந்தத் தமிழக மக்களுடைய உணர்வு, அந்த இருவரையும், மணமகளையும், மணமகனையும், இரவிலே ஒன்று சேர்ப்பார்கள். அதற்கு முன்னாலே பெரியவர்களே அழைத்துச் சென்று, அவர்களைச் சேர்க்க வேண்டிய இடத்திலே சேர்ப்பார்கள். அதற்குப் பின்னாலேதான் நடக்க வேண்டியது நடைபெறும்.

குழந்தை எப்பொழுது வரும் என்பதெல்லாம் தெரிந்ததுதான். ஆனால், சட்ட மன்றம் முதன்முறையாக இப்பொழுதுதான் கூடி, ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கிறது. இப்படி சம்பிரதாயம் நடைபெறாமல், 10 மாதம் ஆகவில்லை, எங்கே குழந்தை என்று கேட்கிறார்களே, அவர்கள் ஆற்றவேண்டிய உரை இதுவா, அவர்கள் செய்ய வேண்டிய கடமை இதுவா என்பதை என்னுடைய எதிர்க்கட்சி நண்பர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே, எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சவாலாகவும் சொன்னார்கள். ஊழல், ஊழல் என்றும், எங்களுடைய இதய நாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஏதோ ஊழல் செய்து விட்டார் என்றும் அதை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வியை எழுப்பி, இதற்கெல்லாம் கமிஷன் அமைப் பார்களா என்று கேட்டார்கள். நியாயமான முறையிலே, நேர்மையான முறை யிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடை பெற்றுக்கொண்டிருந்தபொழுது, இங்கு தெரிவிக்கப்பட்ட நிலைமைகளை ஏற்றுக்கொண்டு, விசாரிக்கத் தயார் என்று சொன்ன ஒரே தலைவர் எங்களுடைய புரட்சித் தலைவர்தான் என்பதைக் கூறிக்கொண்டு (மேசையை தட்டல்) அதற்கு முன்னாலே, ஜனாதிபதியிடத்திலே திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் குற்றச்சாட்டுகளைக் கொடுத்த பொழுது, அதைப் பார்த்தேன், ரசித்தேன் என்று ஆணவமாகக் கூறியவர் எங்களுடைய புரட்சித் தலைவர் அல்ல என்பதையும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த ஊழலைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள், சவால் விட்டார்கள். இந்த மாமன்றத்தின் முன்னாலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்ற முறையிலே உங்களுக்கு நான் ஒரு சவாலை விடுகின்றேன்.

(பிற்பகல் 1-20)

1977 ஆம் ஆண்டு வரையில் நேர்மையான முறையில் நடந்த இந்த ஆட்சியைக் கலைத்துவிட்டு, மற்ற மாநிலங்களில் மக்களுடைய செல்வாக்கை இழந்தது போல, இங்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்கை இழந்து விட்டது. ஆகையினால்தான் இந்த ஆட்சியைக் கலைக்கிறோம் என்று சொல்லி மறு தேர்தலை சந்தித்து, சந்தித்தவர்களோடு



நீங்கள் கூட்டு வைத்திருந்தீர்கள். எங்களுடைய கூட்டணியினுடைய உறுப் பினர் திரு. வரதராசன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இவர்கள் செய்வார்களா என்று கேட்டார். நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இவ்வளவு அளவுக்குச் சவால் விட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள், அவருடைய தலைவர்களைச் சந்தித்து, 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நாமும் அண்ணா அவர்கள் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தமிழுக்காகப் பாடுபட்டவர்கள் நாம்தான் என்று ஏமாற்றிக் கொண்டிருக் கிறோம். அன்று நாம் சவால் விட்டோமே, இப்போது நமக்கு மக்கள் தீர்ப் பளித்திருக்கிறார்கள். இன்னும் நாம் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் அதிகாரத்தில் அமர வேண்டியவர்கள் அல்ல. நம்மைப் பொறுத்தவரையில், பேரவையில் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளாகவே நம்மைச் சார்ந்திருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ராஜினாமா செய்துவிடச் சொல்வோம் என்று நிச்சயமாகச் சொல்வார். அந்த நம்பிக்கை இன்று வரை எனக்கு இருக்கிறது. அவர்கள் தவறினாலும்கூட அவர்களைச் சார்ந்திருக்கிற எதேச்சதிகாரத்திற்குத் துணை சென்றிருக்கிற அந்தக் கட்சியைச் சார்ந்திருக் கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடருக்குள்ளாகவே ராஜினாமா செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அது மட்டுமல்ல. இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ராஜு அவர்கள் என்னுடைய அருமை அண்ணன் சமரசம் அவர் கள் மீது குறை கூறினார்கள். சமரசம் அவர்கள் பேசும்போது 1—6—1980-லே இருந்து சூரியன் மறைந்து விட்டதாகச் சொன்னார்கள். நான் உண்மை யிலேயே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1—6—1980 மட்டுமல்ல. அதற்குப் பின்னாலேயும் இன்று வரையில் தோன்ற வேண்டிய நேரத்திலே உதயசூரியன் முறையாகத் தோன்றியது கிடையாது. இதுதான் உண்மை. நீங்கள் பேசுவது முழுப் பூசனிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல இருக்கிறது. நீங்கள் இந்த நேரத்தில் உண்மையை ஒத்துக்கொண்டு உங்களுடைய நிலைமையை உணர்ந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாயிகள் பிரச்சினையைக் குறித்து எதிர்க்கட்சி நண்பர் மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் 5-ந் தேதி மாபெரும் பேரணி நடத்தவிருப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசைச் சேர்ந்தவன் என்ற முறையில், புரட்சித் தலைவரின் அணியில் ஒருவனாக இருக்கிறவன் என்ற முறையிலேயும் என் கருத்தை எடுத்துச் சொல்லவேண்டிய சூழ்நிலையில்.

இருக்கிறேன். காரணம் எந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகள் வழக்கை வாபஸ் வாங்கு என்று நான் பைலிலே எழுதி வைத்திருந்தேன் என்று பத்திரிகையிலே செய்தி வெளி வந்ததோ அந்தப் பைலே காணவில்லை என்ற அறிக்கை விட்டவர்கள் சார்பிலே அந்தப் பைல் இல்லை என்று சொன்ன அந்த கூட்டணியோடு தொடர்பு வைத்திருந்த எதிர்க்கட்சி உறுப்பினர் பேசி இருக்கிறார். இங்கே நடைபெறவிருக்கிற அந்தப் பேரணி தமிழகத்தில் அராஜகத்திற்கு வித்திடுகிற சூழ்நிலையாக இருக்கும் என்றும் கருதுகிறேன். அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தப் பேரவையின் முன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக வேளாண்மையைப் பொறுத்தவரையிலும், கைத்தறியைப் பொறுத்தவரையிலும் இந்த உரையிலே மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கைத்தறித் துறையைச் சேர்ந்தவர்கள் இந்த இந்திய நாட்டிலே, 9 கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வு வளம் பெற வேண்டுமானால் தமிழகத்திலே எங்களுடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எப்படி கைத்தறித் துணியைத் தெருத் தெருவாகச் சுமந்து விற்று இந்த நாட்டுக்கு உதாரணமாக விளங்கினார்களோ, அதைப்போல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே எப்படி இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறக்கூடாது என்று சட்டத்தைப் போடுகிறார்களோ அதைப்போன்று இந்த அரசாங்கத்திலே பணி யாற்றுகின்ற பணியாளர்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவரும் கண்டிப்பாக கைத்தறி ஆடைகளைத்தான் அணிய வேண்டும் என்று இந்தப் பேரவை மூலமாக மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னால் இந்த 9 கோடி கைத்தறியையே நம்பிக்கொண்டு உள்ளவர்களின்,—வாழ்க்கை வளம் பெறும் என்று இந்தப் பேரவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையை, "உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்கிற பாரதியாரின் வாய்மொழிக்கிணங்க, எந்தச் சூழ்நிலையிலும் எங்கள் ஜனநாயக உணர்வு அழிந்து விடாது, எந்தவிதமான அச்சுறுத்தலுக்கும் நாங்கள் பயப்படமாட்டோம் என்கிற வகையில், இரு மொழிக்கொள்கையை நம்முடைய அரசு பின்பற்றும் என்று அறிவித்து இருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.





அது மட்டுமல்ல, நடந்து முடிந்த தேர்தலுக்கு முன்பு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், படித்து சுதந்திரப் பறவைகளாக பாடித்திரிந்து கொண்டு இருக்கும் பட்டதாரி வாலிபர்களுக்கு உதவித் தொகை ரூபாய் 50 கொடுப்போம் என்று நாங்கள் அறிவித்தபோது, கொடுப்பது கடினம் என்று சொன்னார்கள். நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவோம் என்கிற வகையில் அதை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று ஒரு நம்பிக்கையை இந்த அறிக்கையில் தெரிவித்து இருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். அதற்காக இந்தத் தமிழக அரசுக்கு இளைஞர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரை கிராம மக்களின்—குறிப்பாக ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக தயாரிக்கப்பட்டு இருக்கும் அறிக்கை என்பதை யாரும் மறந்து விட முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த ஏழை மக்களின் வாழ்வு நல்ல முறையில் ஏற்றம் பெறவேண்டும் என்று விரும்பினார்களோ, அந்த ஏழை மக்களின் வாழ்வு மலர்வதற்காக, இந்த நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைவதற்காக இந்த உரை அமைந்து இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் மிகப் பெரிய பஸ் அதிபர்கள் இருக்கிறார்கள். மத்தியில் ஆட்சி செய்கிற இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, இங்கே எதிர்க்கட்சியாக வீற்று இருக்கிறவர்கள் கட்சியினர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு எந்த அளவிற்கு தமிழகத்திலும், குறிப்பாக என்னுடைய தொகுதியிலும் அச்சுறுத்தல்களை நடத்தினார்கள் என்பது அனைவரும் அறிவர். என் தொகுதியில் நடந்ததைப் போல் வேறு எந்தத் தொகுதியிலும் தமிழகத்தில் நடந்து இருக்க முடியாது. தமிழகம் முழுவதற்குமே சாராயக் கடை வைத்து நடத்தும் வல்லமை பெற்ற ஒருவரைக்கொண்டு எந்த அளவிற்கு எங்களை அச்சுறுத்த முடியுமோ அந்த அளவிற்கு எங்களை அச்சுறுத்தினார்கள். ஆகவே, அராஜகம் என்பது எங்களிடத்தில் இல்லை, நாங்கள் வளர்க்கப்பட்ட தலைவர்களிடத்தில் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், காவேரிப்பாக்கத்தில் ஏறத்தாழ 16,000 பேர் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அங்கே ஒரு அரசு மருத்துவ மனை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சோளிங்கர் நகர் வளர்ந்து வரும் ஒரு நகரம். அது ஒருபுறம் வடாற்காடு மாவட்டத்திலும், ஒருபுறம் செங்கற்பட்டு மாவட்டத்திலும் இருப்பதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த நகரம் ஒரு நக

[திரு. சி. கோபால்] [1980 ஜூன் 26

நாட்டியாக வளரும் அமைப்பு பெற்றதாக இருப்பதால், அதை ஒரு தனித் துறையாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவை அலுவல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு—"இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன—

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதி (வெள்ளிக்கிழமை)—

காலையும், மாலையும் பேரவைக் கூட்டம் இருக்கும். மாலை 4-00 மணி முதல் பேரவைக் கூட்டம்.

ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி (சனிக்கிழமை)—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

வழக்கம் போல் பேரவை காலை 9-00 மணிக்குக் கூடும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்."

பின்னர், பிற்பகல் 1-30 மணிக்கு பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

6. அவைமுன வைககபபபறற ஏடுகள.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

3. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அட்டுக் கடைக்காரர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 14—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 13-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அட்டுக் கடைக்காரர்கள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



1980 ஜூன் 26]

4. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு அறங்காவலர்கள் குழு விதிகளில் அலுவல் முறைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 13—8—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1244-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 47, 48 மற்றும் 49-ஆம் பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரிய (நிலுவைகளை வசூலித்தல்) விதிகளில் உள்ள சில விதிகளை செயலுக்குக் கொண்டு வருவதன் பொருட்டு பொதுப் பணித் துறையின் (மின்சாரம்) 14—3—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1464-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியச் (நிலுவைகளை வசூலித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1978) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

6. தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை, பாலக்கோடு அங்காடிகளில் சில விளைபொருள்களைச் சேர்ப்பதன் பொருட்டு வேளாண்மைத் துறையில் 26—3—1976 ஆம் தேதியன்று வெளியாகி 14—4—1976 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் 2, பிரிவு 2, பக்கங்கள் 209-211-ல் (ஆங்கிலத்தில்) வெளியான (2)/வேளாண்மை/1842/76 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 19—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2292-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

7. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தினைப் பொருத்தமட்டில் பழுத்த மற்றும் பழுக்காத வாழைப்பழங்கள், வாழைக்காய் வறுவல் மற்றும் வாழைப்பழத்தில் தயாரிக்கப்பட்ட மாவு போன்ற வாழைப்பழ பொருட்களை வேளாண்மை உற்பத்திப் பொருட்களாக அறிவிக்கை செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18-12-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2249-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. நிலக்கடலை, எள், ஆமணக்கு, பருத்தி, கரும்பு, வெல்லம், மிளகாய், மஞ்சள், நெல், கம்பு, சோளம், கேழ்வரகு ஆகியவற்றினைப் பொருத்த மட்டில் சேலம், ஆத்தூர், நாமக்கல், திருச்செங்கோடு, ராசிபுரம், கொங்கனாபுரம், வாளத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அங்காடிகள் மற்றும் இவ்வங்காடிப் பகுதியினை சுற்றியுள்ள 16 கி.மீ. பகுதிகளை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கைச் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 21—12—1974 ஆம் தேதியிடப்பெற்ற 2304-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1953) 23 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 4—2—1980 ஆம் தேதியிட்ப்பெற்ற 285 ஆம் எண் அரசாணையில் அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—எதுவுமில்லை.

## இணைப்பு I

(106 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் காண்க)

Honourable Members of the Legislature,

I have immense pleasure in welcoming the Members, who have been returned victorious in the historic General Election, winning the confidence and support of the people.

2. In this test of democracy, the people of Tamil Nadu have given a clear verdict without confusion or fear. I admire their clarity of thought and their demonstration of the understanding of their duties. I express my appreciation for free and peaceful election. This Seventh Assembly of Tamil Nadu is the gift by the people of Tamil Nadu for truth, justice and honesty offered to the whole of India. I am proud to see you all, who have been returned with new vigour, winning the confidence of the people after the Sixth Assembly was dissolved within two and a half-year as a repercussion of the Parliamentary elections.

3. In electing you, the people have discharged their duties; I have no doubt you will discharge your duties properly. People have placed immense trust in you. I am sure you recognise this fact just as I do.



4. My Government is enthusiastic in implementing the policies of Anna. Everyone can rest assured that my Government, well known for its integrity, will always ensure purity in public life and administration. This Government will continue to follow the two language policy, enunciated by Anna, which has been adopted by this House. Tamil Nadu which has demonstrated its originality in several spheres, has unshakable faith in the unity of the country.

5. This Government is firmly resolved to take every possible step to brighten the life of all the people below the poverty line. 'Food for Work Programme' started with the intention of reducing the ever enlarging unemployment problem will be continued. Many schemes announced by this Government could not be implemented in the interim period. One such scheme, giving relief to the unemployed graduates, will be implemented soon.

6. The food position in the State continues to be satisfactory, largely because of the various measures taken by this Government. The Civil Supplies Corporation has been procuring paddy from the ryots at the rate of Rs. 105 per quintal which is higher than the price fixed by the Government of India. It is proposed to constitute an Agriculturists Welfare Committee at the State level under the presidentship of the Minister for Agriculture. This Committee will include representatives of the agriculturists and experts. This Committee would bring to the notice of the Government, the various problems of the agriculturists and would also offer constructive solutions for the speedy redressal of these problems. Similar Welfare Committees will also be set up at the District level.

7. My Government is deeply concerned about the debt burden of the farmers, that too of the small farmers. Government is aware of the problems faced by the farmers like rising cost of cultivation and need for fixing reasonable price for the produce. This Government, in consultation with Union Government, will strive hard to find early solutions to these problems. Government is examining vigorously measures to give relief to small farmers. It is the endeavour of this Government to evolve suitable credit policy which will eliminate the emergence of similar crisis in future, in addition to rendering relief presently. State Government can implement these measures, involving large financial outlays, only with assistance from Centre. I hope Government of India will come forward to sympathetically consider the reasonable request made by the State Government.

8. The Government has drawn up a scheme to enlarge the activities and strengthen the Regulated Markets in order to ensure a fair price for the agricultural produces. This scheme has been forwarded to the Government of India to obtain World Bank aid. It is also necessary to streamline the regulated market committees to enable them to function effectively. Suitable legislation for this purpose would be brought before the House during the current session. Elections would be conducted for the Regulated Markets on the basis of the new legislation.

9. As Honourable Members are aware, a draft legislation to reorganise and streamline the Co-operative Societies was introduced in the last session of the previous Assembly. When this was under the consideration of the Joint Select Committee, the Assembly was dissolved. This Government proposes to re-introduce this legislation during the current session. Elections to the Co-operative Societies would be conducted very soon, on the basis of the new Act.

10. This Government has always believed in friendly negotiations with neighbouring States to solve the various inter-State problems. The Government is hopeful of finding solutions through cordial discussions on the matters like utilisation of surplus electricity or of inter-State waters. This Government will soon take steps to resolve the pending inter-State river waters issues and in particular, the one relating to the Cauvery waters. This Government would endeavour to seek a solution which will not be detrimental to the interests of Tamil Nadu. At this juncture, I make an appeal to Government of India to allow this Government to implement the Electricity-Aluminium barter accord reached with Kerala.

11. The House is aware of the various measures taken by the Government for the development of the Handloom industry which in importance is next only to Agriculture in providing employment. The Government has invested Rs. 5.77 crores in the share capital of the Co-optex in the last three years. The turnover of the Co-optex, which was only Rs. 17 crores in 1975-76, is estimated at Rs. 36 crores during 1979-80. This Government has decided to advance a sum of Rs. 5 crores to the Co-optex to enable it to purchase the stocks accumulated with the primary societies. The Co-operative Spinning Mills in the State had a total spindlage of 2.07 lakhs in 1975 and produced 4,000 bales of yarn per month. As a result of the various measures taken by this Government the spindlage of these Mills has increased



to 3.14 lakhs by the end of 1979 and the monthly production has reached 7,000 bales which meets the yarn requirements of the Co-operative weavers' societies. This Government would continue to take all possible steps to ensure that the weavers get their yarn requirements promptly and at a fair price.

12. Investments in Tamil Nadu by Government of India stood at Rs. 262 crores by the end of 1969 out of the total investment of Rs. 3,463 crores made throughout the country, forming 8 per cent of the total investment. As against this, the investment by Government of India in Tamil Nadu upto 1979 was Rs. 616 crores, working out to only 4 per cent of the total investment of Rs. 15,668 crores made throughout the country. This sharp decline in share of Central investment in Tamil Nadu is perhaps one of the important reasons for the high percentage of people below the poverty line in Tamil Nadu. The large volume of unemployed in Tamil Nadu can also be attributed to the failure of the Government of India to set up major industries in Tamil Nadu and to the delays in clearing the setting up of major industries by the private sector. While the Government of Tamil Nadu is doing its utmost to create employment opportunities in fields coming under its purview like Agriculture, Small-Scale industry, I would request Government of India to increase its investment in Tamil Nadu in order to supplement the measures taken by State Government and also to assist the growth of Small-Scale industries. I hope steps will be taken by Government of India to redress the imbalance in investments quickly.

13. Members may be aware of the steps taken by this Government to set up new universities at Coimbatore and Tiruchirappalli. The University Grants Commission has conveyed its consent for setting up these universities. Suitable legislation for this purpose will be brought before the House and speedy steps will be taken to establish them. I am sure by these steps, there will be upgradation in the standard of higher education and acceleration in various research efforts. A Bill will also be brought before this House to reorganise the administration of universities of Annamalai, Madras and Madurai-Kamaraj. The Government will take steps to set up a University covering all the educational institutions at Karaikudi. I am confident that the Members of this House will welcome the decision of this Government to set up a Tamil University.

14. Government proposes to set up a Centre for Appropriate Technology to develop employment opportunities. This Centre utilising the scientific knowledge available in India and abroad will suggest measures to improve the existing industries, to start new industries and to promote research and adaptation of technology. This Centre will include scientists and technologists. With the aid of this Institution, Government hopes to open new vistas of Industrial development in the State.

15. Government has decided to convert the teachers of panchayat unions as Government servants. Necessary steps are being taken to implement this policy decision of the Government.

16. In this Session, a Bill will be brought before the House to reduce the age for voting to 18 in local body elections as mentioned in my last address. On this basis new list of voters will be prepared and elections to all panchayats, municipalities and the corporation will be held within six months.

17. Members may be aware of the various steps that have been taken by the Government to promote the welfare of scheduled castes and scheduled tribes. Government will prepare and implement a special five-year plan for the welfare of the harijans.

18. In this Joint Session, many legislative measures will be brought before the House for the benefit of the workers in the organised sector. A legislation to provide for many benefits to thousand of workers in the unorganised sector also will be placed for the approval of the House: I am sure the House will extend its utmost co-operation and stand by the Government in these efforts.

19. I have briefly touched a few of the policies of my Government. I am confident that the Honourable Members and the Government whichi s dynamic in the service of ever vigilant public will strive hard to alleviate the distress of the poor and raise the level of living of the downtrodden. This House has established glorious traditions in its own unique way. I am confident you will embellish them further.

20. This is the first session after the elections; let bitter incidents, if any, be forgotten! Let there be more light than heat in your arguments! Let your debates safeguard and sustain Democracy! Let your ability help eradicate poverty! It is my fervent wish that you all must function as beacons of light in the service of the public who have placed immense trust in you. I wish you all success in your endeavours!



## இணைப்பு II

[106 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மேன்மை பொருந்திய சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களே,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடைப் பொதுத் தேர்தலில் மக்களின் பெருமதிப்பையும், போதரவையும் பெற்று வெற்றி வாகை சூடி வந்துள்ள பேரவை உறுப்பினர்களை, வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2. ஜனநாயகப் பரிசோதனையில் மீண்டும் தமிழக வாக்காளப் பெருமக்கள், குழப்பம் எதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல், தைரியத்தோடு இம்மாநிலப் பேரவைக்குத் தெளிவான தீர்ப்பை வழங்கியதிலிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று எண்ணி வியக்கிறேன். நேர்மையான முறையில் அமைதியான வகையில் தேர்தல் நடை பெற்றதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மைக்கும், தர்மத்திற்கும், நேர்மைக்கும் தமிழக மக்கள், இந்திய துணைக் கண்டத்திற்கே அளித்துள்ள பரிசுதான் இந்த ஏழாவது தமிழகச் சட்டப் பேரவையாகும். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் எதிரொலியாக, இரண்டரை ஆண்டு காலத்திலேயே ஆறாவது சட்டப் பேரவையைக் கலைத்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்று ளாருங்கள் என்றதை ஏற்று, புதிய பொலிவோடு வீற்றுள்ள நண்பர்களைக் காணப் பெருமைப்படுகிறேன்.

3. உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து முடித்து விட்டார்கள். இனி உங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பீர்கள் என்று நம்புகிறேன். மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை உங்கள்பால் வைத்துள்ளார்கள். இதை நான் உணர்வது போல் நீங்களும் உணர்வீர்கள் என்று கருதுகிறேன்.

4. அமைந்துள்ள என் அரசு, அமரர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற ஆர்வம் பூண்டுள்ளது. நேர்மைக்கும் நாணயத்துக்கும் சிறப்பான பெயர் பெற்றுள்ள என் அரசு, அதை உறுதிப்படுத்தும் வகையில் தூய்மையைப் பொது வாழ்விலும் நிர்வாகத்திலும் என்றும் நிலை நாட்டும் என்று அனைவரும் திடமாக நம்பலாம். அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருமொழிக் கொள்கையைத் தொடர்ந்து இந்த அரசு உறுதியுடன் கடைப்பிடிக்கும். தனித் தன்மையை எல்லாத் துறையிலும் தன் முத்திரையாகக் காட்டிவரும் தமிழகம், பாரதத்தின் ஒற்றுமையில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

5. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்றி வைக்க, தன்னாலான எல்லாவற்றையும் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட "வேலைக்கு உணவுத்" திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். ஏற்கனவே இருந்த இதே அரசு அறிவித்த பல திட்டங்கள் இடைக்காலத்தில் அமுலாக்கப்படவில்லை. அவைகளுள் ஒன்றான வேலையற்ற பட்டதாரிகளுக்கான உதவித் தொகைத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

6. தமிழ் நாட்டில் அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக உணவுத் தட்டுப்பாடு ஏதுமின்றி உணவு நிலைமை சரியாக இருந்து வருகிறது. மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட உயர்ந்த விலையில் குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் கொடுத்து, அரசு சார்பில் நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லை நேரடிக் கொள்முதல் நடத்தி வந்துள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவருவதற்கும், அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கும் வகை செய்யும் முறையில் விவசாய அமைச்சர் தலைமையில், விவசாயிகளது பிரதிநிதிகள், வல்லுநர்கள் கொண்ட விவசாயிகளது நலக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி மாவட்டங்களிலும் இத்தகைய விவசாயிகள் நலக் குழுக்கள் அமைக்கப்படும்.

7. விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி, அதிலும் குறிப்பாக சிறு விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி எனது அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. உயர்ந்து வரும் உற்பத்திச் செலவுகள், விளைபொருள்களுக்கான நியாயமான விலைகள், நிர்ணயித்தல் போன்ற விவசாயிகளின் பிரச்னைகளைப்பற்றி அரசு நன்கு அறிந்துள்ளது ; மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களது பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காணுவதில் எனது அரசு முழு முயற்சியுடன் ஈடுபடும். சிறு விவசாயிகள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான முறைகளை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. அத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டு, வருங்காலத்தில் அவர்களுக்கு இத்தகைய சிக்கல்கள் மீண்டும் ஏற்படா வண்ணம் நிதி வழங்கும் முறைகள், தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள். நிதித் தேவை மிகுந்துள்ள இதனை, மாநில அரசு செயல்படுத்த மத்திய அரசின் உதவி இன்றியமையாததாகும். மாநில அரசு இது பற்றி வைத்துள்ள நியாயமான வேண்டுகோளுக்கு மத்திய அரசு முழுப் பரிவுடன் உதவி செய்ய முன்வரும் என்று நம்புகிறேன்.





8. வேளாண்மை விளைபொருட்களை விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விரிவுபடுத்தும் திட்டமொன்றையும் அரசு தீட்டியுள்ளது ; உலக வங்கி உதவி பெறுவதற்காக அரசு அதனை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்தகைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிர்வகிக்கும் மாவட்ட விற்பனைக் குழுக்களைச் சீரமைப்பதற்கான சட்ட வரைவு இந்தக் கூட்டத் தொடரில் அவைமுன் கொண்டுவரப்படும். திருத்தப்பட்ட சட்ட அடிப்படையில், விரைவில் இந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

9. கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைப்பதற்கான சட்டத் திருத்தங்கள் செய்வதற்கு, அரசு, சட்ட வரைவு ஒன்றை சென்ற சட்ட மன்றக் கூட்டத் தொடரில் மன்றத்தின்முன் வைத்தது. அது கூட்டுக் குழுவின் ஆய்வில் இருந்தபொழுது சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. அரசு மீண்டும் அந்தச் சட்ட வரைவினை சட்ட மன்றத்தில் கொணர்ந்து அதனைச் சட்டமாக்குவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல்கள் விரைவில் நடத்த முடிவு செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

10. அண்டை மாநிலங்களுடன் சுமுகமான முறையில் கலந்து பேசி பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் இந்த அரசு என்றுமே நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருகின்றது. உபரியாகவுள்ள மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்வதிலும் ஆற்று நீரைப் பயன்படுத்திக்கொள்வதிலும் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி, இணக்கமான முடிவுகளைக் காண முடியுமென்று நம்புகின்றது. இருந்து வரும் நதி நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ளுமென்று குறிப்பிட விரும்புகின்றேன். காவிரி நீர் பங்கீடு பற்றிய பேச்சு வார்த்தைகள் மீண்டும் துவங்கப்படும். தமிழகத்துக்குப் பாதகம் இல்லாமல் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த அரசும், கேரள அரசும் செய்து கொண்டுள்ள "மின்சாரம்-அலுமினியம்" எனும் பண்டமாற்று ஒப்பந்தத்தை நிறைவேற்ற மைய அரசு உதவிட வேண்டுமென்று கோருகிறேன்.

11. வேலை வாய்ப்புகளைத் தருவதில் வேளாண்மைக்கு அடுத்த முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள கைத்தறித் துறை மேம்பாட்டிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மூலதனமாகச் சென்ற மூன்று ஆண்டுகளில் 5.77 கோடி ரூபாய் அரசு அளித்துள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 17 கோடி ரூபாயாக இருந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை அளவு, 1979-80 ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாயாக கணக்கிடப்பட்டுள்ளது. பல்வேறு கூட்டுறவு கைத்தறிச்

சங்கங்களில் தற்போது தேங்கி இருக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வாங்குவதற்காக வழிவகை முன்பணமாக 5 கோடி ரூபாய் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் 1975 ஆம் ஆண்டு இறுதியில் 2.07 இலட்சம் கதிர்களுடன் இயங்கி, மாதம் ஒன்றுக்கு 4,000 பேல் நூல் உற்பத்தி செய்து வந்தன. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, 1979 ஆம் ஆண்டு இறுதியில் 3.14 இலட்சம் கதிர்களுடன் 7,000 பேல் உற்பத்தி செய்யும் திறனை அடைந்து எல்லாக் கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் கிடைக்கும் அளவிற்கு இவை மூலம் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நெசவாளர்களுக்கு நியாய விலையில் உரிய நேரத்தில் நூல் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், அரசு தொடர்ந்து மேலும் முனைப்பாக மேற்கொள்ளும்.

12. 1969 ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த முதலீடான 3,463 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 262 கோடி ரூபாயாக, அதாவது சுமார் 8 சதவீதமாக இருந்தது. 1979 ஆம் நிதி ஆண்டு முடிவு வரையிலான மொத்த முதலீடான 15,668 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 616 கோடி ரூபாயாக அதாவது நான்கு சதவீதமாகக் குறைந்துவிட்டது. வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களின் சதவிகிதம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அதிகமான அளவில் இருந்து வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். மத்திய அரசு இவ்வாறு தமிழ் நாட்டில் பெருந் தொழில்களைத் தொடங்காததன் விளைவாகவும் புதிய பெருந் தொழில்களுக்கு அனுமதி அளிக்கத் தாமதிப்பதன் காரணமாகவும் வேலையற்றோர் எண்ணிக்கையும் தமிழ் நாட்டில் மிக அதிகமான நிலையிலே இருந்து வருகின்றது. இவற்றைத் தீர்ப்பதற்காக மாநில அரசு தனது பொறுப்பிலுள்ள வேளாண்மை, சிறு தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், சிறு தொழில்களுக்கு உறுதுணையாக அமையும் முறையிலும், மத்திய அரசு பெரிய தொழில்களை நிறுவுவதன் மூலம் தமிழ் நாட்டில் தனது முதலீடுகளை விரைந்து அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். மொத்த முதலீட்டின் 4 சதவீதமாகக் குன்றிய நிலையிலுள்ள இந்தக் குறைபாட்டைக் களையும் வகையிலும் மத்திய அரசு செய்யும் முதலீடுகள் அமைய வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

13. கோவை நகரிலும் திருச்சியிலும் புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவ இந்த அரசு எல்லா முயற்சிகளும் எடுத்து வந்துள்ளதை இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இவற்றை நிறுவுவதற்கு பல்கலைக் கழக



ஆணைக் குழுவின் ஒப்புதலை அரசு பெற்றுள்ளது. இந்த இரண்டு பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கான சட்டவரைவு இந்த மன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டுவரப்படும்; வெகு விரைவில் இந்த இரு பல்கலைக் கழகங்கள் செயல் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதன் விளைவாக, பட்டப் படிப்பு, உயர்மட்டக் கல்வி ஆகியவற்றின் தரம் மேம்பாடு அடைவதுடன், பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளும் விரைவு படுத்தப்படும் என்று நம்புகிறேன். சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தைச் சீரமைப்பதற்காகச் சட்டவரைவு ஒன்றும் இந்த மன்றத்தின் முன் கொண்டுவரப்படும். காரைக்குடியில் உள்ள கல்விக் கூடங்களை இணைத்து பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். மேலும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் உவகையுடன் வரவேற்பர் என நம்புகிறேன்.

14. வளர்ந்து வரும் அறிவியல் ஆய்வுகளின் துணைகொண்டு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், நடைபெற்றுவரும் தொழில்களைச் செம்மைப்படுத்துவதற்கும், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் தக்க ஆய்வுகள் நடைபெறுவதற்கும், பல்வேறு நாடுகளில் தொடரப்பட்டுள்ள ஆய்வு நிலையம் (Centre for Appropriate technology) ஒன்றைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. தொழில் வல்லுநர்கள், அறிவியல் விற்பன்னர்கள் போன்றோர் அடங்கிய அமைப்பாக இதனை உருவாக்கித் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் புதுமையான செயல்முறைகளை உருவாக்குவதற்கு அரசு ஊக்கமளிக்கும்.

15. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதைச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

16. சென்ற எனது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, 18 வயது வந்தோர் அனைவரும் உள்ளாட்சி நிறுவனத் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் இந்தக் கூட்டத் தொடரில் அவையின் முன் கொண்டு வரப்படும். இதனையொட்டி புதிய வாக்காளர் பட்டியல்கள் தயாரித்து, அவற்றின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் எல்லா ஊராட்சி நிறுவனங்களுக்கும் நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

[1980 ஜூன் 26

17. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசு விரைவில் செயல்படுத்தும்.

18. முறைப்படுத்தப்பட்ட தொழில்களில் (Organised Sector) பணி புரியும் தொழிலாளர் மேம்பாட்டுக்காக பல்வேறு சட்ட வரைவுகள் இந்த அவையின் ஒப்புதலுக்காக, வரும் கூட்டத் தொடரில் வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு இடங்களில், முறைப்படுத்தப்படாத தொழில்களில் (Unorganised Sector) வேலை செய்துவரும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு. உரிமைகளுக்கு உரிமைகள் பலவற்றைச் செய்து கொடுப்பதற்கான சட்டம் ஒன்றும் அவை முன் ஒப்புதலுக்காகக் கொண்டு வரப்படும். இந்த முயற்சிகளுக்கு அவை தனது ஒத்துழைப்பை நல்கி உறுதுணையாகச் செயல்படுமென்று நம்புகின்றேன்.

19. என் அரசின் கொள்கைகள் ஒரு சிலவற்றை மட்டுமே நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன். விழிப்போடுள்ள மக்களுக்குத் துடிப்போடு செயலாற்றும் அரசும், மன்ற உறுப்பினர்களும், வறியோரின் துயர் துடைக்கவும், எளியோரின் வாழ்வு உயரவும் பாடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இம் மன்றம் தனக்கே உரித்தான சிறப்புகளை உருவாக்கி நல்ல மரபுகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது. அவைகளுக்கு மேலும் சிறப்புகளைச் சேர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

20. தேர்தல் களம் முடிந்து கூடுகின்ற முதல் கூட்டம் இது; கசப்பான நிகழ்ச்சிகள் ஏதேனும் இருந்திருக்குமாயின் மறந்திடுங்கள் வாள் போன்ற கூர்மையான வார்த்தைகளைவிட வைரம் போன்ற ஒளி வீசும் வாதங்களே சிறந்தவையாகும்; மக்களாட்சி முறைக்கு அரண்களாக, உங்கள் வாதங்கள் இருக்கட்டும். உங்கள் திறமை நாட்டின் வறுமையை விரட்ட உதவட்டும். உங்களை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு ஒளி விளக்காக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும் என்ற என் தணியாத ஆவலைத் தெரிவித்துக் கொண்டு, உங்களனைவரையும் வாழ்த்தி, என் உரையை முடிக்கின்றேன்.

83419

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company 20. Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1. Old Post Office Road, Coimbatore-18
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajentha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghaleyam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.